தர்மசக்கரம்

















ரக்தாக்ஷி ௵ கார்த்திகை ௴ சக்கரம் 33 ஆரர் 11

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

பொருளாதாரத் துறையில் எந்நிலையில் உள்ளவர்களுக்கும் தர்ம சக்கரம் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் சகாய சந்தா, சாதாரண சந்தா, டிபாசிட் சந்தா, சர்க்கார் நூல் நிலையங்களுக்கு இலவசமாக அனுப்புதல் ஆகிய முறைகளை நடைமுறையில் வைத்துள்ளோம்.

இன்றைக்குச் சமுதாயத்தில் மக்களுக்கு மனதைத் திருத்தி அமைக்கும் கருத்துக்கள் வழங்கப்படுவது அவசியமாகிறது. மக்கள் மனதிலுள்ள நல்லுணர்வுகளைத் தூண்டி விடவும், மக்களைப் பக்தி வழியில் நடாத்திச் செல்வதற்கும் தர்ம சக்கரம் மக்களில் பல பேருக்குக் கிடைக்க வேண்டும் என்று கருதுகிறோம். தர்ம சக்ர சந்தாதாரர்களின் எண்ணிக்கை அதிகமாகின்றவளவும், தர்ம சக்கரத்தைப் படிக்கின்றவர்களுடைய தொகை அதிகரிக்கின்றவளவும் மக்கள் மனதில் நல்ல திருப்பம் உண்டாகும்.

தர்மசக்கரம் சந்தாதாரர்கள் புதிய சந்தாதாரர்களைச் சேர்ப்பதற்கும், ஆண்டுச் சந்தா முடிவுறும் சந்தாதாரர்களை மீண்டும் புதுப்பிப்பதற்கும் முயல்வார்களானால் அது ஒரு சிறந்த ஞான யக்ஞ கைங்கர்யமாகும். புதிய சந்தாதாரர்களை அறிமுகப் படுத்தி அவர்களையும் சந்தாதாரர்களாகப் பதிவு செய்து கொண்டால் தொடர்ந்து இதழ்களைப் பெற வசதியாக இருக்கும்.

தர்ம சக்கரம் சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் குறைந்த பக்ஷம் மூன்று புதிய சந்தாதாரர்களையாவது தர்ம சக்கரத்துக்குச் சேர்த்துத் தருவது என்று உறுதி செய்து கொண்டு செயல்படுவார்களானால் தர்ம சக்கர சந்தாதாரர்களின் எண்ணிக்கை மிக சுலபமாக உயர்ந்து விடும். எவ்வளவுக்கெவ்வளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்க்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு ஆன்மீகத் துறையில் நீங்கள் நற்பணி செய்தவர்களாகிறீர்கள். சந்தாதாரர்களின் விலாசங்களை எழுதி சந்தா தொகையையும் அனுப்பிவைத்தால் அவர்களைச் சந்தாதாரர்களாகப் பதிவு செய்துகொண்டு மாதா மாதம் முறையாக அவர்களுக்குத் தர்ம சக்கரம் அனுப்பி வைக்கப்படும். தர்ம சக்கரம் சந்தா சேர்க்கும் பணியில் அதிக ஊக்கம் காட்டுமாறு சந்தாதாரர்கள் வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

தர்ம சக்கரத்தில் வரும் விஷயங்கள் நிரந்தரமான தத்துவ ஆராய்ச்சிகளாக இருக்கின்றன. எப்பொழுது வேண்டுமென்றாலும் திரும்பவும் வாசிக்கக்கூடிய ஒரு நூலாக இது அமைந்துள்ளது. ஆகவே சந்தாதாரர்கள் ஓர் ஆண்டின் பன்னிரண்டு தர்ம சக்கரம் இதழ்களையும் பொருளடக்கத்துடன் பைண்டு செய்து வைத்துக்கொண்டால் அது நல்லதொரு புத்தகமாக அமையும். நாம் படிப்பதற்கும், மற்றவர்களுக்குப் படிக்கத் தருவதற்கும் பைண்டு செய்த நூல் நன்கு பயன்படும். விரைவில் உங்கள் புதிய சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தக் கோருகின்றோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115

திருச்சி ஜில்லா

தர்ம சக்கரம்
மாத சஞ்சிகை

ACC. NO. 38682

சக்கரம் 33	ரக்தாக்ஷி ஹூ கார்த்திகை மீ	ஆரம் 11

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகைவேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூற்றைம்பதையும் திருப்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 15 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினைந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி' யினின்று ஈடு செய்துகொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தவேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. **1-50** வெளிநாடு தனி இதழ் ரூ. **4-00**

உள்நாடு வருட சந்தா: ரூ. 15-00 வெளிநாடு வருட சந்தா: ரூ. 45-00

அந்தர்யோக விவரங்கள்

மதுரை ஜில்லா—கள்ளிக்குடியில் 25—11—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: வடக்கன்பட்டி காந்தி மஹாலில்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 2—12—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: பகல் உணவிற்கு ரூ. 2-00 மாலைச் சிற்றுண்டிக்கு ரூ. 1-00 நேரில் செலுத்தவும்.

கன்னியாகுமரியில் 2—12—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ பகவதி அம்மன் கோவில் பிரகாரத்தில் நிகழ்ச்சி நடைபெறும்.
நேரம்: முற்பகல் நிகழ்ச்சி காலை 10-00 மணிமுதல் 12-30 மணிவரை
இடம்: விவேகானந்த நினைவுப்பாறையில் நிகழ்ச்சி நடைபெறும்.
நேரம்: பிற்பகல்: 2-30 மணிமுதல் 4-30 மணிவரை
நேரம்: மாலை 5-00 மணிக்குக் கடற்கரையில் அமைந்துள்ள விவேகானந்தர் கோவிலின் முன் ஐக்கிய வணக்கமும், புஷ்பாஞ்சலியும் நடைபெறும்.
உணவு வசதி: பகல் உணவுக்கு அவரவர்களே ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும்.
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—சிவகளையில் 2—12—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: இந்து நடுநிலைப் பள்ளி, சிவகளை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

மதுரை ஜில்லா—கள்ளிக்குடியில் 16—12—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: வடக்கன்பட்டி காந்தி மஹாலில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

பெரியார் ஜில்லா—அம்மாப்பேட்டையில் 17—12—84 திங்கட்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஞானயோக தபோவனம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும், தாய்மார்களும் அந்தர்யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 33 || ரக்தாக்ஷி ஹு கார்த்திகை மீ || ஆரம் 11

பிரார்த்தனை

नान्या स्पृहा रघुपते हृदयेऽस्मदीये सत्यं वदामि च भवानखिलान्तरात्मा ।
भक्तिं प्रयच्छ रघुपुङ्गव निर्भरां मे कामादिदोषरहितं कुरु मानसं च ॥

— तुलसीदास

நான்யா ஸ்ப்ருஹா ரகுபதே ஹ்ருதயேऽஸ்மதீயே
ஸத்யம் வதாமி ச பவான் அகிலாந்தராத்மா ।
பக்திம் ப்ரயச்ச ரகுபுங்கவ, நிர்பராம் மே
காமாதி தோஷரஹிதம் குரு மானஸம் ச ॥

— *துளசிதாசர்*

ரகுகுல திலகா, உன்னிடம் உண்மையொன்று சொல்லுகிறேன். எல்லாரிடத்திலும் அறியப்படுபொருளாகிய நீ இருக்கிறாய். ஆகவே என்னிடத்தில் மற்ற உலக ஆசைகள் இல்லை. எனக்கு ஆழ்ந்த பக்தியைத் தா. ரகுகுல நாயகனே, என் மனத்திலிருந்து காம எண்ணங்கள் போன்ற கீழ்த்தரமான எண்ணங்களை அகற்றிவிடு.

அருள்தா னினியான் அறியேன் அவன் என்னுள்
இருள்தா னற வீற் றிருந்தான் இதுவல்லால்
பொருள்தா னெனின்மூ வுலகும் பொருளல்ல
மருள்தா னீதோ? மாய மயக்கு மயக்கே.

— நம்மாழ்வார்.

அருள் விருந்து

நேர்மை, நல்வழிக்கு உற்ற உபாயம்.

நலனும் கேடும் சேர்ந்திருக்க மாட்டா.

மௌனம் பல கேடுகளைத் தவிர்க்கவல்லது.

தத்துவத்தினின்று பிசகும் கோட்பாடு மதமாகாது.

இரக்கங்காட்டுவது இளகிய மனப்பான்மையாகும்.

நலத்துக்காகப் போராடுவதில் மகிழ்வு நிறைந்துள்ளது.

துணிச்சலும் நன்னெறியும் இணைபிரியாதிருத்தல் வேண்டும்.

உடைமை மனிதனுடைய தனி நலனுக்காக அமைந்தது அன்று.

மனத்தூய்மை உடையவனுக்கு அருள்நிலை தானாக வந்தமைகிறது.

பரம்பொருள் மனிதனுக்குச் சொந்தமாயிருப்பது அவருடைய அருள்.

எண்ணத்துக்கும் செயலுக்குமிடையில் முரண்பாடு இருக்கலாகாது.

தன் கொள்கையே நல்லதென்று விவாதிப்பது ஒருவித அகங்காரமாகும்.

கொடைக்காகக் கொடையாளியை நேசிப்பது உண்மையான நேசமாகாது.

நலம் செய்யத் தயங்குகின்றவன் கேட்டில் ஊக்கம் உடையவனாக இருக்கிறான்.

புகழ்ச்சியில் மகிழ்வுறுவதும் இகழ்ச்சியை நிராகரிப்பதும் அகங்காரத்தின் இயல்பாகும்.

உடலைத் தான் எனக் கருதுவது பொய்மை. சொரூபத்தைத் தான் எனக் கருதுவது மெய்ம்மை.

மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களை யாண்டும் சுத்தமாக வைத்திருப்பது பிரம்மச்சரியம்.

பறவைகள் தங்கள் கால்களால் வலையில் சிக்குகின்றன. மனிதன் தன் வார்த்தைகளால் சிக்கிக் கொள்கிறான்.

செல்வத்தை இழந்தால் ஒரு நஷ்டமும் இல்லை. ஆரோக்கியத்தை இழந்தால் சொற்ப நஷ்டமாகும். நன்னடத்தையை இழந்தால் எல்லாம் நஷ்டம்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

துவிஜன் என்னும் இளைஞன் ஒருவன் பரமஹம்சதேவரிடம் இடையிடையே வந்துகொண்டிருந்தான். அவனுக்கு வயது சுமார் பதினறு இருக்கும். பரமஹம்சதேவர் அவனிடம் பேரன்பு பூண்டிருந்தார். அந்த இளைஞனுடைய தந்தையார் இரண்டாம் தடவை மணம்புரிந்திருந்தார். இந்தத் துவிஜன் மகேந்திரநாதருடன் கூடித் தக்ஷிணேசுவரத்துக்கு வருவது வழக்கம். அப்படி அவன் வந்துகொண்டிருந்ததை அவனுடைய தந்தை ஆமோதிக்கவில்லை.

பரமஹம்சதேவர் துவிஜனிடம் வினவுவாராயினர்: "நீ இங்கு வந்துகொண்டிருப்பது உன் தந்தைக்குப் பிடிக்கவில்லை. மற்று உன் சகோதரர்களுடைய மனப்பான்மை எத்தகையது? நீ இங்கு வருவதற்கு அவர்களும் தடை பண்ணுகின்றார்களா?" அந்த இளைஞனுக்கு என்ன விடை தருவது என்று விளங்கவில்லை. திகைத்துப் போய் அவன் வெறுமனே நின்றுகொண்டிருந்தான். மகேந்திரர் பரமஹம்சரிடம் தெரிவித்ததாவது: "மக்களில் சிலர் தங்களைப்பற்றி ஏளனமாகப் பேசுகின்றனர். அருள்நாட்டம் பிடித்துள்ள இளைஞர்கள் இங்கு வந்துகொண்டிருப்பதையும் அவர்கள் ஆமோதிப்பதில்லை. உலக வியவஹாரங்களில் மட்டும் ஈடுபட்டுள்ள அன்னவர்களுக்கு இயற்கையினின்று இன்னல்களும், உபத்திரவங்களும் சில வந்து அமையும். அதன் பின்பே இளைஞர்கள் இங்கு வருவதன் உட்பொருளும் உண்மையில் அவ்விளைஞர் தாம் பாக்கியவான்கள் என்பதும் அவர்களுக்கு விளங்கும்."

பரமஹம்சதேவர்: "இந்த இளைஞனுடைய சகோதரர்கள் தங்களுடைய மாற்றாந்தாயின் பராமரிப்பில் வளர்ந்து வருகிறார்கள். அந்த அளவில் அவர்களுக்கு இன்னல்களும், இடைஞ்சல்களும் வடிவெடுக்க ஆரம்பித்து விட்டன.

இந்தத் துவிஜனை சந்தர்ப்பம் வாய்க்கிறபொழுது பூர்ணனுக்கு அறிமுகப்படுத்தி வைப்பாயாக."

மகேந்திரர்: "ஆம் ஐயனே, அங்ஙனமே செய்கிறேன்." பிறகு துவிஜனிடம் அவர் பகர்ந்ததாவது: "நீ பானிஹட்டிக்கு வசதியுண்டாகும்பொழுது போவாயாக."

பரமஹம்சதேவர்: "இங்கு வரும் பக்தர்களனைவருக்கும் பானிஹட்டிக்குப் போய்வரும்படி நான் உற்சாகம் ஊட்டுகிறேன். நீயும் ஒரு தடவை அங்கே போவாயாக. அதைப் பற்றி என்ன சொல்லுகிறாய்?"

பானிஹட்டியில் நிகழ்ந்து வந்த விழாக்களில் பரமஹம்சர் இடையிடையே கலந்துகொள்ளுவதுண்டு. ஆகையினால் தான் அங்குப் போகும்படி பக்தர்களை அவர் உற்சாகப்படுத்தினர்.

மகேந்திரர்: "ஆம் ஐயனே பானிஹட்டிக்கு நானும் போய்வர விரும்புகிறேன்."

பரமஹம்சதேவர்: "பானிஹட்டிக்குப் போவதற்குப் பெரிய படகு ஒன்றை நாம் வாடகைக்கு அமர்த்துவோம். படகு பெரியதாய் இருந்தால் அதன் ஆட்டம் குறைந்திருக்கும். நாம் எல்லாரும் அங்கே போகும்பொழுது கிரீஷ் சந்திரகோஷரும் அங்கு வந்து சேரக்கூடும்" என்றார்.

பிறகு துவிஜனைக் கூர்ந்து பார்த்தார் பரமஹம்சதேவர். "கல்கத்தாவில் இளைஞர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களுக்கிடையில் இந்த இளைஞனுக்கு மட்டும் இங்கு வரவேண்டுமென்கிற நாட்டம் வந்தது ஏன்? அதைப்பற்றி நீ நினைப்பது யாது?" என்று அவர் மகேந்திரரைக் கேட்டார். நிச்சயமாக இந்த இளைஞனிடம் பூர்வ ஜன்மாந்திர வாசனைகள் நல்லவைகள் சில இருக்கின்றன என்றே அவர் கருதினர்.

மகேந்திரர்: "ஐயனே தாங்கள் பகருவது முற்றிலும் உண்மை."

பரமஹம்சதேவர்: "ஜன்மாந்திர வாசனை என்பது மனிதனுக்கு உண்டு. பூர்வ ஜன்மங்களில் புரிந்த நல்வினைப் பயனாக அவன் கடைசி ஜன்மத்தில் கள்ளம் கபடமற்றவனாகத் திருந்தியமைகிறான். மேலும் அவனுடைய

கடைசிப் பிறவியில் உலக நாட்டம் ஏதும் அவனுக்கு உண்டாவதில்லை. உலகத்தவர் காட்சியில் அவன் ஏதோ பைத்தியக்காரன் போன்று தென்படுகின்றான்.''

"உண்மை யாது என்றால் நிகழ்வன அனைத்தும் இறைவனுடைய திட்டத்தாலேயே நடைபெறுகின்றன. இறைவன் எது நிகழ வேண்டுமென்று எண்ணுகின்றாரோ அது தானாகவே வடிவெடுக்கிறது. ஆனால் இறைவனுடைய சித்தத்திற்கு மாறுபட்டுள்ள ஏதும் நிகழ்வதில்லை. மனிதன் எவ்வளவுதான் முயன்றாலும் சர்வேசுவரனுடைய திட்டத்துக்கு முரண்பட்டிருக்கின்ற அனைத்தும் அசைவற்றுக் கிடக்கின்றன.''

"சில நாட்களுக்கு முன்பு நேப்பாள் ராஜ்யத்தின் பிரதிநிதியாகக் கல்கத்தாவில் அலுவல் பார்த்து வந்த சேனாபதி விசுவநாதர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். போகும் வழியில் இளைஞர்கள் சிலர் பாதையில் நடந்து வந்ததைப் பார்த்தேன். அவர்கள் அலாதியான மனப்பான்மை படைத்தவர்களாகத் தென்பட்டார்கள். அவர்களில் ஒருவனுக்கு வயது சுமார் இருபது இருக்கும். அவன் தன்தலைமுடியை நேர்த்தியாகச் சீவியிருந்தான். உலக வாழ்க்கையை அசட்டை பண்ணுகிற பாங்கில் அவன் சீட்டியடித்துக்கொண்டு சென்றான். மக்களுள் சிலர் ஆழ்ந்த தமோகுணத்தில் மூழ்கியவர்களாகயிருக்கிறார்கள். பிரபஞ்ச வாழ்வு என்னும் புல்லாங்குழலை அவர்கள் தங்கள் போக்கில் வாசிக்கிறார்கள். தாங்கள் வாழ்ந்து வரும் பிரபஞ்சவாழ்வுக்கு நிகரானது வேறு யாது உளது என்னும் பான்மையில் ஊறியவர்களாக அன்னவர்கள் இருக்கிறார்கள்.''

பரமஹம்சர் தொடர்ந்து பேசுவாராயினர்: "விவேகம் படைத்துள்ள மானுடன் ஒருவன் உண்மையை முழுமனதோடு வரவேற்கிறான். வாழ்க்கை சம்பந்தமான கோட்பாடுகளைத் துருவி ஆராய்தலில் அவன் ஆர்வம் மிகப் படைத்திருக்கிறான். உண்மையைப் பின்பற்றுகிறவனுக்கு அச்சம் சிறிதேனும் இல்லை. சத்திய சீலன் ஒருவனைக் குறித்துச் செய்யும் ஆராய்ச்சிகளை அவன் முழுமனதோடு வரவேற்கிறான். ஊக்கத்தோடு அவனும் தன்னைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுகிறான். கொல்லனிடம் இருக்கும் பட்டறை எதற்கும் அசைவதில்லை. காய்ச்சிய இரும்பை அதன்மீது வைத்துச் சுத்தியாலோ, சம்மட்டியாலோ வேண்டியவாறு அடிக்கலாம். அப்படி அடிப்பதை முன்னிட்டுப் பட்டறை இம்மியளவும் அசைவதில்லை. நல்லறிவு படைத்துள்ளவனுடைய விவேகம் அத்தகையது. எந்தக் கோணத்திலிருந்து சத்திய சீலன் ஒருவனுடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தாலும் அவன் அதற்குத் தயங்கான். சத்தியத்தின் வலிவு கொல்லனுடைய பட்டறைக்கு நிகரானது.''

"நான் அறிந்துள்ள பிள்ளையாண்டான் ஒருவனுடைய தந்தை வீதியில் நடந்து போய்க்கொண்டிருந்தார். அவர் உறுதிப்பாடே வடிவெடுத்தவராகத் தென்பட்டார்'' என்ற பரமஹம்சதேவரின் கூற்றை அனுசரித்து மகேந்திரரும் "அவர் கள்ளங்கபடமற்றவர்" என்று இயம்பினர்.

சேனைத்தலைவர் விஸ்வநாதருடைய இல்லத்துக்குத் தாம் எழுந்தருளிய வரலாற்றைப் பரமஹம்சதேவர் பக்தர்களுக்கு எடுத்து இயம்பலாயினர். தாம் வழியில் சந்தித்த இளைஞர்களின் பாங்கு பொருளற்றது என்று அவர்களை ஏளனம் பண்ணும் பாங்கில் சேனாதிபதி இயம்பினர். ஒரு வேளை தக்ஷிணேசுவரத்தில் வசித்து வந்த ஹாஸ்ரா என்பார் அவருக்கு இக்கருத்தைத் தெரிவித்து இருக்கலாம்.

சேனாபதியுடன் நான் உரையாடிக்கொண்டிருந்தேன். ''புருஷன் பிரகிருதியைத் தவிர பொருள் ஏதும் இல்லவேயில்லை என்று நான் அவருக்கு எடுத்து உரைத்தேன். இக்கருத்தை அனுசரித்து நாரத மகரிஷி ஸ்ரீ ராமனிடம் இவ்வாறு இயம்பினர்: ''உலகெங்கும் காணப்படும் ஆண்பாலர் அனைவரும் ஓ, ராமா, உன்னுடைய சொருபங்களாம். அதே விதத்தில் பெண்பாலர் யாவரும் சீதா பிராட்டியின் சொருபங்கள் ஆவார்கள்."

இக்கூற்றைக் கேட்ட சேனாபதி குதூகலமடைந்தார். ''பொருளை உள்ளது உள்ளபடி காண்கின்ற ஆத்ம பரிபாகம் தங்களுக்கே உரியதாகும். ஆடவர் அனைவரும் உண்மையில் ஸ்ரீராமனுடைய சொருபங்கள் ஆவார்கள். அதில் சிறிதேனும் ஐயமில்லை. அதே விதத்தில் மகளிரனைவரும் சீதாதேவியின் அம்

சங்கள் ஆவார்கள். அதைக் குறித்தும் ஐயம் கொள்வதற்கு ஏதுமில்லை'' என்றார்.

அதன் பிறகு சேனாபதி விஸ்வநாதர் இக் காலத்திய இளைஞர்களைப்பற்றித் தமது அபிப் பிராயத்தைத் தெரிவித்தார். ''நவீன முறையில் அவர்கள் ஆங்கிலம் கற்கிறார்கள். அதன் விளைவாக அவர்கள் உணவு ஏற்கும் நியதி யைப்பற்றிய கோட்பாடுகளனைத்தையும் அறவே மறந்துவிட்டனர். அவர்கள் தங்களைத் தரிசித்தல் பொருட்டு அடிக்கடி வருவதும் பொருத்தமற்றதாகும். ஒருவேளை அதை முன் னிட்டுத் தாங்களே தங்கள் பவித்திரத்தை இழக்கும்படி நேரிடலாம். இவ்விஷயத்தில் ஹாஸ்ரா என்னும் பெரியார் மிக எச்சரிக்கை யாய் இருக்கிறார். அவர் போக்கினை நான் முற்றிலும் ஆதரிக்கிறேன். மேன்மைக்கு அவர் இருப்பிடம் ஆகிறார். எனவே நவீன போக் கில் போகும் இந்த இளைஞர்கள் தங்களி டம் வருவதற்கு அதிகம் இடம் தரவேண்டாம்.''

அதற்குப் பரமஹம்சர் கொடுத்த விடையாவது: ''என்னை நாடி வருகிறவர்களை நான் எப்படிப் புறக்கணிக்க முடியும்? இப்படிச் சொல்லிய பிறகு நான் அச்சேனாபதிக்கும் ஹாஸ்ராவுக்கும் பொருத்தமான சுடுசொற்கள் சிலவற்றை வழங்கவேண்டியதாயிற்று. நான் இயம்பிய தாவது: கடவுளுக்கும் உலகப்பற்று வைத்தி ருப்பவர்களுக்கும் வெகுதூரம். ஆனால் உலகப் பற்று அற்றிருக்கிறவர்களுக்கும் கடவுளுக்கும் நெருங்கிய தொடர்வு உண்டு. அன்னவர் களுக்கு மிக அண்மையில் இறைவன் இருக் கிறார். மூன்று முழதூரம் கூட அவர் பக்தர் களிடமிருந்து எட்டியிருப்பவர் அல்லர்.''

இதைக் கேட்டுச் சேனாபதியின் புதல்வி கொல்லென்று சிரித்தாள்.

''பெரியோய்! தாங்கள் பேரன்புடன் பரா மரித்து வரும் ராக்கால் என்னும் இளைஞன் உணவு விஷயத்தில் கட்டுமானம் ஏதும் இல் லாதவனாகத் தென்படுகிறான். யாரோடு வேண்டுமானாலும் கூடியிருந்துகொண்டு அவன் உணவு அருந்துகிறான். ஒரு வேளை இக்கூற்று களையெல்லாம் சேனாபதியானவர் ஹாஸ்ராவிட மிருந்து கேள்விப்பட்டு இருக்கலாம்.''

இங்ஙனம் இயம்பிய சேனாபதியின் புதல் விக்கு நான் விடுத்த விடையாவது: ''மானுடன் ஒருவன் ஏராளமாக ஜபம், தியானம் போன்ற ஆத்மசாதனங்களைப் புரிந்து வரலாம். அவை களுக்கிடையில் அவன் மனது உலக விஷயங் களிலேயே உழன்றுகொண்டிருக்குமாகில் அவ னுக்கும் கடவுளுக்கும் வெகுதூரம். ஆகை யினால் அவன் நலன் ஒன்றும் அடையப்பெற மாட்டான். ஆனால் ஆத்ம சாதகன் ஒருவன் பொருந்தாத உணவைப் புசிக்கும்படி நேரிட லாம். அதற்கிடையில் அவன் தனது மனதை மட்டும் உறுதியாக இறைவனுடைய சாந்நித் தியத்தில் வைத்திருப்பானாகில் அவன் பாக்கிய வானாகிறான். காலக்கிரமத்தில் பகவானுடைய அனுபூதியையும் அவன் அடைகின்றான்."

''தன்னுடைய ஆடம்பரமான சாதனங்களுக் கிடையில் தனக்காகவென்று பணம் சம்பாதிக் கும் வாய்ப்பு ஒன்று வாய்க்குமாகில் கண்ணும் கருத்துமாக அந்த வாய்ப்பை அவன் பயன் படுத்திக்கொள்கிறான்."

இதைக் கேட்டதும் கேப்டன் "ஆம் ஆம். நீங்கள் சொல்வது சரிதான்'' என்றார். பரம ஹம்சதேவர் கேப்டனிடம் பகர்ந்ததாவது: ''சற்று நேரத்திற்கு முன்பு எல்லா ஆடவர் களும் ராமனுடைய அம்சங்கள் என்றும் பெண் பாலர் அனைவரும் சீதா தேவியின் சொரூபங் கள் என்றும் பேசினீர். ஆனால் இப்பொழுதோ வேறு விதமாகப் பேசுகிறீரே?''

அதற்குக் கேப்டன் ''அது உண்மைதான். ஆனால் நீங்கள் எல்லாரிடமும் அன்பு காட்டு வதில்லையே'' என்றார்.

பரமஹம்சதேவர்: "நீராக வடிவெடுத்திருப் பது இறைவனே. நாம் நீரை எங்கும் பார்க் கிறோம். சில தண்ணீரை மட்டும் அருந்தலாம். சிலவற்றில் குளிக்கலாம். இன்னும் சிலவற் றைக் கால் கழுவப் பயன்படுத்தலாம். உன் மனைவி, மகள் இவர்களையும் அன்னை பராசக்தி யாகவே நான் காண்கிறேன்."

அதைக் கேட்டதும் கேப்டன் "ஆமாம். நீங் கள் சொல்லுவது சரிதான்" என்று கூறிக் கால்களில் விழுந்து வணங்கினார்.

கொல்லென்று நகைத்தார் பரமஹம்சதேவர். பிறகு கேப்டனின் நல்லியல்புகளை விளக்கத் தொடங்கினார். "தினம் அவர் இறை வழிபாட் டில் ஈடுபடுகின்றார்'' என்றார் பரமஹம்ச தேவர்.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

12-3. கோட்டாலை ஆன குணம்இறந்த நிர்க்குணத்தோர்
தேட்டாலே தேடுபொருள் சேருநாள் எந்நாளோ.

கோட்டாலை ஆன–துன்பத்துக்கு ஏதுவான, தேட்டாலே தேடு பொருள்–விருப்பத்துடன் தேட வேண்டிய மெய்ப்பொருள்.

மாயப்பிரபஞ்சம் முக்குண மயமானது. மூன்று குணங்களாவன சத்வம், ரஜஸ், தமஸ் என்பனவாம். இப்பிரபஞ்சம் ஓயாது மாறியமைந்து கொண்டிருப்பதால் இதற்கு மாயப் பிரபஞ்சம் என்று பெயர். பிரபஞ்சத்தின் அமைப்பு முழுதும் மனிதனிடத்தும் இருக்கிறது. ஆகையினால் தான் அண்டத்திலிருப்பது பிண்டத்திலிருக்கிறது என்றும், பிண்டத்தில் இருப்பது அண்டத்திலிருக்கிறது என்றும் கோட்பாடு வந்துள்ளது. அண்டமெங்கும் பயணம் போய் ஆங்காங்கு உள்ளவைகளை ஆராய்ச்சி பண்ணவேண்டியது மனிதனுக்கு அவசியம் இல்லை. யாண்டும் தன் கைவசத்திலுள்ள தன்னையே மனிதன் ஆராய்ச்சி பண்ணுவானாகில் அது அண்ட முழுதையும் ஆராய்ச்சி பண்ணுவதற்கு நிகராகிறது. மனிதனுடைய அமைப்பில் மூன்று குணங்களும் அமைந்துள்ளன. மனிதன் உறங்குகின்றபொழுது தமோகுணத்தில் மூழ்கியிருக்கிறான். விழித்தெழுந்து அவன் நடமாட்டத்தில் ஈடுபடுகின்றபொழுது ரஜோ குணத்தில் இருக்கிறான். ஏதோ சில வேளைகளில் அவன் அமைதியுற்று மனத் தெளிவடையப்பெற்றவனாய் ஆனந்தத்தில் ஊறியிருக்கிறான். அந்நிலையில் அவன் இருக்கின்ற பொழுது சத்துவ குணம் முன்னணியில் வந்து நிற்கிறது. ஆக நாள்தோறும் மனிதன் இந்த மூன்று குணங்களின் ஆட்சிக்கு அடிமைப்பட்டவனாக வாழ்ந்து வருகிறான். பிறகு இந்த மூன்று குணங்களிலும் இன்பமும் துன்பமும் செறிந்து உள. மனிதன் தன்னுடைய ஒரு நாள் வாழ்வை ஆராய்ந்து பார்ப்பானாகில் அவன் மாறி மாறி இன்ப துன்பங்களில் உழன்று வருவது வெளியாகிறது. அங்ஙனம் அவன் ஆழித்துரும்பு போன்று அல்லலிலும், இன்பத்திலும் அகப்பட்டுள்ளான் என்பது வெளிப்படை. இங்ஙனம் அவனுக்கு வந்து வாய்க்கும் இன்ப துன்பங்கள் வாயிலாகப் படிப்படியாகப் பண்பாடடைந்து வருகிறான். காலாந்தரத்தில் இத்தகைய வாழ்வில் அவனுக்குச் சலிப்புத் தட்டுகிறது. பிரபஞ்ச வாழ்வில் அவன் கொண்டுள்ள பற்றுதல் பெரிதும் குறைகிறது. உலகப்பற்று குறைவதற்கேற்ப அவனிடத்து சத்துவகுணம் ஓங்குகிறது. மூன்று குணங்களுள் கடை நிலையில் இருப்பது தமோகுணம். அது உறக்கமும், சோம்பலும், வீண்பொழுது போக்குவதுமாக வடிவெடுத்து உள்ளது. தன் வாழ்க்கையின் வாயிலாக அதை வெல்லுதற்கேற்ப மனிதன் ரஜோகுணத்திற்கு வருகிறான். அவன் ஓடியாடி அலுவல்கள் பல புரிவது ரஜோகுணத்தின் பாங்கு ஆகும். பிறகு ஓய்வு ஒழிச்சலின்றி அவன் அலைவதெல்லாம் பொருளற்றது என அவனுக்குத் தோன்றுகிறது. அது அவனிடத்து சத்துவ குணம் நிலைபேறு அடைவதின் அறிகுறியாம். சத்துவகுணம் ஓங்குதற்கேற்ப விவேகம் வடிவெடுக்கிறது. அதன் விளைவாக உலகப்பற்றுத் தானாகக் குறைகிறது. இத்தகைய மனநிலை அடையப் பெற்றவனுக்கே ஆத்ம சாதனங்கள் புரிவதில் நாட்டம் அதிகரிக்கிறது. தான் நாடுகின்ற பேரானந்தத்தை இந்தப் பிரபஞ்சம் நல்க வல்லது அன்று என்னும் உண்மை அவன் உள்ளத்தில் உதயமாகிறது. அதற்கேற்றவாறு பரநாட்டமும் அவனிடத்து ஓங்குகிறது. தேட்டாலே தேடு பொருள் என்பது சிரமப்படாது அடையப் பெறுகிற பெரிய பொருளாம். எவ்வளவுக் கெவ்வளவு மனிதன் மனம் அடங்கப் பெறுகிறானே அவ்வளவுக்கவ்வளவு அப்பெரிய பொருளை உள்ளத்தின் உள்ளே உணருகிறான். மனம் அறவே அடங்கப்பெற்றவதும் தேடு பொருள் தன்னிடத்தில் நிலைபெற்றிருப்பதைக் காண்கின்றான். அப்பொருளோ பிரபஞ்சத்தோடு சம்பந்தப்படாதது. ஆகையினால் அது மூன்று குணங்களுக்கும் அப்பாற்பட்டது. மூன்று குணங்கள் ஒன்றில் ஒன்று

ஒடுங்கிப் பாழ்படும்பொழுது அது நிர்க்குணம் எனப் பகரப்பெறுகிறது. ஆகவே முக்குண மயமாயுள்ள இப்பிரபஞ்ச வாழ்வு மனிதனுக்குச் சொந்தமானதன்று. வீடு பெற நில் என்று ஔவைப் பிராட்டி பகர்ந்தது மூன்று குணங்களுக்கு அப்பாலுள்ள பரநிலையைப் பற்றியதாம். மூன்று குணங்களுக்கு அந்நிலையில் அலுவல் ஏதும் இன்மையினால் அது நிர்க்குணம் எனப் பகரப்பெறுகிறது. உடல் எடுத்துள்ள மானுடன் ஒருவன் அடையவேண்டிய பேறு இதுவாம். இந்நிலை தமக்கு அதிவிரைவில் வந்து வாய்க்கவேண்டும் என்று தாயுமானவர் இக்கண்ணியின் வாயிலாகப் பரம்பொருளிடத்துப் பிரார்த்திக்கின்றார்.

12-4. கெடுத்தே பசுத்துவத்தைக் கேடிலா ஆனந்த மடுத்தோரடுத்த பொருட் கார்வம் வைப்பதெந்நாளோ.

பசுத்துவம் என்பது பசு அல்லது ஜீவாத்மன் பாங்கு ஆகிறது. ஜீவாத்மன் நிலைபேறு உடையதாகமாட்டாது. ஏனென்றால் ஜீவாத்மனுக்குச் சிதாபாசன் அல்லது பிரதிபிம்பிக்கின்ற சித் சொரூபி என்பது மற்றொரு பெயர். ஜீவாத்மனைக் கடலிலே அலையின்மீது பிரகாசிக்கின்ற சூரியனோடு ஒப்பிடலாம். மூலப்பொருளாகிய சூரியனை மேகங்கள் வந்து மூடிக்கொண்டால் அலைகளிலே தென்படுகின்ற அத்தனை சூரிய பிம்பங்களும் மறைந்துபட்டுப் போகின்றன. அதே பாங்கில் தமோகுணத்தின் விளைவாக வருகின்ற உறக்கத்திலே ஜீவன் படைத்துள்ள ஜீவ வியக்திக்கு மறைந்துபட்டுப்போதல் என்னும் நிலைமை உண்டாகிறது. எப்பொருள் தோன்றவும், இருக்கவும், மறைந்துபட்டுப் போகவும் ஆகிய நிலைகளுக்கு உட்பட்டிருக்கிறதோ அந்நிலையிலுள்ள அது மெய்ப்பொருளாகாது. அலைகளிலே பிரதிபிம்பித்துத் தோன்றுகிற அனந்தங்கோடி சூரியர்கள் மெய்ப்பொருளாக மாட்டா. அதே விதத்தில் அனந்தங்கோடி அந்தக்கரணங்களில் பிரதிபிம்பிக்கின்ற ஆத்ம பிரகாசங்கள் மெய்ப்பொருளாகமாட்டா. அவை யாவுக்கும் மூலப்பொருளாய் உள்ள சித் சொரூபமே அல்லது பரமாத்ம சொரூபமே மெய்ப்பொருளாம்.

ஜீவாத்மன் படைத்துள்ள ஜீவ வியக்தி அல்லது பசு படைத்துள்ள பசுமை என்னும் கூறு மெய்ப்பொருளாக மாட்டாது. கடலிலே தோன்றி அதன்கண் மறைகின்ற அலைக்கு நித்தியத்துவம் இல்லை. ஆதலால் அதில் பிரதிபிம்பிக்கின்ற சூரியனும் நித்திய வஸ்துவாக மாட்டாது. அலையிலே தென்படுகின்ற சூரிய வெளிச்சம் அலையோடு சம்பந்தப்பட்டதன்று. அது மூல சூரியனுக்கே உரியதாம். அதே பாங்கில் அஹம்பிரம்மாஸ்மி என்னும் மஹா வாக்கியத்தின் உட்பொருளை அறிய வருகின்ற ஜீவாத்மன் தேகாத்ம புத்தியைத் தாண்டியாக வேண்டும். அதாவது உடல் படைத்திருப்பது அவனுடைய நிஜ சொரூபம் ஆகாது. உடலில் இருக்கின்றபொழுதே உடல் உணர்வை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பரபோதத்தில் நிலைத்திருத்தல் வேண்டும். இந்நிலையே விதேக முக்தி எனப் பகரப்பெறுகிறது. சரீரத்தில் இருக்கின்றபொழுது சரீர உணர்வு சற்றும் இல்லாதிருப்பவனே பாக்கியவான் என்பது இக்கண்ணியின் உட்பொருளாம்.

12-5. கல்கண்டால் ஓடுகின்ற காக்கைபோல் பொய்ம் மாயச் சொல்கண்டால் ஓடும்அன்பர் தோய்வறிவ தெந்நாளோ.

கல்லை வீசிய மாத்திரத்தில் காக்கை பறந்தோடுகிறது. ஏனென்றால் தனக்கு வந்து நிகழ்தற்கிருக்கும் ஆபத்தினின்று தன்னைக் காப்பாற்றிக்கொள்ளக் காக்கையானது முயலுகிறது. மாயைக்கு வசப்பட்டுள்ள உலகத்தவர்கள் தங்களுடைய வாழ்க்கையைப்பற்றி அறிந்துகொண்டுள்ள விஷயம் அத்தகையதேயாம். மற்றுப் பரமனைச் சார்ந்துள்ளவர்களோ உலக நிகழ்ச்சிகளனைத்தும் இறைவனுடைய திருவிளையாடல் எனப் பொருள்படுத்துகின்றனர். 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்னும் கோட்பாட்டில் ஊன்றிய கருத்துடையவர்களாய் அன்னவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அத்தகையவர்களுக்குக் கேடே வந்தமைந்தாலும் அது இறைவனுடைய திருவருள் என்று எண்ணி அஞ்சாதும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்னும் முயற்சி எடுத்துக்கொள்ளாதும் இருக்கிற பக்தர்கள் இருக்கிறார்கள். அது சரணாகதியின் விளைவு.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-10

விவேகானந்த சுவாமிகள் 1894ஆம் வருஷம் நவம்பர் மாதம் 30ஆம் தேதி அமெரிக்காவி லிருந்து சென்னை பக்தர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் மேலாம் கருத்துக்கள் சிலவற்றை வெளியிடுகின்றார்.

சமாச்சாரப் பத்திரிகைகள் தம் போக்கில் உலகுக்குப் பயன்பட்டு வருகின்றன. ஆனால் அருள் துறையில் பணிவிடை பண்ணுகின்ற தொண்டன் ஒருவன் அவைகளுக்கு அடிமைப் படலாகாது. விளம்பரப் பிரியர்களே சமா சாரப் பத்திரிகைகளைப் பெரிதும் நாடி நிற்கின் றனர். ஆனால் ஆத்மீகத் தொண்டில் ஈடுபட் டிருக்கும் பக்தர்கள் எவ்வளவுக்கெவ்வளவு விளம்பரத்தை ஒதுக்கி வைக்கின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் புரியும் தொண்டு அருள் துறையில் உறுதிபெறுகிறது. மனிதனுடைய முன்னேற்றத்திற்கு இடைஞ் சலாயிருப்பவைகளுள் முக்கியமானதொன்று விளம்பரப் பிரியமாம்.

இறைவனார் செயலையே ஆராய்ந்து பார்ப் போம். அண்டங்களை அவர் இயக்கி வருவது அற்புதங்களுள் பெரிய அற்புதமாம். அப்படி யிருந்தும் அவைகளை இயக்குகின்ற மூர்த்தி மட்டும் கட்புலனாகாது மறைந்து இருக்கிறார்.

அன்னை பராசக்தி பரமஹம்சதேவருக்கு காட்சி கொடுத்தாள். அக்காட்சியிலே அவள் ஒரு கூடை நிறைய புஷ்பங்களையும், புஷ்ப மாலைகளையும் எடுத்துவந்தாள். அதைப்பார்த்த அம்பிகையின் பக்தராகிய பரமஹம்சதேவர் தாம் வழிபடு தெய்வம் கொண்டுவந்துள்ள பரிசின் காரணம் யாது என்று கேட்டார். அம்பிகை பகர்ந்ததாவது: 'மகனே, நான் இங்கு கொண்டுவந்திருப்பது கீர்த்தியின் சின்னமாம். வேண்டுமானால் இதனை நீ ஏற்றுக்கொள். நீ உலக மக்களுக்கிடையிலே பேரும் புகழும் வாய்க்கப்பெற்றவனாக இலங்குவாய்' என்றாள். அதற்குப் பரமஹம்சதேவர் கொடுத்த விடை யாவது: 'தாயே! ஏற்கனவே நான் உன்னிடத் தில் பிரார்த்தனை பண்ணியிருக்கிறேன். எனக்கு நலம் தருபவைகளை மட்டும் நீ எனக் குத் தந்தருள்வாயாக. பேரும் புகழும் மனித னுக்குப் பந்த பாசத்தை உண்டுபண்ணுகின் றன. கீர்த்தி எனக்கு ஒருபொழுதும் வேண் டாம். தாயே தயவு கூர்ந்து நீ கொண்டுவந் துள்ள கீர்த்தி என்னும் கூடை நிறைய உள்ள புஷ்பங்களை நீயே வைத்துக்கொள். போற்று தற்குரிய பெரிய பொருளாக நீ யாண்டும் இருக்கின்றாய். ஆகையினால் உண்மையான கீர்த்திக்கு இருப்பிடம் நீயே. நிலையற்ற நில வுலக வாழ்க்கைக்கு வந்துள்ள ஜீவாத்மாவா கிய என்னை இத்தகைய பந்தபாசத்தைக் கொடுத்து மயக்க வேண்டாம். நான் யாண் டும் உன் அருளுக்கேற்ற செல்வனாக இருக்க விரும்புகிறேன்' என்று அம்பிகையிடம் விண் ணப்பித்தார்.

இந்த விண்ணப்பத்துக்கு ஏற்ற பிரகாரம் பரமஹம்சதேவருடைய பிரதம சிஷ்யராகிய விவேகானந்தரும் கீர்த்திக்கு அடிமைப்பட வில்லை. சிகாகோ நகரிலே சர்வமத மகாசபை யில் அவர் பேசிய முதல் நாளன்றே அவர் உலகப் பிரசித்தி பெற்றவராக மாறிவிட்டார். அதைக் குறித்து அவர் மயங்கவில்லை. அதன் பிறகு அவருக்கு அளிக்கப்பட்ட உபசாரங் களோ இந்தியாவிலே ஒரு கோமானுக்கு ஏற் றவை போன்றிருந்தன. ஆனால் அவர் அதற்கு அடிமைப்படவில்லை. இந்தியாவிலுள்ள ஏழை மக்களின் பரிதாபகரமான நிலையே அவர் உள் ளத்தை வாட்டிக்கொண்டிருந்தது.

விவேகானந்த சுவாமிகள் பெற்றிருந்த கியா தியைக் கண்டு பொறாமைப்பட்ட எதிரிகள் அவருக்குப் பிரதிகூலமான பிரச்சாரங்களை ஏராளமாகச் செய்தார்கள். அதற்கும் அவர் அசைந்தாரல்லர். விருப்பு வெறுப்பற்ற நிலை யிலிருந்து கொண்டு பரம்பொருளின் பணி விடையை அவர் உறுதியாகவும் அமைதியாக வும் ஆற்றி வந்தார். அதன் விளைவாக அவரு டைய இயக்கம் மேல் நாடுகளில் ஆழ்ந்து வேர் பிடித்தது. அவர் சரீரம் மறைந்ததனால் அருள் இயக்கம் நின்று விடவில்லை.

சுயநலத் தியாகமும் தொண்டும் வல்லமை வாய்ந்தவைகளாம். அதற்கு நல்ல எடுத்துக் காட்டாக இலங்கியவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும் சுவாமி விவேகானந்தருமே யாவர்.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம்

100. अच्युतः அச்யுத:— தன் சொருபத்தினின்று பிசகாதிருப்பவன்.

அச்யுதம் என்ருல் அசைதல், தன் ஸ்தானத்திலிருந்து நழுவிப் போதல் எனப் பொருள்படுகிறது.

பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் நிலை மாறியமைந்து கொண்டிருக்கின்றன. ஆகையினுல் அவையாவும் ச்யுதமாம். பரமன் ஒருவரே யாண்டும் தன்மயமாயிருப்பவர். சிறிதேனும் தன் சொருபத்தினின்று நிலைமாறி அவர் போவதில்லை. இதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்ளுதல் அவசியம். கலக்கினும் தன்கடல் நிலைமாறுதல் இல்லை என்பது அதைப் பற்றிய உண்மையாம். சிறு குளம் குட்டைகளைக் கலக்கி சேறுபடியச் செய்யலாம். ஆனுல் அகண்டமாய் ஆழமாய் இருக்கும் கடலைக் கலக்கி சேறுபடுத்த முடியாது. கடல் நீர் யாண்டும் தன்மயமாயிருக்கிறது. அதே பாங்கில் பரமாத்மன் யாண்டும் தம்முடைய பெருநிலையினின்று பிசகாதவராகின்ருர். ஆகையினுல் அவர் அச்யுதன் என அழைக்கப்பெறுகிருர்.

101. वृषाकपिः வ்ருஷாகபி: — தர்ம வடிவினராகவும் காட்டுப்பன்றி வடிவினராகவும் இருப்பவர்.

மழை பெய்து மக்களுடைய குறை நிலைகளையெல்லாம் நிறைநிலையாக மாற்றுகிறது. அதே பாங்கில் பரமன் தர்ம சொருபமாக இருந்து புருஷார்த்தங்கள் நான்கையும் நன்கு நிறைவேற்றுகிருர். நான்கு புருஷார்த்தங்களாவன தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் அல்லது அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாம்.

புராண வரலாற்றின்படி பகவான் பத்து அவதாரங்கள் எடுத்துள்ளார். அவைகளுள் இரண்டாவது அவதாரமாயிருப்பது வராக அவதாரம். ஜலப்பிரளயத்தில் உயிர்களனைத்தும் அழிந்துபட்டுப்போகும் தறுவாயிலிருந்த பொழுது பரம்பொருள் வராக வடிவெடுத்து வந்து உலகைக் காப்பாற்றினுர் என்பது புராண வரலாறு.

102. अमेयात्मा அமேயாத்மா — அளப்பரிய வடிவினர்.

ஆழாக்கைக்கொண்டு கிணற்று நீரை அளக்கலாம். ஆனுல் கடல் நீரை அளப்பதற்கு ஆழாக்கு உதவாது. அதே பாங்கில் மனிதன் படைத்துள்ள சிற்றறிவைக்கொண்டு பிரபஞ்சப் பொருள்களைத் துருவி ஆராயலாம். மற்று மனம் மொழிக்கெட்டாத பரவஸ்துவை முற்றிலும் ஆராய்தற்கோ, அறிந்துகொள்ளுதற்கோ மனிதனுக்கு சாத்தியப்படாது.

103. सर्वयोगविनिःसृतः ஸர்வயோகவிநிஸ்ருத:- எல்லா யோகங்களாலும் அறியக்கூடியவர்.

பரமாத்மா ஜீவாத்ம இணக்கத்திற்கு யோகம் என்றுபெயர். இந்த யோகம் நான்கு பாங்குகளை உடையது. அவையாவன கர்ம யோகம், ராஜயோகம், பக்தியோகம், ஞான யோகம் என்பனவாம். இந்த நான்கு யோகங்களை ஒன்று சேர்த்து அனுஷ்டித்தாலும் சரி, அல்லது தனியாக ஏதேனும் ஒரு யோகத்தில் ஈடுபட்டாலும் சரி—இவைகளின் வாயிலாக அடையப்பெறுபவராகப் பரமன் இருக்கிருர்.

104. वसुः வசு — உயிர்களனைத்துமாய் அவையாவுக்கும் இருப்பிடமாய் இருப்பவர்.

இயற்கையின்கண் அஷ்டவசுக்கள் இருக்கின்றன. அவைகளுள் தீ மிக முக்கியமானது. அத்தகைய தீயாகவும் பரமன் உள்ளார்.

105. वसुमनाः வசுமனு: — பெரிய மனம் படைத்தவர்.

மனிதனுடைய பாங்கு அவன் படைத்துள்ள மனதால் வெளியாகிறது. பரமனே சுத்தமான மனது படைத்தவர். விருப்பு வெறுப்புக்கு ஆங்கு இடமில்லை. எல்லா உயிர்களையும் அவர் பேரன்புடன் நேசிக்கிருர். அவரை உபாசிக்கின்ற ஒவ்வொரு சாதகனும் தன்னையே அவருடைய செல்லப்பிள்ளையாகக் கருதிக்கொள்கிருன். இத்தனைக்கும் காரணம் பரமன் படைத்துள்ள விஸ்வ மனசேயாம்.

106. सत्यः ஸத்ய: — மெய்ம்மையாக இலங்குபவர்.

எது காலத்தால் அடிபடுவதில்லையோ அது ஸத்யம். ஒரு காலத்தில் இருந்து மற்றொரு காலத்தில் இல்லாது போவது ஸத்யமாகாது. மனிதன் ஒரு காலத்தில் வாழ்ந்திருக்கிருன். மற்றொரு காலத்தில் மறைந்துபட்டுப் போகிருன். ஆகையினுல் அவனுடைய உடல்

வாழ்க்கை ஸத்யம் ஆகாது. எது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் இல்லையோ அது மெய்ப்பொருள் ஆகாது. பிரபஞ்சப்பொருள்களனைத்தும் அதனதனிடத்துக்குரியவைகளாம். ஆதலால் அவைகளை நிறைபொருள் என்று இயம்பலாகாது. பரமனோ எந்த இடத்திலும் கட்டுப்பட்டவர் அல்லர். தேசம் அல்லது இடம் என்பது வெறும் மனோ கற்பனையாம். ஆகையினால் மெய்ப்பொருள் எங்கிருக்கிறார் என்பது பொருளற்றதாகிறது. அவரிடத்து அண்டங்களனைத்தும் நிலைபெற்றிருக்கவும், ஒடுங்கவும் செய்கின்றன. எப்பொருள் நிலைபேறு உடையதோ அது ஸத்யம். பிரக்ஞானம் அல்லது பரமன் ஒருவரே ஸத்யமாம். எது ஒரு காரணத்தை முன்விட்டு இருக்கிறதோ, மற்றொரு காரணத்தை முன்விட்டு இல்லாது போகிறதோ அது மெய்ப்பொருள் ஆகாது. வானவில் பகலிலே சூரிய வெளிச்சமும் மேகமும் இருக்கிறபொழுது தென்படுகிறது. மேகமும் சூரியவெளிச்சமும் இல்லாதவிடத்து வானவில் தோற்றத்துக்கு வருவதில்லை. ஆகையினால் அது மெய்ப்பொருள் ஆகாது. பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் காரண காரியமாக அமைந்துள்ளன. அப்படி அமைந்திருப்பவைகள் மெய்ப்பொருளாகமாட்டா. இனி பரமாத்மாவோ காலத்திலோ, தேசத்திலோ, நிமித்தத்திலோ கட்டுப்பட்டவர் அல்லர். கால தேச நிமித்தம் என்னும் தோற்றம் வெறும் மாயா விகாரங்களாம். அந்த விகாரங்களுக்கப்பால் இருப்பவர் ஸத்ய வஸ்து. அந்த வஸ்துவே பரமாத்மன்.

107. समात्मा ஸமாத்மா — உயிர்களனைத்திடத்தும் ஒரே பாங்கில் இலங்குபவர்.

பஞ்சபூதங்களுள் நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய நான்குக்கும் தாரதம்மியம் உண்டு. அதாவது ஏற்றத் தாழ்வை அவைகளிடத்துக் காணலாம். காற்று ஒரே பாங்கில் இருக்கிறது என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் உண்மை அதுவன்று. வானத்திலே பறந்துசெல்லும் ஆகாய விமானம் சில இடங்களில் திடீரென்று 500 அடி கீழே விழுகிறது. அதில் செல்லுகிற பிரயாணிகளுக்குத் திடீரென்று அசைவுமட்டும் தென்படுகிறது. 500 அடி கீழே விழுந்தது அவர்களுக்குத் தெரியாது. அத்தகைய இடத்துக்கு Air pocket என்று பெயர். அதாவது அந்த இடத்தில் காற்று இல்லை என்பதாம். மற்று முதல் பூதமாகிய ஆகாசம் மட்டும் நீக்கமறப் பிரபஞ்சம் எங்கும் நிறைந்திருக்கிறது. அதை முன்னிட்டே பரம்பொருள் சிதாகாசன் என்று இயம்பப்படுகிறது. அறிவுப் பெருவெளி என்பது இதன் பொருள். பரவஸ்துவானவர் நீக்கமற எங்கும் நிறைபொருளாய் இலங்குகிறார். அதுமட்டுமன்றி அவரிடத்திலே தோன்றி, அவரிடத்தில் நிலைத்திருந்து, அவரிடத்தில் ஒடுங்குகின்ற உயிர்வகைகளனைத்தையும், பக்ஷபாதமின்றிச் சமமாகக் கருதி வருகின்றார். சிற்றுயிர், பேருயிர் என்ற பேதத்தை மக்களாகிய நாம் நமக்கு நாமே உண்டுபண்ணிக்கொள்கிறோம். பரமாத்மாவுக்கு அத்தகைய பேதம் இல்லை. அணு உயிரையும், சிருஷ்டிகர்த்தாவாகிய பேருயிரையும் பரமாத்மன் ஒரே பாங்கில் பொருள்படுத்துகின்றார்.

108. असम्मितः அஸம்மித: — பிரபஞ்சத்தில் எதிலும் கட்டுப்படாதவன்.

சாதாரண ஜீவர்கள் என்பார் காலதேச நிமித்தத்தால் கட்டுண்டு இருக்கின்றனர். பின்பு பரம் பொருள் தாமே உலகத்தவர்களை உய்வித்தல் பொருட்டு மானுட சரீரம் எடுத்து வருகின்றார். சரீரத்தில் கட்டுண்டவர் போன்று பரம்பொருள் தென்படலாம். உண்மையில் அவர் கட்டுப்பட்டவரல்லர். ராமனாக வடிவெடுத்து வந்திருந்த பரம்பொருளைத் தம்முடைய யாகத்தைக் காப்பாற்றுவதற்காக அனுப்பி வைக்கவேண்டும் என்று விசுவாமித்திரர் வேண்டினார். தசரதனோ 'ராமன் இளங்கன்று, அவன் தம் காரியத்துக்கு உதவான்' என்று இயம்பினார். இவ்விருவருள் ராமனுடைய மகிமையை அறிந்தவர் விசுவாமித்திரர், அறியாதவர் தசரதர். அதே பாங்கில் பரம்பொருள் கிருஷ்ணனாக வடிவெடுத்து வந்தபொழுது அவனுடைய லீலைகளைக் கண்டு சகிக்க முடியாத யசோதா அவனை ஒரு உரலில் கட்டி வைத்து விட்டாள். அந்த உரலையே இழுத்துக் கொண்டுபோய் பாலகிருஷ்ணன் இரண்டு மரங்களுக்கிடையே செலுத்தினான். மரங்களாக இருந்தவர்கள் சாப விமோசனம் பெற்றனர்.

ஸத் ஸம்பாஷணே

கேள்வி: (431) அதிகாலே 4 மணி முதல் 6 மணி வரை பிரம்ம முகூர்த்தம் என்று கூறப்படுகிறது. அதன் பொருள் என்ன?

இயற்கையின் நடைமுறையில் ஒழுங்குப்பாடு இருக்கிறது. அந்த ஒழுங்குப்பாடு சில வேளைகளில் மனிதனுக்குப் பேருதவி பண்ணக் கூடியதாக வந்தமைகிறது. இரவும் பகலும் சந்திக்கிற நேரத்தை சந்தியாவேளை என்கின்ரேம். அந்நேரத்தைக் கடவுள் வழிபாட்டில் பயன்படுத்தினல் மனிதன் அதில் அடையும் நன்மையானது மிக அதிகம். மற்ற நேரங்களில் பண்ணும் வழிபாட்டைவிட அதிகமான சாந்தியையும் நலனையும் சந்தியா நேரம் உண்டு பண்ணுகிறது.

அதே பாங்கில் பிரம்ம முகூர்த்தம் எனப்படும் அதிகாலே 4-00 மணியிலிருந்து 6-00 மணி வரையில் செய்கின்ற கடவுள் வழிபாடு ஆத்ம சாதகனுக்கு நன்கு பயன்படுகிறது. அந்த நேரத்தைக் கடவுள் வழிபாட்டில் பயன்படுத்திப் பார்ப்பவர்களுக்கே இவ் உண்மை விளங்குகின்றது. ஆதலால் அந்த நலனை மக்கள் எல்லோரும் பயன்படுத்துவது உசிதம்.

கேள்வி: (432) தேவலோகத்தில் மனிதர்கள் தொடர்பு வைக்க முடியாது என்ருல் எதற்காகக் கோவில்களில் பூஜை செய்யவேண்டும்?

சொர்க்கம் அல்லது தேவலோகம் என்பதும் நரகம் அல்லது தண்டனைக்குரிய இடம் என்பதும் நாம் வாழ்ந்து வரும் இந்த மண்ணுலகிலேயே இருக்கின்றன. அகண்டமாய்ப் பரந்துள்ள பிரபஞ்சத்தின் அமைப்பு யாண்டும் ஒரே பாங்குடையதாம். நீரின் பாங்கை ஆராய்தற்கு நாம் கடலெங்கும் சுற்றித்திரிய வேண்டிய அவசியமில்லை. அதே விதத்தில் பிரபஞ்சத்தின் அமைப்பை அறிந்துகொள்ளுதற்கு இந்த மண்ணுலகம் ஒன்றே போதுமானது.

மக்களுள் அவரவர் அடைந்துள்ள பரிபாகத்திற்கேற்றவாறு இந்தப் பிரபஞ்சமே மண்ணுலகாகவும், தேவலோகமாகவும், நரகமாகவும் காட்சி கொடுக்கிறது. மனிதன் எதை வழுத்துகிருனே அந்த மயமாக அவன் மாறியமைகின்ருன். மண்ணுலகை மண்ணுலகாகவே பொருள்படுத்துகிறவன் கீழ்நோக்கியோ மேல் நோக்கியோ போவதில்லை. பின்பு இவையாவும் கடவுளின் புறத்தோற்றம் எனக் கருதி இவைகளோடு வைக்கின்ற இணக்கத்தைப் பேரிணக்கமாகக் கருதுபவன் பண்பாட்டில் மேல் நிலைக்கு வருகின்ருன். அதை முன்னிட்டே உலகில் தேவாலயங்கள் அமைந்திருக்கின்றன.

கேள்வி : (433) ஆன்மாவின் உண்மை வடிவம் என்ன?

ஆத்மா வேறு பிரபஞ்சம் வேறு. பிரபஞ்சம் அழியும் பாங்குடையது. ஆத்மா அழியாதது. வீடும் வீட்டில் குடியிருக்கும் மனிதனும் வெவ்வேருனவர்கள். குடியிருக்கும் மனிதன் தன்னையும் தான் குடியிருக்கும் வீட்டையும் அறிய வருகிருன். அப்படி அறியும் பாங்குடையது ஆத்மா. அது அழியாப் பொருள். ஆத்மா ஆனந்த சொரூபம். நாம் ஆத்மா என்பதற்கு அத்தாட்சி நாமே. உடலோ ஜடப்பொருள். தூங்கும் பொழுது உடல் தன்னைத் தான் அறிந்து கொள்ளுதல் இல்லை. குடியிருப்பதற்குத் தகுதியற்ற உடலை ஜீவாத்மா புறக்கணிக்கிறது. அப்பொழுது அது வெறும் சடலம். ஆகவே ஆத்மாவின் வடிவம் சத் சித் ஆனந்தமாம். ஜடப்பொருள் சத் ஆகாது. ஆகையினல் அதனிடத்து அறிவோ ஆனந்தமோ இல்லை. நான் இருக்கிறேன் என்பதை எது அறிகிறதோ அது ஆத்மா. ஆத்மாவானது ஆணன்று, பெண்ணன்று, அலியன்று. இந்த வேறுபாடுகளனைத்தும் உடலுக்குரியவைகள். உடலைத் தான் என்று கருதுவது அக்ஞானம். விசாரித்துப் பார்த்து ஆத்மா வேறு, பிரகிருதியின் கூருயிருக்கிற உடல் வேறு எனப் பாகுபடுத்துவது மெய்யறிவு. இந்த அறிவுக்கேற்ப வாழுவது ஆத்மசாதனமாகிறது.

கேள்வி : (434) ஸ்ரீமத் என்பதற்குப் பொருள் என்ன?

ஸ்ரீமத் என்பதன் பொருள் மேன்மைக்கு இருப்பிடம் என்பதாம். ஸ்ரீமத் பகவத்கீதை என்று பகருமிடத்து மேலான உண்மைகளை விளக்குகிற போற்றுதலுக்குரிய பெரிய நூல் எனப் பொருள்படுகிறது. ஸ்ரீமத் சங்கரன் என்று சொல்லுகிறவிடத்துப் போற்றுதலுக்

குரிய பெரிய மூர்த்தி; அவர் நலனே செய்கின்றவர்; கேட்டுக்கும் அவருக்கும் தொடர்பு ஏதுமில்லை என்பதாம்.

கேள்வி : (435) விவேகானந்தர், பரமஹம்சர் இறந்த பிறகும் அவரோடு பேசினர் என்று எழுதக் காரணம் யாது ?

பரமஹம்ச தேவர் தாமே அம்பிகையோடு ஒட்டி உறவாடினர். அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அம்பிகை பதில் அளித்தாள். நாம் ஒருவரோடு ஒருவர் பேசுவது போன்று கடவுளோடு பேசலாம் என்றும் பரமஹம்சர் பகர்ந்துள்ளார். இக்கோட்பாடுகளை அனுசரித்து அவரிடம் கேள்வி ஒன்று பிறந்தது. "தாங்கள் அம்பிகையோடு பேசுவதன் பொருள் யாது? தாங்கள் தெய்வத்தைக்கண்டு பேசுவது என்பது தங்களுடைய மனதின்கூறு அல்லவா?" அதற்கு அவர் கொடுத்த விடையாவது: "ஆம்! தெய்வக் காட்சி என்பதும், தெய்வத்தோடு நாம் பேசுவது என்பதும் மனதின் கூறுகளேயாம்." பின்பு மனது சுத்தியடைவதற்கேற்ப அது காண்கின்ற காட்சி யெல்லாம் தெய்வக் காட்சிகளாம். அவை யாவும் உண்மைக்கு ஒத்திருக்கின்றன. ஆதலால் மனது சுத்தி அடைந்தவர்களுடைய கருத்துக்கள் அனைத்தும் தத்துவத்துக்கு ஒத்திருக்கின்றன. உலகத்தவர்கள் கருத்தோ பிழைபோகக்கூடியது. தத்துவ ஞானியின் கருத்துக்கள் பிழை போகமாட்டா.

கேள்வி : (436) ஆத்ம சாதகன் நிர்க்குண சமாதி அடைவதன் பொருள் யாது ?

பரமாத்மா ஒன்று. அதன் தோற்றங்களாக வந்திருப்பவை ஜீவாத்மாக்கள். ஜீவாத்மாக்கள் எண்ணிக்கையில் அடங்கா. அவைகள் சூட்சுமமாயிருக்கும் மனதிலும், ஸ்தூலமாயிருக்கும் உடலிலும் கட்டுண்டு இருக்கின்றன. அப்படிக் கட்டுண்டுஇருக்கும் பரியந்தம் அவைகளுக்குப் பிறப்பும் இறப்பும் உண்டு. பல பிறவிகளுக்குப் பிறகு ஜீவாத்மன் ஒருவனுக்குப் பிரபஞ்ச வாழ்வில் சலிப்புத் தட்டுகிறது. அப்பொழுது அவன் உலகப்பற்றை நீக்கி விட்டுத் தன்னுடைய நிஜசொருபமாகிய ஆத்மாவை அடைய முயலுகிறான். மனதைத் தெளிவு படுத்துவது ஆத்ம சாதனம். மலினப்பட்டுள்ள மனதுக்கு எது உலகாகத் தென்படுகிறதோ அதே பொருள் சுத்த மனமுடையவனுக்குத் தெய்வமாகக் காட்சி கொடுக்கிறது. ஆக உலகம் வேறு கடவுள் வேறு அன்று. இந்த மனதை ஒதுக்கித் தள்ளுதலே துறவின் உட்பொருளாகிறது. மனதை ஒதுக்கித் தள்ளியவன் நிர்விகல்ப சமாதி அடைகின்றான். அவனே பிறவிப்பெரும் கடலைத் தாண்டியவனாகிறான்.

கேள்வி: (437) கடவுள் பக்தரோடு பேசுவாரா?

இந்தக் கேள்விக்குப் பரமஹம்சதேவர் பல தடவை விடைகள் கொடுத்துள்ளார். நாம் ஒருவரோடு ஒருவர் உரையாடுவதுபோன்று கடவுளோடும் உரையாடலாம் என்பது அவருடைய கருத்து. ஆனால் அதற்கேற்ற தகைமையைப் பெறுவது நம் பொறுப்பாகிறது.

பிரபஞ்சத்தில் நாம் கொண்டுள்ள இணக்கங்கள் அனைத்தும் உண்மையில் தெய்வத்தோடு கொண்டுள்ள இணக்கமாம். ஏனென்றால் அவர்தாம் உலகனைத்துமாய் ஆயிருக்கிறார். ஆனால் அந்த உண்மை நம் உள்ளத்தில் இடம்பெறுவதில்லை. இது இடம்பெறவேண்டுமானால் உள்ளத்தை நாம் பக்குவப்படுத்த வேண்டும். பிறகு அவரவர் பக்குவத்துக்கேற்ற பிரகாரம் உலகம் பொருள்படுகிறது. நல்லவனுக்கு இவ்வுலகத்திலுள்ள அனைத்தும் நலன் நிறைந்தவைகளாகத் தென்படுகின்றன. கெட்டவனுக்கோ இது கேடுடையதாகத் தென்படுகிறது. பக்தியில் ஊறியிருப்பவனுக்கு, அவனுடைய ஆத்ம பரிபாகத்திற்கேற்றவாறு உலகத்திலுள்ள அனைத்தும் தெய்வீகம் நிறைந்தவைகளாகத் தென்படுகின்றன. அதற்கு மேல் பரமஹம்சதேவர் போன்ற பக்தர்களுக்கு விக்ரஹங்களும் அருள் நிறைந்தவைகளாகக் காட்சி தருகின்றன. அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பொருத்தமானவைகளும் உண்மையானவைகளுமான விடைகளே வந்தன. ஆக கடவுள் நம்மோடு பேசுவது நம்முடைய பரிபாகத்தை ஒட்டியதாம். திருத்தொண்டர், திருவிளையாடல் புராணங்களிலும், மஹாபக்த விஜயத்திலும் கடவுள் உரையாடும் நிகழ்ச்சிகளைக் காணலாம். காந்தியடிகள் மௌன விரதமும், உபவாசமும் இருந்தபோது அந்தராத்மாவில் ஒலித்தது ஆண்டவன் குரலே என்று நம்பினர்.

ஞான வெட்டியான்-11

இறைவனுக்கு அமைந்துள்ள சொரூப லட்சணங்களுள் சுந்தரம் என்பது ஒன்று. அழகன் என அது பொருள்படுகின்றது. உலக னைத்துமாய் இலங்குபவன் இறைவன். காரணப் பொருளாயிருக்கும் கடவுள் காரியமாயுள்ள உலகாக இலங்குகின்றான். காரணமே மற்றொரு வடிவில் காரியமாயிருப்பது கோட்பாடு. ஆதலால் பிரபஞ்ச முழுதுமே அழகு வடிவெடுத்திருப்பது வெளிப்படை. அழகு தெய்வம் சிவனைக் கருதப்படுகிற பொழுது சுந்தரேச்வரன் என்றும், மஹாவிஷ்ணுவாக வைத்துக் கொள்கிறபொழுது சுந்தரராஜன் என்றும், அம்பிகையாக இலங்குகின்ற பொழுது திரிபுரசுந்தரி என்றும் பெயர்கள் பெற்றுள்ளது.

இயற்கையில் எப்பகுதியை ஆராய்ந்து பார்த்தாலும் அதனிடத்து அழகு சொட்டுவது பிரத்யட்சம். உயிர்களனைத்தும் அழகைப் பாராட்டுகின்றன. இத்துறையில் நாஸ்திகன் என்பான் யாரும் இல்லை. இயற்கை எடுத்துள்ள வடிவங்களில் அழகு இலங்குகிறது. அது உண்டுபண்ணும் ஓசையில் அழகு சொட்டுகிறது. அதன் அசைவில் அழகு திகழுகிறது. கண்ணுக்கும் காதுக்கும் மட்டும் அருள் விருந்து வழங்குவதாய் அகிலம் அமையவில்லை. ஐம்பொறிகளுக்கும் அதனதன் பாங்குக்கேற்றவாறு அழகின் சுவை எட்டுகிறது. நாவால் சுவை பார்க்கிறவர்களுக்கு அது அறுசுவையாக அமைந்துள்ளது. உண்மையில் சுவையற்ற நீரில் சுவை காண வல்லவர்க்கு அது ஏழு சுவையாக வடிவெடுத்திருக்கிறது. கண்கொண்டு காண்பவர்களுக்கு ஏழு நிறங்களாக அது இலங்குகின்றது. இந்த்ர தனுசு என இயம்பப்படுகின்ற வானவில் அதற்கு அத்தாட்சியாகிறது. சரீர அமைப்பில் அமைந்துள்ள சப்த தாதுக்கள், சப்த நாடிகள் ஏழு விதமான ஊறுகளாக இலங்குகின்றன. இது சப்த ஸ்வரங்களாக இலங்குவது காதால் ரசிக்கக்கூடிய அழகாகின்றது. இதற்குமேல் மணத்திலும் ஏழு பகுதிகள் உள. அவைகளை ரசிக்கும் வல்லமை மனிதனின் மூக்குக்கு அமையவில்லை. நாய்போன்ற மனிதனுடன் வாழும் வீட்டு விலங்கும், காட்டில் வாழும் விலங்குகளும் இத்துறையில் வல்லமை மிக வாய்க்கப்பெற்றவைகளாயிருக்கின்றன.

பரம்பொருள் சகுணப் பிரம்மமாக இலங்குகின்றது. அதனிடத்து ஏழு கூறுகள் இருக்கின்றன. அவை யாவையும் தொகுத்து ஞான பூமிகள் ஏழு எனச் சான்றோர் பொருள்படுத்தியிருக்கின்றனர்.

யாண்டும் சுந்தர சொரூபமாக இலங்குகின்ற பரவஸ்துவைப் பாராட்டும் பாங்கு உயிர்களனைத்திடத்தும் அமைந்திருக்கிறது. அதற்கு ஐம்பொறிகளையும் பயன்படுத்தலாம். எந்த உயிர்க்குப் பரம்பொருளின் அழகு எப்பாங்கில் புலனாகிறதோ அப்பாங்கை ஆழ்ந்து எண்ணுவது நல்ல தியானம் என யோக சாஸ்திரம் கூறுகிறது. இக்கோட்பாட்டின்படி தியானம் பண்ணுவது உயிர்களனைத்திடத்தும் அமைந்துள்ள தெய்வப்பெற்றியாம். இந்தக் கோட்பாட்டை அறிந்துகொள்ளாத மனிதனே தனக்குத் தியானம் பண்ணுவது சாத்தியப்படுவதில்லை என்று குறை கூறுகிறான். இறைவன் தந்துள்ள பேரியல்புகளை அந்த இறைவன் வழிபாட்டிலேயே பயன்படுத்துவது மக்களுக்கு அமைந்துள்ள பெரிய வாய்ப்பாம்.

ஹிந்துமதம் என்ற பொதுப் பெயரில் இயம்பப்பெறுகிற வைதிக மதங்களில் கடவுள் வழிபாட்டுக்கு அமைந்துள்ள முறைகள் பலப்பலவாம். அவையாவும் இயற்கையின்கண் அமைந்துள்ள கலைகளாக வடிவெடுத்திருக்கின்றன. கடவுள் வழிபாட்டுக்கு ஐம்பொறிகளையும் பயன்படுத்தலாம். லலித கலைகள் என இயம்பப்படுகின்ற ஆடல், பாடல், அபிநயம், வடிவங்கள் அமைத்தல்ஆகியவற்றை முறையாகக் கையாள்வதும் நல்ல வழிபாடுகளேயாம்.

இங்ஙனம் அழகைப் போற்றுதற்கு இயற்கையின்கண் அமைந்துள்ள இத்தனைவித உபாயங்களுக்கிடையில் மனிதன் அழகு தெய்வத்தைப் பாராட்டாது உதாசீனனாக இருப்பானாகில் அது அவனுக்கு அமைந்த துர்பாக்கியமேயாம். மனிதன் தன்னுடைய மூடநம்பிக்கையையும் மடமையையும் கடவுள் வழிபாட்டில் கையாண்டு வருவதைத் துர்பாக்கியத்

திற்கும் கீழே வைத்து என்ன பெயரால் இயம்புவது என்று நமக்குத் தெரியவில்லை. இதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். இயற்கையின் கண் அமைந்துள்ள அழகைப் பாராட்டுதற்குத் 'தங்கக் குடத்திற்குச் சந்தனப் பொட்டு வைத்தாற்போல்'என்று இயம்புவது மரபு. திருப்பதியில் வெங்கடாசலபதி அவரை வழிபடுவோர் கையில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடுகிறார். சுந்தரராஜனாக இலங்குகின்ற வெங்கடாசலபதியை மனிதன் தன்னுடைய அறியாமையினால் அலங்கோலப்படுத்தியிருக்கின்றான். அவர்க்குத் திருமண் இட்டிருப்பது பூச்சாண்டி வேஷம் போட்டிருப்பது போன்றிருக்கிறது.

இதற்குச் சிலர் வியாக்யானம் தருகிறார்கள். வெயிலில் நடந்து போகும் ஒருவன் அதன் பிரகாசத்தை வடிகட்டுதற்குக் கறுப்புக் கண்ணாடி போட்டுக்கொள்கிறான். அதே விதத்தில் வெங்கடாசலபதியின் கண்பார்வையின் வேகத்தைத் தடுப்பதற்காகத் திருமண்ணைக் கொண்டு அவர் பார்வை சிறிது தடைப்படுத்தப்பட்டிருக்கிறது என்கின்றனர். மற்று பரம்பொருளோ யாண்டும் ஜாக்ரதாவஸ்தையிலிருக்கிறது. அதன் முன்னிலையில் அண்டங்களின் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் ஆகியவைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. அதற்கிடையில் மண்ணுலகில் ஒரு புள்ளியிலும் சிறிதாயிருக்கிற திருப்பதியில் மனிதனால் அமைக்கப்பட்டுள்ள ஒரு கல் விக்ரஹத்துக்கு மனிதன் போடுகின்ற திருமண் மூடியானது அகிலாண்ட நாயகனுடைய ஒப்புயர்வற்ற திட்டத்தைச் சிறிது மாற்றுகிறது என்பது எத்தகைய மௌடீகம்! பாமரர்க்கிடையில் இத்தகைய பொருந்தாத கொள்கையைப் புகட்டுவது சமுதாய சேவையாகாது. இனி தத்துவத்தைத் திரிவுபடுத்தி இயம்புவது சாத்தியமாகாதவாறு செய்யவேண்டும்.

மனிதனின் கைவசம் உள்ள நகைகளத்தனையையும் சுமக்கின்ற சுமைதாங்கிக் கல்போன்று அவன் அவரைப் பண்ணியிருக்கிறான். இதற்கெல்லாம் மேலாகப் பக்தர்கள் வாங்கி வருகின்ற பூமாலை அத்தனையையும் அவர் சுமந்தாக வேண்டும். மூர்த்தி ஒருவரை அர்ச்சாவதாரம் எனக்கருதுவது பக்தனுடைய பாங்கு ஆகும். 'The Hindu worships not the idol but the ideal suggested by it' என்று விவேகானந்த சுவாமிகள் பகர்ந்துள்ளார்கள். விக்ரஹ ஆராதனை பண்ணுகிற பக்தன் அந்த விக்ரஹத்தை அம்மனிதன் மயமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பது ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய கோட்பாடு. அவர் கையாண்ட முறையும் அத்தகையதேயாம். அம்பிகையை அவர் வழிபட்ட முறைகள் அவர் கூறியுள்ள கோட்பாட்டுச்கு எடுத்துக்காட்டுகளாகின்றன.

சுந்தரராஜனை அழகற்றவனாகப் பண்ணியது அறிந்தோ அறியாமலோ மனிதன் செய்துள்ள குற்றமாகும். கொஞ்சகாலம் வரையில் ஹிந்துக்களுள் தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாரைக் கோயிலுக்குள் விடாது ஒதுக்கிவைத்திருந்தனர். அவர்கள் கோயிலுக்குள் வந்தால் தெய்வத்தின் அருள் நிலை ஒழிந்துபட்டுப்போம் என்று கருதினர். ஆனால் அந்த ஐதிகம் இப்போது மாறியுள்ளது. அதன்மூலம் மனிதன் கண்ணியப் படுத்தப் பட்டுள்ளான். தெய்வத்தினுடைய அருள்நிலை யாண்டும் இருந்தபடி இருந்து வருகிறது. அதேவிதத்தில் கடவுளின் அழகைத் திருத்தியமைப்பதில் தோஷம் ஏதுமில்லை.

திருப்பதி வெங்கடாசலபதியின் தங்கையாகிய உமாதேவி தென்முனையில் பார்வதி என்னும் பெயர் பெற்றுள்ளாள். அப்பராசக்தியானவள் யாண்டும் யௌவனத்தோடு கூடியவளாக இருக்கிறாள். ஆகவே அவள் பாலா என அழைக்கப்படுகிறாள். அவளை அலங்கரிக்கும் முறையானது அழகை அதிகப்படுத்துதலேயாம். அலங்கரித்தான பிறகு ஆறு வயது குமரியாக அவள் முகத்திலிருந்து ஆனந்தம் சொட்டுகிறது. அந்த ஆனந்தம் பக்தர்களைப் பரவசப்படுத்துகிறது. ஆகையினால் அழகு தெய்வத்தை வழிபடுதற்கான உபாயத்தை யாண்டும் கன்னியாகுமரியில் காணலாம். அதே விதத்தில் தமையனாகிய வெங்கடாசலபதிக்கும் இயற்கையாயமைந்த அழகை அதிகப்படுத்த வேண்டும். இது விஷயத்தில் தங்கள் கருத்தைச் செலுத்தும்படி திருப்பதி வெங்கடாசலபதி கோயிலின் நிர்வாகிகள் வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

வினையாற்றும் விதம்

(சுவாமி விவேகானந்தர் கட்டுரை—மொழிபெயர்ப்பு மங்கையர்க்கரசி)

எனது வாழ்க்கையில் கற்றுக்கொண்ட அரிய பாடம் யாதெனின் குறியில் செலுத்தும் கவனத்தினை நெறியிலும் செலுத்த வேண்டும் என்பதே. வெற்றியின் இரகசியமே இதில் புதைந்துள்ளதாக எனக்குத் தோன்றுகிறது.

தோல்வியின் காரணத்தைத் துருவி ஆராய் வோமேயானல் தொண்ணூறு சதவீதம் நெறி யில் கவனம் செலுத்தத் தவறியதே என்பதனை அறியலாம். நெறியை வலுப்படுத்தலும் அதில் கவனம் செலுத்துதலும் அவசியமாகும். நெறி சரியாக அமையும்பொழுது குறியை அடைந்தே தீருவோம். இடைவிடாது கர்மத்தை முழு ஆற்றலுடன் செய்யவேண்டும் என்று கீதை பகர்ந்துள்ளது. செய்யும் கர்மத்தைப் பற்றுத லின்றிச் செய்தல் வேண்டும். செய்யும் கர்மத்தி னின்று கவனம் எதிலும் ஈர்க்கப்படலாகாது. இருப்பினும் தேவையான பொழுதில் கர் மத்தை விட்டு விலகவும் தெரிதல் வேண்டும்.

நாம் சில கர்மங்களை மேற்கொண்டு முழு ஆற்றலுடன் செய்தும் சில சமயம் தோல்வி ஏற்படுகிறது. தோல்வி ஏற்படினும் அக் கர் மத்தை விட்டு விலக இயலாமையே நம் துன் பத்திற்குக் காரணம் என்பதை நம் வாழ்க் கையை நன்கு ஆராய்ந்து பார்க்கின் அறிய லாம். தேனை உறிஞ்ச வந்த தேனீ தேன் அடையில் ஒட்டிக் கொண்டதினல் அதனை விட்டு விலக இயலுவதில்லை. நாமும் தேனீ யின் நிலையில்தான் உள்ளோம். பிரபஞ்சத்தைப் பயன்படுத்தி மேல்நிலைக்குச் செல்ல வேண்டிய நாம் இப்பிரபஞ்சத்தில் கட்டுப்பட்டுள்ளோம். இயற்கையை ஆளவந்த நாம் ஆட்பட்டுக் கிடப் பதை வாழ்க்கையின் அனைத்துப் படித்தரத் திலும் காணலாம். மற்றவர்களின் மனது நம்மீது ஆதிக்கம் செலுத்துகிறது. நாம் மற்ற வர்கள் மீது ஆதிக்கம் செலுத்தப் படாதபாடு படுகிறோம். உலக இன்பத்தைத்துய்க்கவிரும்பு கிறோம். ஆனல் அவ்வின்பங்களோ நம் ஆற்ற லையே அழித்துவிடுகின்றன. இயற்கையினின்று அனைத்தையும் அடைய விரும்புகிறோம். ஆனல் காலப் போக்கில் இயற்கையானது நம்மிட மிருந்து அனைத்தையும் உறிஞ்சி எடுத்துக் கொண்டு சக்கையாக எறிந்து விடுவதைக் காண்கிறோம். இக்கட்டுக்குள் நாம் அகப் பட்டுக்கொள்ளாவிடின் இன்பதுன்பம், வெற்றி தோல்விகளின் இடையேயும் வாழ்க்கை மகிழ்ச்சியுடையதாகவே இருக்கும்.

பற்றுதலே இக்கட்டுக்குக் காரணம். பற்றுத லின்றி, கர்மத்தில் கட்டுப்படாது இடையறாது கர்மத்தைச் செய் என்று கீதை புகட்டுகிறது. விரும்புகின்ற எதனின்றும், அது வேதனை நல்குவதாயினும், அதனின்று வேண்டிய பொழுதில் விலகும் ஆற்றலைப் படைத்திருத்தல் அவசியம். பலவீனர்களுக்கு இங்கு இப் பிற வியில் இடமில்லை. பலம் மரணமில்லாப் பெரு வாழ்விற்கும், பலவீனம் இடையறாத் துன்பத் திற்கும் நம்மை அழைத்துச் செல்கிறது. தேகம் பலவீனம் அடைந்து நோய்க் கிருமிகளை வர வேற்கும் பரியந்தம் நம்மைச் சுற்றி லட்சக்கணக் கான நோய்க்கிருமிகள் இருப்பினும் அவைகள் நம்மைப் பாதிப்பதில்லை. அதேபோன்று மனம் பலவீனப்பட்டுத் துன்பத்தை ஏற்கும் பரியந் தம் நாம் துன்ப அலைகளால் சூழப்பட்டிருப்பி னும் அவைகள் நம்மைப் பாதிப்பதில்லை.

நண்பர்கள், பந்துக்கள், ஆன்மீகக் கர்மங்கள் இவை போன்றவைகளில் ஏற்படும் பற்றுதல் மகிழ்ச்சியை நல்குகிறது. ஆனல் இப்பற்று தலே துன்பத்திற்கும் காரணமாக அமைகிறது. விரும்பியபொழுது பற்றைத் துறக்கும் ஆற்றல் இருக்குமானல் துன்பம் என்பதே இல்லை. முழு ஆற்றலுடன் ஒன்றில் பற்றை வைக்கவும், அதனின்று பற்றைத் துறக்கவும் தெரிந்தவனே பிரபஞ்சத்தை நன்கு கையாளத் தெரிந்தவனு கின்றான்.

அதே சமயத்தில் அளப்பரிய அன்பும் அத னல் ஏற்படும் பற்றுதலும், ஏதேனும் ஒன்றில் முழுக் கவனத்தையும் செலுத்தும் ஆற்றலும் வேண்டியதே. இதுவே நம் சுயநலத்தை அழிக்கவல்லது. முழு ஆற்றலுடன் அன்பு செலுத்தினலும் ஒரு சீரிய பண்பாளனல்தான் பற்றற்றும் இருக்க இயலும். அன்பு செலுத்தும் அதே சமயத்தில் பற்றற்றும் இருப்பது எவ் வாறு சாத்தியமாகும்? இந்த இரகசியத்தை

அறிந்தால் வாழ்வாங்கு வாழலாம்.

இப்பிரபஞ்சத்தில் தளையிடப்பட்டு இருப்பது நாம் வழங்குவதைப் பொறுத்தன்று; அதற்குப் பிரதியாக நாம் எதிர்பார்ப்பதனைப் பொறுத்து அமைகிறது. நாம் ஒருவரிடம் செலுத்தும் அன்பு துன்பத்தைத் தருவதில்லை. அதற்குப் பிரதியாக அவர்களிடம் எதிர்பார்ப்பதே நமக்குத் துன்பத்தை நல்குகிறது. ஆசையற்ற இடத்தில் துன்பம் இல்லை. சுயநலத் தியாகம் செய்தவனும் பிரதிபலனை எதிர்பார்க்காதவனுமே வாழ்க்கையில் வெற்றிபெறுகின்றனர்.

எதையும் எதிர்பாராமல் கொடுத்துக் கொண்டே இருத்தல் வேண்டும். கொடுக்கக் கொடுக்க அது பன் மடங்கு பெருகுவதைக் காணலாம். ஆனால் அதை எதிர்பாராது அதில் கவனம் செலுத்தாது கொடுத்துக் கொண்டே இருப்பதுடன் நம் வேலை முடிந்துவிடுகிறது. வழங்க மறுக்கும் பொழுதெல்லாம் இயற்கை அடிகொடுத்துக்கொண்டே இருக்கிறது. விரும்பினாலும் விரும்பாவிடினும் கொடுப்பதற்கு மனிதன் கட்டாயப்படுத்தப்படுவதால் மனம் உவந்து வழங்குதல் நல்லது. இயற்கையின் இத்திட்டத்தை மீற எடுத்துக் கொள்ளும் முயற்சி அதிகரிக்க அதிகரிக்க வேதனையும் அதிகரிக்கிறது.

பற்றற்று இருக்கவேண்டும் என்று எண்ணுகிறோம். பின்னோக்கிப் பார்வையைச் செலுத்தினோமேயானால் நம் அன்பிற்கும் பற்றிற்கும் உரியவர்கள் நம்மைத் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளார்கள் என்பதனையும் மற்றவர்களிடம் அடிமைப்பட்டு உழன்றதையும் உணரலாம். இனி அவ்வாறு இருக்கலாகாது என்று முடிவு செய்கிறோம். ஆனால் நடப்பது என்ன? மறுபடியும் பழைய கதையே தொடர்கிறது.

தொண்ணூறு சதவிகிதத்தினர் இப் பெரிய போராட்டத்தில் போராட முடியாமல் நம்பிக்கை இழந்துவிடுகின்றனர். இளமையில் நற்பண்புகளில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்கள் கூட முதுமையில் உணர்ச்சியின்றி ஜடம் போன்று ஆகிவிடுகின்றனர். இந்நிலையை மாற்றியமைப்பதற்கு மனித ஆற்றல் மட்டும் போதாது. அளப்பரிய தெய்வீக ஆற்றலினால் மட்டுமே துன்பத்தினின்று அதன் சாயல்கூடப் படாமல் வெளிவர இயலும். துன்பத்தின் இடையிலும் நாம் பண்பாட்டில் மேலோங்கி வருதல் வேண்டும்.

இது மிகக் கடினமானது. ஆனால் இடையரு அப்யாசத்தினால் இதனையடையலாம். நாம் நம்மை எதற்குத் தகுதியுடையவர்கள் ஆக்குகிறோமோ அதனையடைகிறோம். நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு அடியும் துக்கமும் தகுதியில்லாமல் கிடைக்கவில்லை. இதில் வெளி உலகிற்குப் பாதி பங்கு என்றாலும் நம் பங்கும்பாதி உள்ளது. வெளி உலகத்தின் மீது நமது ஆதிக்கத்தைச் செலுத்த இயலாது. ஆனால் நம் பங்காகிய பாதி நம் வசம் உள்ளது. அதனைத் தர மறுப்பதன் வாயிலாகத் துன்பத்தைத் தவிர்க்க இயலும்.

குழந்தைப் பருவம் முதற்கொண்டே நாம் பிறரையே குறைகூறி வருகிறோம். மற்றவர்களைத் திருத்த எப்பொழுதும் முயலுகிறோம், நம்மைத் திருத்திக்கொள்ள முயலுவதில்லை. நாம் எதனையடையத் தகுதி படைத்திருக்கிறோமோ அதனை அடைகிறோம். உலகம் கெட்டது; ஆனால் நாம் நல்லவர்கள் என்று கூறுவது பொய். வெளி உலகத்தையோ, மற்றவர்களையோ குறை கூறலாகாது. ஆண்மையுடன் நம்மிடம் உள்ள குறையினை ஒத்துக் கொள்ளுதல் வேண்டும்.

அனைத்துமறிந்த, மாசுமறுவற்ற, ஆற்றல் நிரம்பப்பெற்ற, ஆண்மை நிரம்பிய தெய்வ சொரூபம் நாம் என்று ஒருநிமிடம் பேசுகிறோம். மறுநிமிடமே அற்ப விஷயங்கள் நம்மைத் துன்பத்தில் ஆழ்த்துகின்றன. இதற்கு உலகம் பொறுப்பாளியாகுமா? வெளி உலகைக் குறை சொல்லும் இயல்பே நாம் சுயநலம் படைத்தவர்கள் என்பதனைக் காட்டுகிறது.

நாம் மற்றவர்களைப்பற்றிக் கவலைப்படாமல் நம்மை மாற்றி அமைத்துக் கொள்வோம். நெறியை ஒழுங்குபடுத்துவோம். குறி தானே சரியாகிவிடும். நம் வாழ்வு பண்பட்டுச் சீரிய முறையில் அமையும் பொழுதுதான் உலகம் சீரியதாகத் தெரியும். நம்மைத் திருத்திச் சீரியதாக அமைப்பதே நெறி. உலகம் திருந்தியமைவது குறி. நாம் திருத்தினால் நாடும் திருந்தக் காண்போம். ஆகையால் முதலில் நம்மை நாம் பண்படுத்துவோமாக.

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

ஆகவே உத்தமமான அரசனே! யார் இவ்வுலக வாழ்வில் மிகப்பெரிய நலனும் பயனும் அடைய விரும்புகிறார்களோ அவர்கள் எப்பொழுதும் ஹரிபஜனம் பண்ணட்டும்; யாண்டும் ஹரியைத் தியானிக்கட்டும்; அவன் புகழ் பாடட்டும். ஹரிஸ்மரணையில் இருக்கட்டும். ஹரி கதாகாலக்ஷேபம் கேட்கட்டும். யாரெல்லாம் பஞ்ச இந்திரியங்களின் வழியாகவும் ஆண்டவனின் புகழ் என்னும் அமிர்தத்தை அருந்துகிறார்களோ, அதில் மகிழ்ச்சி அடைகிறார்களோ அவர்கள் சாது ஹிருந் நிவாசனாகிய என் ஆண்டவனின், ஸ்ரீ ஹரியின் தாமரைத் திருவடியை அடைவார்கள்.

ஸ்கந்தம் 2 அத்தியாயம் 3

சுகர் சொன்னது: " உத்தமமான அரசனே! மரணத்தறுவாயில் இருக்கும் மனிதன் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றிக் கேட்டாய். நமது சாஸ்திரங்களில் இவ்விஷயம் பற்றி விளக்கியுள்ளபடி உனக்கு இயம்புகிறேன். மக்கள் தங்கள் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு அது அதற்கு ஏற்ற மூர்த்திகளை வணங்கி இஷ்டபூர்த்தி அடைகிறார்கள். இகலோக சுகங்களைப் பெற சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவனை வணங்குகிறார்கள். இவ்வுலகை நன்கு அனுபவிப்பதற்கு இந்திரியங்கள் கூர்மையுடனும், திறமையுடனும் இயங்கவேண்டும். இந்தக் கூர்மையையும் நன்கு அனுபவிக்கும் திறமையையும் பெற விரும்புகிறவர்கள் தேவேந்திரனை வணங்குகிறார்கள். யார் புத்திர சம்பத்தை வேண்டி நிற்கிறார்களோ அவர்கள் தக்ஷனையும், இதர பிரஜாபதிகளையும் வணங்குகிறார்கள். எவர் சௌபாக்கியங்களை விரும்புகிறார்களோ அவர்கள் துர்க்கா தேவியை வணங்குகிறார்கள். யார் தேக சக்தியை விரும்புகிறார்களோ (எப்போதும் சுறுசுறுப்பாக இருத்தல், இடையறாத உழைப்பு) அவர்கள் அக்னி தேவனை வழிபடுகிறார்கள். யார் பொருள் செல்வத்தை விரும்புகிறார்களோ அவர்கள் அஷ்ட வசுக்களை வழுத்துகிறார்கள். யார் வல்லமை, வீரம் வேண்டுமென விரும்புகிறார்களோ அவர்கள் ஆதித்யர்களின் தாயாகிய அதிதி தேவியை வணங்குகிறார்கள். யார் சுவர்க்க பதவியை விரும்புகிறார்களோ அவர்கள் பன்னிரண்டு ஆதித்தியர்களை வணங்குகிறார்கள். யார் ராஜ்யசம்பத், பதவியை விரும்புகிறார்களோ, அவர்கள் விஸ்வதேவர்களை வணங்குகிறார்கள். யார் நீண்ட ஆயுளை விரும்புகிறார்களோ, அவர்கள் அச்வினி தேவர்களை வணங்குகிறார்கள். யார் சத்துள்ள உணவு வேண்டுமென விரும்புகிறார்களோ, அவர்கள் பூமா தேவியை வேண்டுகிறார்கள். யார் தாங்கள் பெற்றுள்ள பதவி, செல்வாக்கு, அந்தஸ்து இவைகளைப் பாதுகாக்க நினைக்கிறார்களோ, அவற்றிற்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்களைப் போக்க நினைக்கிறார்களோ, அவர்கள் அந்தரிக்ஷத்தை வணங்குகிறார்கள். மேலும் இங்ஙனமே அழகை விரும்புகிறவர்கள் கந்தர்வர்களையும், பெயரையும் புகழையும் விரும்புகிறவர்கள் யக்ஞத்தையும், அறிவை நாடுகிறவர்கள் சரஸ்வதியையும், உத்தமமான மனைவியை வேண்டுகிறவர்கள் உமாதேவியையும், நற்குணங்களை வேண்டுகிறவர்கள் நாராயணனையும், வைராக்கியத்தை விரும்புகிறவர்கள் பரம புருஷராகிய விஷ்ணுவையும், ஆத்மாவை வேண்டுகிறவர்கள் பரமாத்மாவையும் வழிபடுகிறார்கள்.

யார் மேலே சொன்ன இந்த உலக சம்பந்தமான ஏதொன்றையும் விரும்பாமல் பரமனிடத்தில் ஆழ்ந்த தீவிர பக்தியை மட்டும் விரும்புகிறார்களோ அவர்கள் பரமபுருஷராகிய ஸ்ரீ விஷ்ணுவை வழிபடுகிறார்கள். மானுட வாழ்க்கையில் பக்தியை விடப் பெரும் பேறு, செல்வம், சௌபாக்கியம் வேறு என்ன இருக்கிறது? மேலே குறிப்பிட்ட தேவதைகளை வழிபட்டு வாழ்க்கையில் விரும்பியவற்றை எல்லாம் பெற்ற மானுடர்கள் சாதுசங்கத்தால் அவர்களின் மனது ஆண்டவனை அடைய வேண்டும் என்னும் முமுக்ஷுத்வம் எழப்பெற்றவர்கள் ஆவார்களாகில் அவர்கள் பாக்கியவான்கள். அப்படியல்லாது உலக இன்பங்களில் மூழ்கி விட்டார்களானால், கடவுள் ஞாபகம், பக்தி வரவில்லையானால் அவர்களின் முயற்சிகள் அனைத்தும் வீணே, வெறும் பாழே ஆகும்.

அன்பான அரசனே! இவ்வுலகை நாடுபவனைவிடப் பரமனை நாடுபவனே பாக்கியவான். அவனது வாழ்வு மிக்க பயனுடையது ஆகும். ஸ்ரீ ஹரியைப் பற்றியே எப்போதும் பேசுதலும், கேட்டலும், ஞான, வைராக்யத்தை வளர்க்கின்றன. அதன் மூலம் மானுடரை இயக்கிவரும், தூண்டிவரும் குணத்ரயம் வெல்லப்படுகிறது. உலகப் பற்றுக்கள், ஆசைகள் தாமாக மறைகின்றன. பிறகு மிச்சமிருப்பது என் ஆண்டவனே. அவன் ஆனந்த சொரூபி. ஜீவனும் அந்த ஆனந்த சொரூபியை அடைந்து பேரானந்தம், பூரண நிறை மனது, அமைதி பெறுகிறுன். ஆகவே தான் பக்தி யோகம் எளிதானதென்றும் முக்தி மார்க்கம் என்றும் சொல்லப்படுகிறது. யாருக்கு இவ் உலகப் பொருள்களை, உலகப் பேச்சுக்களை, உலக விவகாரங்களை ரசிக்க அனுபவிக்கப் பிடிக்கவில்லையோ, வெறுப்புத் தட்டுகிறதோ அதற்குப் பதிலாக ஸ்ரீ ஹரியின் கதாகால க்ஷேபம் கேட்டலில், புகழ்பாடுதலில், அவனையே நினைத்திருத்தலில் பேரின்பம் காண்கிறுனே அவனே நல்ல பக்தன். சரியான மார்க்கத்தில் அவன் சென்றுகொண்டிருக்கிறுன். அவனே இந்த ஜகத்தின் பிரபுவை, ஆண்டவனை அடைவான்.''

சௌனகமுனிவர் சூதரைக் கேட்டார்: "மஹா பண்டிதராகிய சூதரே! பரதகுலப் பெருமகனாகிய பரீக்ஷித்து, பரப்பிரம்மமே மானுட வடிவெடுத்து வந்துள்ள சுகதேவரிடம் வேறு என்ன எல்லாம் கேட்டாரோ அவற்றையும் விரிவாகச் சொல்லுவீராக. பரீக்ஷித்து மிகப் பெரிய வீரனுக மட்டுமின்றி மிகப் பெரிய பக்தனுகவும் உள்ளான். அவனது பாக்கிய வசத்தால் அங்கு வந்து திரண்ட உத்தம ரிஷிகளும் அந்தச் சபைக்கு நாயகன் போன்ற சுகதேவரும் மிக உயர்ந்த பாத்திரங்கள், ஸ்ரீ கிருஷ்ண பக்தர்கள் ஆவார்கள். ஏற்றத்தாழ்வு சொல்ல முடியாதபடி கேட்பவர், சொல்லுபவர், சூழ்ந்திருப்பவர் யாவருமே மிக உயர்ந்த வாழ்வும், பக்தியும் கொண்ட உத்தம திருக்கூட்டமாகும் அது. அந்தச் சபையின் மேன்மையை நினைத்தாலே உடம்பு சிலிர்க்கிறது. அத்தகைய தெய்வ சபையில் நடைபெற்ற உயர்ந்த சம்பாஷணையை நாங்கள் கேட்க மிக்க ஆவல் கொண்டுள்ளோம். ஐயனே ஒரு சிறுபகுதியையும் விடாமல் எங்களுக்குப் பகர்ந்தருளும். அங்குக் கேட்டவாறே விடாமல் பகர்ந்தருளும். சூரியோதயமும், சூரிய அஸ்தமனமும் வெறும் அர்த்தமற்ற செயல்கள் அல்ல. அவை மானுடரின் வாழ்வைக் குறைத்துக்கொண்டே வருகின்றன. நாள்தோறும் தேய்ந்துகொண்டே வருகின்ற அற்ப வாழ்நாளை வீணுக்கலாமா? அது மானுடருக்கு அழகா? ஸ்ரீஹரியின் புகழ் பாடாத வாய் என்ன வாய்? அவன் மகிமையைக் கேளாத செவி என்ன செவி? அவனது விபூதியைத் தியானிக்காத வாழ்வு என்ன வாழ்வு? என் ஆண்டவனே! நீ ஒருவனே சத்தியம். மரங்கள் வாழ்கின்றன. துருத்தி காற்றை வாங்கி வெளியே விடுகிறது. விலங்குகள் தோன்றுகின்றன, சிறிது காலம் வாழ்கின்றன, பிறகு மறைகின்றன. இவைகளைப் போன்று உயர்ந்த மானுடப் பிறவியை வீணுக்கலாமா? ஸ்ரீ ஹரியை நினைக்காத நாள் வீண்நாளே, பிறவா நாளே ஆகும். அவனை மறந்தால் இறந்தே போவேன். கடவுளை நாடாத மானுட வாழ்க்கைக்கும், நாய், பன்றி, கழுதை போன்ற இழிந்த சிற்றுயிர்களின் வாழ்க்கைக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. ஆண்டவனே ஜீவனின் முடிவான கதி.

ஸ்ரீஹரியின் கதையை, புகழைக் கேளாத செவி வெறும் துளைகளே ஆகும். ஸ்ரீ கிருஷ்ணனின் தெய்வீக மகிமையைப் பாடாத நாக்கு பூச்சியைப் பிடித்துச் சாப்பிடும் தவளையின் நீண்ட நாக்குக்கு நிகர். முடிதரித்திருந்தாலும் உயர்ந்த பட்டுத்தலைப்பாகை அணிந்திருந்தாலும் முகுந்தனை வணங்காத தலை உடலுக்கு வெறும் பாரமே. அது வெறும் கல்உருண்டையே ஆகும். கடகம், கங்கணம், வளையல் போன்ற விலை உயர்ந்த ஆபரணம் தரித்திருந்தாலும் ஸ்ரீகிருஷ்ணனைக் கண்டு கூப்பாத, அவனுக்குக் கைங்கர்யம் பண்ணுத கரங்கள் வெறும் மரக்கிளைகளுக்கு நிகரே ஆகும். கோமளநாயகன், திவ்விய மங்களவிக்ரஹன், சுந்தரசொரூபி, ஜகன்மோஹனன், என் பிரபு, ஜனர்த்தனனைக் கண்டு களிக்காத கண்கள் வெறும் மயில்பீலியில் உள்ள கண்ணுக்கு நிகரே ஆகும். அவனுடைய திருக்கோயிலை வலம் வராத, திவ்விய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போகாத கால்

கள் அடிமரம் போன்றனவே ஆகும். பக்தர்கள் திருக்கூட்டத்தில் சேராத சத்சங்கத்தை நாடாத வாழ்வு பாழே ஆகும். ஸ்ரீஹரியின் பாதங்களில் அர்ச்சிக்கப்பட்ட துளசிதளமும் பாதபூஜை செய்யப்பட்ட தீர்த்தமும் பக்த னுக்கு எவ்வளவு புனிதமானவை. கண்ணனை நினைந்து உருகாத நெஞ்சம் வெறும் கல்லே ஆகும். உத்தம பக்தனுக்கு ஹரியின்நாமத்தைக் கேட்டாலே மெய்சிலிர்க்கிறது, கண்ணீர் மல்கு கிறது, மனம் குழைகிறது. ஆ! உத்தமமான பக்தரான சூதரே! நல்லவேளையில் வந்தீர்கள். இதுவரை நீங்கள் சொன்ன தெய்வ விஷயங் களில் நாங்கள் ஐக்கியப்பட்டு, ஒன்றிப்போய் இருந்தோம். அந்தப் புனிதமான தெய்வ சபை யில் மேலும் நிகழ்ந்த சத்சம்பாஷணையை எங் களுக்கு உள்ளபடி விளக்கியருளுவீர்களாக.

ஸ்கந்தம் 2 அத்தியாயம் 4.

சூதர்சொன்னார்: உத்தமர்களே! சுகதேவரிட மிருந்து ஆத்ம தத்துவங்களை, கடவுள் தத்து வங்களைக் கேட்டதனால் உத்தமனான பரீக்ஷித் துக்கு ஏற்கனவே இருந்த ஸ்ரீ கிருஷ்ண பக்தி மேலும் ஓங்கி வளர்ந்தது. அவன் ஆட்சியில் இருந்தபோது அரசாட்சிப் பொறுப்பு இருந்த தால் மனதின் ஒரு பகுதி செல்வம், ஆட்சி, மனைவி, மக்கள், பந்து மித்திரர் ஆகியவர் கள் மீது செலுத்தப்பட்டது. இப்போதோ அவன் முழு மனதையும் ஸ்ரீ கிருஷ்ணனிடம் திருப்பினான். அவனால் உலகில் அனைத்தை யும்விட எளிதாகக் கண்ணனைப் பற்றவும்முடிந் தது. அவன் மிக ஆழ்ந்து ஸ்ரீ வாசுதேவரிடம் ஈடுபட்டான். பரீக்ஷித்து எந்தக் கேள்வியை சுகதேவரிடம் கேட்டானோ அதையே ஐயனே, நீரும் என்னிடம் கேட்டீர். பரீக்ஷித்து இங்ஙனம் சுகதேவரிடம் பகர்ந்தான்: "பர பிரம்மமே! தேவரீர் சர்வக்ஞர். அனைத்தையும் அறிந்தவர்; உணர்ந்தவர். கண்ணனைப்பற்றிய தங்களின் திருவாக்குகளைக் கேட்டதனால் என் அக்ஞானம் ஒழிந்தது. ஆயினும் ஆண்டவனே, என் பிரபுவின் அதி ஆச்சரிய மாயையை, விபூ தியை, லீலையைப் பற்றி எல்லாம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.கடவுள் எங்ஙனம் சங் கல்பிக்கிறார், மாயையால் எங்ஙனம் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய முத்தொழில்களைச் செய்கிறார், தன்னில் தானாய் இருப்பவரும், இரண்டற்றவரும் ஆன ஆண்டவன் எங்ஙனம் தன்னைப் பலவாக ஆக்கிக்கொள்கிறார்; அனை வரையும் எங்ஙனம் நாடகத்தில் போன்று நடிக்க வைக்கிறார், தானும் ஒரு கதாபாத்திர மாக இருந்து நடிக்கிறார்— என்பன எல்லாம் யாராலும் புரிந்துகொள்ள முடியாதவை. இந்த ஜகத்தை இயக்குபவன் அவனே; இயக்கப்படுப வனும்அவனே. கடவுளின் இந்தத்தெய்வீகமான மாயையை முனிவர்களும் அறியமாட்டார்கள். ஏகனாகிய என் ஆண்டவன் ஏககாலத்தில் தானே புருஷ-பிரகிருதி வடிவெடுத்து சிருஷ் டிக்கிறாரா அல்லது சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவராக வடிவெடுத்து சிருஷ்டிக் கிறாரா? தேவரீர் இந்தச் சிருஷ்டிக்கிரமத்தை இயம்பியருளுவீராக. தேவரீர் ஓங்காரத்தை உபாசித்து சப்த பிரமத்தை உணர்ந்தவர், சாக்ஷாத்கரித்தவர். யுக்தியினாலும் அனுபவத் தினாலும் மேலாம் பரப்பிரம்மத்தை அறிந்தவர். தேவரீர் மூலம் இந்தக் கடவுள் தத்துவங்களை எல்லாம் கேட்டு மகிழ விரும்புகிறேன்."

சூதர் சொன்னார்: இங்ஙனம் வினவப்பட்ட சுகதேவர் ஹிருஷீகேசராகிய கண்ணனைத் தியானித்து இங்ஙனம் பகரலானார்:

சுகர் சொன்னது: என் பிரபு பரம புருஷ னாகிய ஸ்ரீ கிருஷ்ணனை வணங்குகிறேன். அவன் மாயைக்கு யஜமானன். மாயை அவ னது விபூதி. அவன் மாயா ரஹிதனாகவும், மாயா சஹிதனாகவும் இருக்கிறான். சிருஷ்டிக்கு மூலப் பொருளாகிய முக்குணங்கள் அவனது சங்கல்பத்தால் வெளிப்படுகின்றன, செயல் படுகின்றன. அவைகளிலிருந்து பஞ்சபூதங் களும், அதிலிருந்து பிரபஞ்சமும் தோற்றத் துக்கு வருகின்றன. தோற்றத்துக்கு வந்துள்ள இப்பிரபஞ்சமே அளப்பரும் காட்சி, வளப் பரும் தன்மையாக உள்ளது. அதற்கு ஆதார மாக உள்ள பர வாசுதேவனின் நிஜ சொரூ பத்தை அளக்க வல்லவர் யார், முழுதும் உணர வல்லவர் யார்? தனது சிருஷ்டிப் பொருள்கள் யாவற்றிலும் ஜீவர்கள் அனைவரின் உள்ளும் அவன் அந்தர்யாமியாக உள்ளான். அவனது லீலா விசித்திரம் நம்மால் அறிய முடியாதது.

என் பிரபு ஸ்ரீகிருஷ்ணனை மீண்டும் மீண்டும் வணங்குகிறேன். துஷ்ட நிக்ரஹனும், சிஷ்ட ரக்ஷகனும், தர்ம கோப்தாவும் ஆன என் பிரபு

சத்வகுண மூர்த்தி. அவன் அருளாலேயே பரமஹம்ஸர்கள் அவனை உள்ளபடி அறிகிறார்கள். இவ்வுலக இன்பங்களை, உலக ஆசைகளை அறவே துடைத்துவிட்டுத் தனது அனைத்தையும் பகவானிடத்தில் சர்வ பரித்தியாகம் பண்ணின யோகி, பக்தன் அடையும் மிக உயர்ந்த பாரமார்த்திக நிலை பரமஹம்ஸ நிலையாகும். தீனபந்து, பக்தவத்சலன், அனாத ரக்ஷகன், ஆபத்பாந்தவன், சரணாகதவத்சலன் ஆகிய பகவான் என்றும் தன் பக்தர்களை ரக்ஷித்து வருகிறான். உண்மையாகத் துறந்தவர்களும், உண்மையாகப் பற்றற்றவர்களுமே என் ஆண்டவனை அடைய முடியும். என் பிரபு ஷட்குண சம்பன்னன், அதே சமயம் அவன் குணாதீதன். அவன் யாண்டும் சத் சித் ஆனந்த நிலையில், தன்னில் தானாய், தன் நிஜசொருபத்தில், நிலை பெற்றிருக்கிறான். என் ஆண்டவனின் புகழைப் பாடினால் பாபங்கள் மாயும். அவரது ஸ்மரணையும், பூஜையும் மனதைத் தூயதாக்கும். அவன் புகழைக் கேட்பதால் நல்ல ஸம்ஸ்காரங்கள் பெருகும், புண்ணியம் வளரும். அத்தகைய என் பிரபுவை மீண்டும் மீண்டும் வணங்குகிறேன். புண்ணிய ஸ்லோகங்களால் பாடுகிறேன். ஆண்டவனுக்குச் சேவை செய்வதால், அவரது தாமரைத் திருவடிகளை சதா நினைத்திருப்பதால் உலக பயம் போகின்றது; அபயம் கிடைக்கிறது; வாழ்வின் முடிந்த பயனாகப் பிரம்ம நிர்வாணம் கிடைக்கிறது. அத்தகைய ஆண்டவனின் திருவடிகளை சதா நினைக்கிறேன், துதிக்கிறேன்.

வாழ்வில் நல்லவைகளையே செய்கிறவர்களுக்கே கடவுளை நினைக்கவும் அடையவும் முடிகிறது. தவசியர், இந்திரிய நிக்ரஹம் பண்ணுகிறவர், தர்மசீலர், மனமுவந்து தம்மிடமுள்ளவைகளைப் பிறர்க்குத் தானமாக வழங்குபவர், சேவை, தொண்டு, தியாகம் பண்ணுகிறவர், சாஸ்திரங்களின் உட்பொருளை உணர்ந்தவர்கள், சத்காரியங்களையே செய்கிறவர் ஆகியோர் தங்களின் செயல்கள், சாதனங்கள் யாவற்றின் பலனையும் பகவானுக்கு அர்ப்பணம் பண்ணுகின்றனர். அந்தப் பெருமை மிக்க புனிதமான பகவானின் புண்ணியத் திருவடிகளை மீண்டும் மீண்டும் வணங்குகிறேன். கடவுள் ஸ்மரணையால் ஒரு மனிதன் பரம பாவனனாகிறான். நல்லார் ஒருவர் தோன்றினால் அவரது குலமும், இனமும், தேசமும் நன்மை அடைகின்றன. அத்தகைய அடியார், பக்தர் ஒருவரைச் சரணடைந்தால், அவரது சங்கம் கிடைத்தால், எல்லா நலன்களும் வந்தமைகின்றன. பக்தன், பகவான், பாகவதம் மூன்றும் ஒன்றேயாகும். அந்தப் பெரிய பொருளை மீண்டும் மீண்டும் வணங்குகிறேன். ஓ, பிரபு! என்றும் என்பால் கிருபையுடன் இருப்பீராக. ஸ்தித பிரக்ஞர்களால் சதா கால பூஜை செய்யப்படுகிறவரும், இந்த ஜகத்தின் மாதா, பிதா, தாதாவாக இருப்பவரும், இப்பிரபஞ்சத்தின் அதிநாயகரும், ஸனாதன தர்மமாக, சீலமாக வடிவெடுத்திருப்பவரும், பக்தர்களால் ஸதா தியானிக்கப்படுபவரும், பராபக்தி நிலையில் சதா இமைக்காது பக்தியுடன், ஆச்சரியத்துடன், உருக்கமுடன் தர்சனம் பண்ணப்படுகிறவரும் ஆன ஸ்ரீ கண்ணன் எனக்கு என்றும் அருள்புரிவாராக.

ஸ்ரீ லக்ஷ்மிதேவியின் பிரபுவும், பதியும் ஆன பகவானே! என்பால் என்றும் கிருபை கூர்வீராக; அருள்பாலிப்பீராக. யக்ஞமூர்த்தியும், ஜகந்நாதனும், விஸ்வமூர்த்தியும், சத்திய நாராயணனும், சித் சொருபியும், பூமிநாதனும், கோபிநாதனும், வார்ஷ்ணேயனும், தேவகீ நந்தனனும் ஆகிய கண்ணபெருமானே! உன்னை மீண்டும் மீண்டும் வணங்குகிறேன்.

கோவிந்தா, கோபாலா, உயிர்களை அறிபவனும், பரிபாலிப்பவனும், நல்வழியில் நடத்துபவனும் ஆகிய புருஷோத்தமா, எனக்கு அனுக்கிரஹம் புரிவீராக. யார் கல்ப காலத்தின் தொடக்கத்தில் (பிரளயத்தின் முடிவில்) பிரம்மதேவனுக்கு சிருஷ்டியைப் பற்றி ஞாபக மூட்டுகிறாரோ, யாருடைய கட்டளையினால் சரஸ்வதி தேவி, ஸ்ரீ ஹரியின் உந்திக் கமலத்தில் தோன்றிய பிரம்மதேவரின் வாயினின்று எல்லாக் கலை ஞானங்களையும், எல்லா அபர வித்தைகளையும் தோற்றுவித்தாளோ, அந்தப் பரவாசுதேவரை, என் பிரபுவை யாண்டும் வணங்குகிறேன். என் பிரபு என் வாக்கில் வெளிப்படுவாராக. என் உள்ளத்தின் உண்மைகளைக் கடவுள் தத்துவங்களை எல்லாம் உள்ளபடி விளங்கவைப்பாராக.

சனாதன தர்மத்தின் சிறப்புகள்

(திரு. V. S. நரசிம்மன்)

மனிதன் வெளி உலகைத் தனது ஜாக்ரத் (விழிப்பு) நிலையில் அறிகின்றான். உலகு மனிதனுக்குப் புறம்பானது. கனவு நிலையில் அவனுக்கு ஓர் உலகம் உள்ளது. கனவு-உலகம் இந்த உலகத்தைப் போன்றே அவனது அனுபவத்திற்குத் தெரிகின்றது. கனவு-உலகம், நனவு-உலகம் இவை இரண்டிற்கும் இடையே பொதுவான பல அம்சங்களை எடுத்து இயம்பலாம். ஒரு வித்தியாசமும் எளிதில் உணரப்படும். நனவு-உலகு ஆங்கே வாழ்கின்ற அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது; ஆனால் கனவு உலகோ கனவு காண்பவனுக்கு மட்டுமே உரியது, தனித்தன்மை உடையது. மூன்றாவதாக உள்ள கனவற்ற உறக்க நிலை, இவை இரண்டிற்கும் மாறுபட்டது. இந்த நிலையில் மனிதன் தனது தனித்தன்மையை இழந்து விடுகின்றான். உலகம் எதுவும் அவன் அனுபவத்திற்குக் கிடையாது.

உலகமானது காலம், இடம், காரண காரியங்கள் என்ற முப்பிடியால் உருவாகின்றது. இந்த முப்பிடியும் அங்கே அழிகின்றது. அப்போது எஞ்சி உள்ளது எது? களங்கமற்ற நிர்விகல்ப உணர்வு மட்டுமே!

போக்கு, வரவு உள்ள எவையும் நித்தியம் அல்ல. நனவு, கனவு, ஆழ்ந்த உறக்கம்-மூன்று நிலைகளும் (அவஸ்தா த்ரயம்) போக்கும், வரவும் உள்ளவை. அவை அநித்தியம். ஆயின் இம்மூன்று நிலைகளையும் 'அனுபவிக்கும்' சாக்ஷி மாறாதவன் அன்றோ! அனுபவங்கள் மெய் யல்ல; அனுபவிக்கின்றவனே மெய், சத் பொருள். அனுபவங்கள் ஆரம்பித்து, முடிகின்றன. அனுபவிக்கின்றவன் மாறாது இருக்கின்றான்.

பாரத தேசத்தில் வெள்ளையன் ஆட்சியின் கடைசிப் பகுதியில் மைசூர் மாநிலத்தின் அரசராகத் திகழ்ந்தவர் ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார். அவர் ஒருமுறை வெளிநாட்டிற்குப் பயணம் செய்தார். அவருடன் ஸ்ரீ V. சுப்பிரமணிய ஐயர் என்ற வேதாந்தியும் சென்றார். மிகச் சிறந்த விஞ்ஞானி ஐன்ஸ்டீனை அவர்கள் சந்தித்தனர். "இந்தியாவில் இருந்து வந்துள்ள தத்துவ ஞானி" என்று ஐயர் அவர்களை மகாராஜா அறிமுகம் செய்தார். "அது எப்படி இயலும்! அடிமைப்பட்டிருக்கும் ஒரு நாட்டில் தத்துவமேதை தோன்றவே முடியாதே!" என்று விஞ்ஞானி மறுதலித்தார். "நீங்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அடிமைகள். தத்துவ ஞானிக்கு முதல் தகுதி அவன் சுதந்தரம் பெற்றிருப்பது தானே! அடிமைத்தளையில் கட்டுண்டு கிடப்பவன் உயர்ந்த, மேலான தத்துவக் கருத்துக்களைச் சிந்திப்பது என்பது இயலாத காரியமே." இவ்வாறு பலப்பல பேசினார். அவருடைய வாதம் முழுவதையும் ஐயர் அமைதியாகக் கேட்டார். அதன் பின் பேசினார்.

"டாக்டர் ஐன்ஸ்டீன்! மிக்க நன்று. ஒரு அடிமை தத்துவ ஞானியாக இருக்க முடியாது என்ற உங்கள் கருத்தை நான் முற்றிலும் ஏற்றுக்கொள்கிறேன். இன்று நாங்கள் பிரிட்டிஷ் அரசுக்கு அரசியல் ரீதியாக அடிமைப்பட்டுள்ளோம். இந்த நிலை இடையே நேர்ந்த ஒரு விபத்து; காலப்போக்கில் தானே மாறி விடக் கூடியது. ஆனால் நீங்கள் இதுவரை சிந்தித்துப் பார்க்காத ஒரு கருத்தைக் கூறுகின்றேன், கேளுங்கள். என்றைக்குமே அகத்தில் உள்ள கொடியவன், புறத்தே உள்ள கொடியவனைக் காட்டிலும் பன்மடங்கு பயங்கர எதிரி ஆகின்றான். புறத்தே உள்ளவனை எளிதில் வெல்லலாம்; அகத்தே இருப்பவனை அழித்தல் கடினம். தன்னுடைய மனதிற்கு அடிமையாக உள்ள ஒருவன் நிலையை எண்ணிப்பாருங்கள். அரசியல் காரணத்திற்காக அடிமையாக இருப்பவனைக் காட்டிலும், அவனது நிலை மிகவும் பரிதாபகரமானது! உங்களுடைய மனம் அதிகார வெறி பிடித்து, உங்களை ஒரு பொம்மையென ஆட்டிப் படைக்கின்றது அல்லவா? நனவு உலகத்தில் ஏதோ சிறிதளவு சுதந்தரத்தை உங்களுக்கு வழங்குகின்றது. கனவிலோ உங்களைச் சுவர்க்கத்திற்கும், நரகத்திற்கும் இழுத்துச் செல்கின்றது. ஆழ்ந்த உறக்கத்திலோ உங்களை எதற்கும் பயன்படாதவாறு மாற்றி விடுகின்றது! மனதின் பிடியில் அகப்

பட்டுத் திணறும் ஓர் உயிர் என்பது தான் உங்களைப் பற்றிய அப்பட்டமான உண்மை. அதை அறியாது, உங்களை ஒரு சுதந்தர மனிதன் என்று அகம்பாவத்தோடு, பெருமிதத்தோடு கூறுகின்றீர்களே! இது எப்படிச் சாத்தியம்? புறக்கட்டுப்பாடு ஒன்றும் பெரிதன்று; மனதிற்கு அடிமையாக இருப்பதே அடிமைத்தனத்தில் கேடு கெட்ட கடை நிலையாகும். இத்தகைய பரிதாபகரமான உங்களது நிலையைப் பற்றி எப்போதாவது சிந்தித்துப் பார்த்தீர்களா?''

டாக்டர் ஐன்ஸ்டீன் அசந்து விட்டார். இத்தகைய சிந்தனை ஓட்டம் அவர் அறியாத ஒன்று. தனக்குப் புதியதோர் ஞானத்தைத் தந்த ஐயரைப் பாராட்டி, மகிழ்ச்சியோடு கை குலுக்கினர். தத்துவக் கருத்தரங்கில் தலைமை வகித்துப் பேசும் வாய்ப்பையும் தந்தார்.

இந்தப் பிரச்சினை அனைவருக்கும் பொது. வேதாந்தம் தத்துவ பூர்வமாக இதை அணுகுகின்றது. மனதை வெற்றி கொள்வதே வாழ்வின் லட்சியம். மதங்கள் அனைத்தும் இந்த லட்சியத்தை ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளன. மனதைப் பிரகாசிக்கச் செய்து, ஆனால் அதற்குப் பந்தப்படாமல், அதற்கும் ஆதாரமாக உள்ளதே ஆத்மா; ஆத்ம ஞானமே நம் வாழ்வின் லட்சியம்.

பாரத நாட்டில் சுற்றுப் பயணம் செய்த ஒரு ஜெர்மானியப் பேராசிரியர் தபோவனம் வந்திருந்தார். அவர் ஒரு பிரச்சினையைக் கிளப்பினர். "தற்கால மனிதன் பதைபதைப்பும், அமைதியற்ற வாழ்வும் உடையவன். தூக்க மாத்திரை இல்லாது அவனால் உறங்க இயலவில்லை; அவனுடைய அமைதி இன்மைக்கு என்ன காரணம்? அதற்கு மாற்று யாது?'' அவருக்குக் கூறிய பதிலாவது: "பிரச்சினைக்கு முதல் காரணமே அவன்தான். அவன் வரம்புகடந்த ஆசைகளின் வயப்பட்டு விட்டான்! தன்னுடைய ஆசைகளைப் பெருக்கும் அளவு, தான் முன்னேற்றம் அடைவதாக அவன் கருதுகின்ருன். ஆனல் அதிக ஆசை அழிவிற்கு அடிகோலும்! ஆசை பிறப்பதே அறியாமையினல்; ஆசைகள் நிறைவேறவில்லை எனின் அவன் படபடப்பு அடைகின்ருன். பறவைகளும், விலங்குகளும் தூக்க மாத்திரை இன்றி நன்கு உறங்குகின்றன! மனிதனைக் காட்டிலும் இந்த விஷயத்தில் அவை எவ்வளவோ மேல்! சரீரத்தின் தேவைகளைச் சுருக்கிக்கொண்டே போவது ஞானத்திற்கு அறிகுறி. எளிய வாழ்வும், சீரியசிந்தனையுமே (Simple living and high Thinking) வாழ்வின் லட்சியமாக வேண்டும். சரீர அபிமானத்தால் ஆசைகள் பெருகுகின்றன. சரீர அபிமானத்தைத் துறத்தல், தனது தேவைகளைச் சுருக்குதல் இரண்டும் இணையாக நடைபெறவேண்டும். அதிக ஆசைகளைத் துறந்த ஒருவனுக்கு உறக்கம் இல்லையே என்ற கவலையே கிடையாது. எனவே இத்தகைய வாழ்வை மேற்கொள்ளுமாறு மதம் போதிக்க வேண்டும். உலகில் இரு; ஆனல் உலகத்துடன் ஒன்றித்து விடாதே.''

விஞ்ஞானமும், ஆன்மீகமும் எதிரிடையானவை அல்ல. விஞ்ஞானம் வெளி உலகை ஆராய்கின்றது. எனவே அது உலகுடன் தொடர்பு உள்ளது (secular). ஆனல் மனிதனின் அனைத்துப்பிரச்சினைகளையும் விஞ்ஞானம் தீர்க்க முடியாது. மதம் மனிதனின் இதயத்தில் உறையும் தெய்வீகத்தைப் பற்றி உரைக்கின்றது. எனவே இதைப் புனிதமானது (sacred) என்கின்ரேம். உலக வாழ்வின் அனைத்துப் பிரச்சினைகளையும் மனிதன் ஆன்மீக ஞானத்தின் மூலம் எளிதில் தீர்க்கின்ருன். மரணம் என்பது உடலுக்கு மட்டுமே நிகழ்வது; அது ஆத்மாவைத் தீண்டாது. மனிதன் சரீரம் அல்லன். மனித வாழ்வின் லட்சியம் உலகத்தில் தனது ஆசைகளைப் பூர்த்திசெய்து இருப்பது அன்று. வாழ்வு, மரணம்; இன்பம், துன்பம்; ஆரோக்கியம், வியாதிகள்; வெற்றி, தோல்வி; லாபம், நஷ்டம்; புகழ்ச்சி, இகழ்ச்சி– என்று உள்ள இருமைகளை என்றும் தவிர்க்க இயலாது. உலகம் என்ருலே அது இருமைகளின் இருப்பிடமே! எனவே உலகின் நடைமுறை இயல்பைப்பற்றிக் கவலைப்படாது, அதனைத் தனது பரிபாகத்திற்குப் பயன்படுத்தவேண்டும். நல்லொழுக்கம், ஆன்மீகம் இவற்றைப் பயில்விக்கும் பயிற்சிக்களமே இது! இதை நன்கு பயன்படுத்தக் கற்றுக்கொண்டால், மனிதன் ஆன்மீக முன்னேற்றம் அடைவது திண்ணம்.

இவை அனைத்தும் ஆன்மீகத்தின் அடிப் படைகள். உலகில் உள்ள மதங்கள் தமது கால, தேச, சூழ்நிலைக்கு ஏற்ப இவற்றைச் சிறிது மாற்றலாம். உலக வாழ்க்கையில் ஒரு சில குறைகள் இருந்தாலும் மனிதன் வாழ முடியும்; ஆனால் அவனுடைய வாழ்விற்குக் களனாகத் திகழும் ஆன்மீகம் இன்றி அவன் வாழ முடியாது. மதத்தில் நம்பிக்கையும், மூடக்கோட்பாடும் கலந்தே உள்ளன. அறிவுக் குப் பொருத்தமற்றதைக் காலப்போக்கில் எடுத்து எறிவது முன்னேற்றத்திற்கு அறிகுறி. அவற்றில் சிலவற்றை ஆராயலாம்.

1. கடவுள் ஆறு நாட்களில் வெறுமையில் (சூனியத்தில்) இருந்து உலகைப் படைத்தார்; அந்தக் களைப்பைப் போக்க ஏழாவது நாள் ஓய்வு எடுத்துக்கொண்டார். சூரியன், சந்தி ரன், நட்சத்திரங்கள் அனைத்தும் உலகை அலங்கரிக்கக் கடவுளால் உண்டாக்கப்பட்டன. இது ஆரம்ப நிலையில் உள்ள சாதாரண மத வாதியின் கூற்று.

தத்துவத்தில் புகட்டப்படும் உண்மை யாது? பரம்பொருளின் புறத்தோற்றமே இப்பிரபஞ் சம். பரம்பொருள் என்றும் நித்தியமானது. உலகின் தோற்றமும், அழிவும் காலக்கிரமத் தில் நிகழ்ந்து வருகின்ற நிரந்தரமான செயல் கள். பரம்பொருளும் பிரபஞ்சமும் வேறானவை அல்ல. எனவே பிரபஞ்சமும் நித்தியமானதே.

2. கடவுள் உலகிலுள்ள மக்களைக் கண் காணித்தபடி தமது சிம்மாசனத்தில் பரமண்ட லத்தில் அமர்ந்துள்ளார். அவர் நடுநிலைமை வகிப்பது கிடையாது. தனக்கு வேண்டியவர் களிடம் பட்சபாதமாக நடந்துகொள்கிறார். தம்முடைய கட்டளையை மீறி நடப்பவர்களைத் தண்டித்து மீளா நரகத்தில் ஆழ்த்துகிறார்.

இந்த நம்பிக்கை அறிவற்ற மனிதர்களால் பின்னப்பட்டுள்ளது. இது தத்துவத்திற்குப் பொருந்தாது!

3. "ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்யக் கூடாது; பிரார்த்தனையில் கழிக்கவேண்டும்" என்ற (Sabbath day) விதிமுறையைச் சிறிதும் பிறழாமல் கடைப்பிடிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் கடவுளின் கோபத்திற்கு ஆளாகமாட்டோம்.

இந்தக் கருத்தும் அறியாமையில் இருந்து பிறந்த கற்பனைக் கட்டுக் கதையே! எல்லா நாட்களுமே புனிதமானவை; எந்த நாளாயி னும் சரி, அதை மனிதன் நல்ல முறையில்பயன் படுத்தவேண்டும்.

4. வடிவங்களையும், சிலைகளையும் வணங்கு பவர்கள் மீது கடவுள் கடுங்கோபம்கொண்டு அவர்களைத் தண்டிக்கிறார்—இதுவும் பொரு ளற்ற வாதமாகும். மனதில் தோன்றும் எண் ணங்கள் யாவும் மனதின் வடிவங்கள் ஆகும். அவை புறத்தோற்றத்தோடு பொருந்துகின் றன. கடவுளைப்பற்றிய எண்ணமே ஒரு வடி வம்தான். அந்த வடிவத்தை நினைத்துப் பாரா மல் வழிபாடு செய்வது என்பது அசாத்தியம். மனிதன் தானே வடிவம் உடையவனாதலால், கடவுளையும் அவ்வாறே வழிபடுகின்றான்.

5. இயற்கையின் நடைமுறைகளும், இறை வனின் திட்டமும் ஒன்றே என்கிறது வேதாந் தம். பரிணாமத்தில் கீழான நிலையிலிருந்து மேல் நிலைக்குச் செல்வதே படைப்பின் நோக்க மாகும். இயற்கையே இதற்கு மறுதலிக்க முடியாத அத்தாட்சியாக விளங்குகிறது. எல்லா உயிர்களின் ஒருங்கிணைந்த தோற்ற மான இந்தப் பிரபஞ்சமே பரம்பொருள் என அழைக்கப்படுகிறது. இத்தகைய அமைப்பில் மனிதன் ஒருவனுக்கு மட்டும் ஒரே ஒரு பிறவி யும், ஒரு குறிப்பிட்ட வாழ்நாளும் கடவுளால் கொடுக்கப்பட்டுள்ளன என்னும் வாதம் பொருந்தாது. மனிதன் இந்தப் பேரமைப்பில் பொருந்துமாறு தன்னைப் பண்படுத்திக்கொள் ளும் வரை அவன் மீண்டும் மீண்டும் பிறவிகள் எடுத்தே தீரவேண்டும்.

6. அழிந்துபோன உடல்களையே கர்த்தர் மீண்டும் பிறவியெடுக்கச் செய்வார். நமக்குச் சொல்லத் தெரியாத கடைசித் தீர்ப்புத் திரு நாளில் இது நிகழும்—இதுவும் ஆதாரமில் லாத கட்டுக்கதையாகும். கணந்தோறும் நமக் குக் கட்டளையிட்டுக் கொண்டிருக்கும் மனச் சாட்சியே நமது உண்மையான தீர்ப்பு ஆகும். அது தன்னை மேல்நிலைப்படுத்துவதற்கு யாண் டும் உதவுகிறது.

7. இயற்கையின் திட்டத்தில் எவையெல் லாம் நிகழக்கூடுமோ அவையெல்லாம் இப் பொழுது, இந்தப் பிரபஞ்சத்திலேயே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இந்தியாவுக்கு வேண்டிய கல்வி

(ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் 1897 ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் தேதி டார்ஜிலிங்கிலிருந்து ஸ்ரீமதி சரளா கோசலாவுக்கு எழுதிய கடிதத்தின் தொடர்ச்சி)

இன்றைக்கு நம் குழந்தைகள் பெறும் கல்வி எதிர்மறையில் அமைந்துள்ளது. பள்ளி செல்லும் பையன் கற்றுக்கொள்வது ஒன்றும் இல்லை. தன்னிடத்தில் இருக்கின்ற நல்ல பண்பை இழந்து விடுவதுதான் இன்றையக் கல்வியின் பயனாக இருக்கிறது. மாணாக்கர்களிடம் சிரத்தையைக் காணமுடிவதில்லை. வேதவேதாந்தத்தினுடைய உட்பொருள் சிரத்தையே ஆகும். எமனையே கேள்வி கேட்பதற்கு நசிகேதனைத் தூண்டியது அவனிடம் இருந்த சிரத்தையே ஆகும். சிரத்தையால் தான் இவ்வையகமே இயங்கி வருகிறது. சிரத்தை போய்விட்டால் வையகத்தில் எதைச் சாதிக்க முடியும்? அறிவிலி, சிரத்தை இல்லாதவன், நம்பிக்கை இல்லாதவன் அழிந்து போகிறான். ஆகையால் சிரத்தை இல்லாத நாம் அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றோம். இதற்குப் பரிகாரம் உண்மையான கல்வியைப் பரப்புவதே ஆகும். முதலில் ஆத்மாவைப்பற்றிய ஞானம் வேண்டும். ஆத்மஞானம் என்று நான் கூறுமிடத்து சடை முடி வளர்த்து, கையில் தண்டும், கமண்டலமும் கொண்டு, மலைக் குகைக்குள் சென்று வசிக்க வேண்டுமென்று உலகம் கருதுவதை நான் கூறவில்லை. உலகபந்தத்திலிருந்து நம்மை எதைக்கொண்டு விடுவித்துக்கொள்ள முடியுமோ அதைத்தான் ஞானம் என்று கூறுகிறேன். உலகத்திலிருந்து நம்மை விடுவித்துக்கொள்ள உதவும் ஞானம் சாதாரண உலகப்பொருள்களைப் பெறுவதற்கு உதவாமல் போய்விடுமா? நிச்சயமாக ஞானத்தைக் கொண்டு உலகப் பொருளைப் பெற்று விடலாம். முக்தி, வைராக்கியம், தியாகம் ஆகிய இவைதான் உயர்ந்த இலட்சியங்கள் ஆகும். நம்மை மரணம் என்னும் பெரிய பயத்தினின்று காப்பாற்ற தர்மத்தின் சிறு அம்சமே போதும். துவைதிகள், விசிஸ்டாத்வைதிகள், அத்வைதிகள், சைவர்கள், வைணவர்கள், சாக்தர்கள், பௌத்தர்கள், ஜெயினர்கள் இன்னும் இவர்கள் போன்ற மற்ற பிரிவினர்கள் அனைவரும் ஜீவான்மாவிடம் அளவற்ற சக்தி மறைந்து கிடக்கிறது என்பதில் ஒன்றுபட்ட கருத்து உடையவர்களாக இருக்கிறார்கள். எறும்பு முதல் ஞானி ஈறாக இடையிலுள்ள அத்தனை உயிர்களிடத்திலும் ஆத்மா குடிகொண்டுள்ளது. ஆனால் ஆத்மா வெளிப்பட்டிருக்கும் தன்மையில்தான் வேறுபாடு இருக்கின்றது. வாய்க்காலில் செல்லும் நீருக்கு ஏற்பட்டுள்ள தடையைக் குடியானவன் போக்குவது போன்று நம்மிடத்திலுள்ள அறியாமை என்னும் தடையைப் போக்கவேண்டும். தக்க சூழ்நிலையும், தக்க வாய்ப்பும் கிடைக்குமிடத்து நம் உள்ளிருக்கும் ஆத்ம சக்தி வெளிப்படுகிறது. புல்லினிடத்தும் கடவுளிடத்தும் ஒரே சக்திதான் இருக்கின்றது. புல்லினிடத்து எச்சக்தி மறைந்து கிடக்கின்றதோ, தெய்வத்தினிடத்தில் அச்சக்தி முற்றும் தோற்றத்தில் இருக்கிறது. அந்த ஆன்ம சக்தியை வெளிப்படுத்தும் செயலை வீடுவீடாகச் சென்று செய்து வரவேண்டும். ஒவ்வொருவரிடத்தும் ஆத்ம சக்தியை வெளிப்படுத்துவதற்கான சூழ்நிலையையும், காலத்தையும் உண்டுபண்ண வேண்டும். அதுதான் உயிர்களுக்கு நாம் செய்யும் சேவையாகும். ஆத்ம சக்தியை வளர்ப்பதே அருட்பணி.

பண்பாட்டுக் கல்வியைப் போதிக்கும் ஆசிரியனின் தகுதிகள் யாவை? வேதங்களைப் பயிற்றுவிக்கும்போது அவன் வார்த்தைகளுக்கு அடிமையாகிவிடலாகாது. தனது உள்ளுணர்வில் அவற்றின் உயிரோட்டத்தை அறிபவனாக, எண்ணத்தினாலும் பாபங்கள் புரியாதவனாக, மாணவனிடம் இருக்கும் அறிவுச் சுடரைத் தூண்டுபவனாக, மாணவனின் பாங்கினை முழுவதுமாக மாற்றியமைக்கும் வல்லமை படைத்தவனாக அவன் இருக்கவேண்டும். புகழ், பெருமை, செல்வம் இவற்றுக்காக அன்றி அன்பின் காரணமாகவே அவன் பணியாற்ற வேண்டும்.

— சுவாமி விவேகானந்தர்.

வாழ்க்கை தரும் பாடம்

(சகோதரி நிவேதிதையின் ஆங்கிலக் கட்டுரையை யதீஸ்வரி கிருஷ்ணப்ரியா மொழிபெயர்த்தது.)

கர்ம பூமியாகிய இவ்வுலகில் மக்களுக்கு அமையும் வாழ்க்கையை மேலோட்டமாகக் கவனித்தால் அது கொடுக்கும் காட்சி ஒரு விதமானது. இங்கு ஏழை எளியவர்களுக்கு ஒன்றன்மேல் ஒன்ருகக் கிடைக்கும் அடிகளெல்லாம் அவர்களை ஏழைகளாகவே, சமுதாய அமைப்பில் கஷ்டப்பட வேண்டிய கூட்டமாகவே வைத்து விடுவதுபோல் தோன்றும். செல்வந்தர்களுக்கோ வாழ்க்கை மேலும் மேலும் சலுகைகளையும் வசதிகளையும் வழங்கி, எதிர்ப்பு என்பதே இல்லாத இனிய அனுபவமாக ஆகிவிடுவது போல் தெரியும். இதே வாழ்வை ஆழ்ந்து நோக்கினல் நமக்கு வேருேர் உண்மை புலனகும். ஏழைக்குக் கிடைக்கும் அடிகளெல்லாம் உண்மையில் அடிகளல்ல, அனுபவங்கள். ஆனல், வசதிகள் குறையாத செல்வந்தன் வாழ்க்கையினின்றும் பெறுவதை விட வறியவன் அதிகம் பெறுகிருன். அவனே வாழ்விலிருந்து அதிகம் கற்றுக் கொள்கிருன். வளத்தில் இல்லாத இந்தச் சிறப்பு வறுமையில்தான் உள்ளது.

பணிவிடை புரிதல், வறுமை, உதவியற்றிருத்தல் இவையெல்லாம் உறுதிப்பாடே வடிவெடுத்தவர்களுக்கு வாழ்வைப் பற்றிய உண்மையைக் கற்றுக் கொடுக்கும் பெரும் கல்விச் சாலைகளாம்.

பல்வேறு தன்மையுடைய மக்களைச் சமாளிக்கவேண்டிய பொறுப்பில் இருப்பவனுக்குத் தன்னுடைய ஒவ்வொரு சொல்லும் செயலும் மற்றவர்களால் எப்படிப் புரிந்துகொள்ளப் படும் என்று தெரிந்து கொள்வது அவசியமாகிறது. அத்தகைய அறிவைப் பெற்ற நிர்வாகி ஒருவனுக்குத் தான் சமுதாயத்தின் சிந்தனைப் போக்கைப் புரிந்துகொள்ள இயலும். அவனே தன் சுயமரியாதைக்கு இணையான மரியாதையைப் பிறர்க்கும் கொடுப்பான். ஏனெனில் சுயமரியாதை, கண்ணியம் என்பது ஆளும் அரசனுக்கும் ஆளப்படும் குடிமகனுக்கும் ஒன்றே. அதை வெளிப்படுத்தும் நடை உடை பாவனைகள் வேண்டுமானல் மாறலாம். வீறுகொண்டு எழும் சக்தியின்மையால் அடங்கிக்கிடப்பது பணிவிடையோ கீழ்ப்படிதலோ ஆகாது. தொண்டு செய்தல் ஒருவனிடம் அடிமை மனப்பான்மையை வளர்த்துவிடக்கூடாது. தொண்டு செய்வதற்கிடையில், தேவைப்படும் எந்தக் கணத்திலும் ஆளவல்லவனய் இருக்க வேண்டும். இத்தகைய வீரனின் சேவையையே பெரியவர்கள் விரும்புவார்கள். அடிமையின் பணிவிடையை அன்று. பணிபுரிய வந்தவனுக்கும் சுயமரியாதை உண்டு; அதற்குப் பங்கம் விளைவித்தால் அவன் பணிவிடையைப் பெற முடியாது என்பதைப் பெரியோரே அறிவர்.

எஜமானனையும் அவன் ஊழியனையும், அது போல அரசனையும் குடிமகனையும், படைத் தலைவனையும் போர்வீரனையும் உண்மையில் இணைத்து வைப்பது அவர்களுக்கு இடையில் ஏற்படும்தனிப்பட்ட உறவு அன்று; இருவருக்கும் பொதுவான கடமையை நிறைவேற்றுவதில், ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் தம் மரியாதையைக் காக்கவேண்டும் என்ற உணர்வு தான் அவர்களை இணைக்கிறது. வெளிப்படையாக இந்த உணர்வு மேலெழாவிட்டாலும் இருவரின்எண்ண ஓட்டத்தின் அடியில் உறுதியாக இருக்கும் போதுதான் எஜமானனுக்கும் வேலைக்காரனுக்கும் இடையில் நல்ல உறவு ஏற்படும். ஒரு படையைக் காக்கும் தலைவனின் முழுப்பொறுப்பையும் உணர்கின்ற நல்ல வீரன்தான் தலைவனுக்கு உரிய மரியாதையைத் தவருது செலுத்துவான். அவ்வாறே நல்ல தலைவனும், ஒரு பெரிய கூட்டுமுயற்சியின் ஒரு பகுதியாகவே ஆணையிடும் பொறுப்பு தனக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து தன் கீழுள்ளோரிடம் அன்புடனும், பரந்த மனப்பான்மையுடனும், மனதைக் கவரும் இனிமையுடனும் நடந்துகொள்வான். அத்தகைய தலைவனல்தான், ஆணையை மீறிய வீரனுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கொடிய தண்டனையைக் கூடத் தயக்கமின்றி வழங்க முடியும். அவனே, தண்டனையில் தன் சொந்தக் கோப தாபங்களைக் காட்டாமல், கட்டுப்பாட்டை மீறியதற்காகத்தான் தவறு செய்பவன் தண்டிக்கப்படுகிருன் என்பதைப் பிற

ருக்கும் உணர்த்துவான். அதனால் அவனுடைய ஆணைகளுக்கு என்றும் மதிப்பு இருக்கும். மற்றவர்கள் அந்த ஆணைகளை விரைவில் நிறைவேற்றி வைப்பார்கள்.

இத்தகைய ஆளும் திறமையைப் பெறுவதற்குத் தன்னடக்கம் பயிலுதல் எவ்வளவு அவசியமாகிறது! எத்தகைய நுணுக்கமான அறிவும் அனுபவமும் வேண்டியிருக்கின்றன! மக்களுக்கு ஆணை பிறப்பிக்க வேண்டியவனின் நினைவாற்றல் எவ்வளவு அபாரமானதாக இருக்கவேண்டும்! இத்தகைய வல்லமைகளை உடையவனின் ஆட்சிதான் ஆழ்ந்த செல்வாக்கு உள்ளதாகவும் நிலைத்ததாகவும் இருக்க முடியும்.

தன்னை நன்கு கட்டியாள வல்லவனே பிறரை அடக்க வல்லவன் ஆகிறான். ஆட்சி செய்வதைப் பற்றிய இந்த உண்மையை யார் வேண்டுமானாலும் சோதித்துத் தெரிந்துகொள்ளலாம். தன்னுடைய கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாத தந்தையை அவன் குழந்தைகளும், எஜமானனை வேலையாட்களும், ஆட்சியிலுள்ளவனைக் குடிமக்களும் மதிக்க மாட்டார்கள். அவனுடைய எண்ணங்களும் உணர்ச்சிகளுமே அவனுக்கு அடங்காதபோது மற்றவர்கள் எப்படிக் கீழ்ப்படிவார்கள்! பிறரை ஓர் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவிரும்புபவன் முதலில் தனக்குள் அந்தக் கட்டுப்பாட்டைப் பயின்றாகவேண்டும். ஆளுதலும், ஆட்படுதலும், அதிகாரமும், அடங்கி நடத்தலும் ஒரே சக்தியின் இரண்டு பக்கங்களே. இன்று ஆட்சியிலிருப்பவன் நேற்று அடங்கியிருந்திருப்பான். நாளை நாம் ஆளத் தேவை இருக்கும் என்றால் இன்று நன்கு கீழ்ப்படியக் கற்றுக்கொண்டாகவேண்டும். ஆணைகளுக்குக் கீழ்ப்படியும் தன்மை உயர்ந்த கல்வியின் அடையாளமாகும். மனித வாழ்வின் வெற்றியைப் பற்றிய இரகசியங்களுள் இதுவும் ஒன்று.

எத்தகைய கல்வியைப் பெற்றிருந்தால் இந்த ரகசியத்தைத்தெரிந்து கொள்ளமுடியும்? உண்மையான கல்வி என்பது எதில் இருக்கிறது? "இதுவரை நிறையப் பார்த்தும் கேட்டும் இருக்கிறேன். தெரிந்துகொள்ளவேண்டியவற்றையெல்லாம் தெரிந்துகொண்டுவிட்டேன். இனி அறிவதற்கு ஒன்றுமில்லை" என்று திருப்தியுற்று இருப்பவன் உண்மையில் கற்றவன் அல்லன். கண்களையும் காதுகளையும் திறந்து வைத்துக்கொண்டு, புத்தியை விழிப்புடன் வைத்திருப்பவனே—எப்போதும் புதிதாகக் கற்றுக்கொள்ளத் தயாராய் இருப்பவனே — கற்றவன் ஆகிறான். பள்ளிக்கூடத்திற்குச்சென்று எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ளாதவன் கல்வியறிவு இல்லாதவன் ஆகிவிடமாட்டான். இயற்கையில், செடி கொடிகளின், மரங்களின் அசைவு, சலசலப்பு, மலர்களின் மணம்—இவற்றிலிருந்து கற்றுக்கொள்ள ஒன்றுமில்லை என்று நினைப்பவனே கல்லாதவன். அதன்கண் முன்பே இயற்கையின் வனப்பு கண்டு ரசிக்கப் படாததாகப் போய்விடுகிறது. இன்னும், உண்மையான கல்வியைப் பெறாதவனுக்கு, ஐதிகமாக வந்துள்ள நல்ல பழக்கவழக்கங்கள் பொருளற்ற சுமையாகிவிடுகின்றன. நாட்டின் நீண்ட வரலாற்றில் தன் முன்னோர்கள் அளித்த புனிதப் படைப்புக்கள் இந்தப் பாரம்பரியங்கள்; முன்னோர்களோடு தொடர்புகொள்ளவும், வரும் சந்ததியினரை வரவேற்கவும் அவனுக்குக் கிடைத்த பாலங்கள் அவை என்பதை அறிந்துகொள்ளாதவன் பண்டிதன் ஆகமாட்டான். பழமை இருந்த நிலையைப் பாமரர் எப்படி அறிவர்? பழமையின் சிறப்பை உணர்ந்து அதில் பெருமை கொள்பவனே கற்றவனாவான். எனவே,ஏற்கனவே தனக்கு எல்லாம் தெரிந்துவிட்டதாக நினைப்பவன் கற்றவன் அல்லன். வாழ்க்கை தரும் ஒவ்வொரு அனுபவத்திலிருந்தும் பாடம் கற்றுக்கொள்ள எப்போதும் தயாராய் இருப்பவனுக்கே கல்விமான் என்ற பெயர் பொருந்தும்.

மனதில் எழும் ஒவ்வொரு எண்ணமும், உணர்ச்சியும் மற்ற எண்ணங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் நம்மைத் தயார்ப்படுத்துகின்றன. ஒவ்வொரு சிந்தனையும் நம் சிந்தனை சக்தியை வளர்க்கிறது. உண்மையாக மனம் குவிந்த ஒவ்வொரு கணமும் நமக்கு மனதைக் கட்டியாளும் வல்லமையைத் தருகிறது; அதன் மூலம் உலகை ஆளும் சக்தியும் தானே வருகிறது.

பிறர்க்குக் கற்றுக் கொடுப்பதற்கு அன்று,

தான் மேலும் மேலும் கற்றுக் கொள்ளப் பயிற்சி பெறுவதே கல்வி ஆகிறது. இந்த அளவுகோலைக் கொண்டு பார்க்கும்போது, அதிகப் பொருள் கிடைக்கும் என்பதற்காகவோ, அந்தஸ்துக்காகவோ, பதவி உயர்வுக்காகவோ கற்பவன், கலைஞானம் பெறுவதற்கென்று கற்பவனைவிடப் பண்பில் எவ்வளவு தாழ்ந்தவன் ஆகிவிடுகிறான்! ஞானத்திற்காகப் பயில்பவன் கலைத் தெய்வமாம் வாணியின் அன்பு மைந்தனாவான். வேறு காரணங்களை முன்னிட்டுப் படிப்பவன் சரஸ்வதி தேவியின் கேவலம் கூலிக்கமர்த்தப்பட்ட வேலைக்காரன் ஆவான். பலனை எதிர்பாராமல் பெருஞ்செயல்கள் செய்யவேண்டும் என்று நம் சாஸ்திரங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதைக் கவனித்தால் இந்த உண்மை விளங்கும்.

அன்பு, அறம், அறிவு ஆகிய நற்பேறுகளை அவற்றின் சிறப்புக்காகவே நாடவேண்டும். வேறு லாபத்தை எதிர்பார்த்து அவற்றைக் கடைப்பிடிப்பது இழிவான மனப்பான்மையாகும். தூய லட்சியத்திற்காகச் சுயநலத்தை விட்டு விடவும், தேவைப்பட்டால் தன்னையே லட்சியத்திற்காகப் பலிகொடுக்கவும் தயாராய் இருக்கும்போதுதான் உயர்ந்த சாதனைகள் சாத்தியமாகும்.

எனவே, நல்ல அருளாளர்கள் தோன்றிய நாட்டில் பிறப்பது, போர்த்திறமையால் பிற நாடுகளை வென்ற அரசனின் குடிமகனாய் இருப்பதைவிட என்றும் சிறந்தது. அரசனொருவனும் தன் துறையில் சாதனைகள் நிகழ்த்த தியாகங்கள் செய்தாகவேண்டும். ஆனால் அவன் தன் தியாகத்திற்கான கூலியைப் பெற்றுவிடுகிறான்—தியாகத்தின் மூலம் பெற்ற புண்ணியத்தைப் பலன் எதிர்பார்ப்பதன் மூலம் செலவழித்துவிடுகிறான். ஆனால் அருளாளர்களோ தம் தபோபலன்களையெல்லாம் தம் முன்னோர்கள் சேர்த்து வைத்துள்ள அருட் சேமிப்பில் சேர்த்துவிடுகிறார்கள்.

இப்படிப்பட்ட அருள் வீரர்களைத் தோற்றுவிக்கும் நம் தாய்நாடு எத்துணை மகிமை வாய்ந்தது. தாயே! உன் திருவடித் துகள் எங்களைப் புனிதப்படுத்தும் சிறப்பு வாய்ந்தது அன்றோ! அத்தகைய பவித்திரம் வாய்ந்த உன் மலரடிகளை எங்கள் சிரமேல் சூடுகின்றோம். உன் அறியாக் குழந்தைகளான எங்களையும் அருளாளர்கள் ஆக்குவாயாக.

தன்னலமற்ற சேவை ஒன்றினாலேயே மனம் தூய்மை அடையும். மனம் தூயது ஆனால், எந்த எண்ணமும் கடவுள் பக்தியிலேயே அதைக் கொண்டு செலுத்தும். தூய்மையில்லாத நெஞ்சத்தோடு எவ்வளவுதான் ஜபம் செய்தாலும், ஆன்மீகத்தில் சிறிதளவும் முன்னேற முடியாது. சுயநலம், கோபம், பொறாமை போன்ற குணங்களை உடைய மனதில் ஜபம் என்ன செய்ய இயலும்? சிரத்தை இருக்குமானால்,ஜபமும், தியானமும் தக்க பலனை அளிப்பனவாகும். “நான், எனது” என்ற எண்ணம் எப்பொழுதும் சுகத்தையே தேடும். இவற்றைப் போக்குவதற்காகத் தியானம் செய்கையில் நீயும், உன் இறைவனும் மட்டுமே இருப்பதாகக் கருதி, மற்ற யாவற்றையும் மறந்துவிட வேண்டும். காலம் செல்லச் செல்லத் தன்னையும் மறக்கின்ற நிலை உருவாக வேண்டும்.

தவம், தியாகம், தர்மம், அறநூல்களைப் பயிலுதல் இவற்றினாலெல்லாம் கடவுளைக் காண முடியாது. கடவுளின் கருணை யாருக்குச் சித்திக்கிறதோ, அவரே இறைவனைக் காண வல்லவர். உபநிஷதங்கள் ‘பலவீனனால் ஆண்டவனைப் பார்க்க முடியாது’ என்று கூறுகின்றன. கீதையும் கடுமையான சுயமுயற்சியை வலியுறுத்துகிறது. ‘தன்னை உயர்த்துபவனும், நிலைநிறுத்துபவனும் தானே’ என்கிறது கீதை. அடிமைத்தளையிலிருந்து விடுபட முயலுபவன் ஒருநாளும் மனத்தளர்ச்சி அடையக் கூடாது. தளர்வு மனதை அலைக்கழிக்கும். நாம் கடவுளின் குழந்தைகள் என்ற எண்ணம் யாண்டும் நமக்குத் தளர்ச்சியைப் போக்கிப் பேரானந்தத்தைக் கொடுக்கும். பூர்வஜன்ம வாசனைகளின் காரணமாக உள்ளத்தில் ஏற்படும் தீய நினைவுகளில் நாம் கவனம் செலுத்தக் கூடாது. உறுதியுடன் உழைத்தால் உரியகாலத்தில் யாவும் சித்திக்கும்.

— *சுவாமி சிவானந்தர்*

குட்டித் திருவாசகம்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

களாநிழல் அமர்ந்த அருளாளன் என்னைப் பாது காப்பானாக:

"எவன் உயிர்க் குயிராய் எள்ளும்என்
[ணெயும்போல்
எங்ஙனும் இடையறு நின்றான்
எவன் அனைத் துலகும் ஈன்றுகாத் தழிக்க
இறைமைசால் மூவுரு எடுத்தோன்
எவன்முதல் இடை ஈறு இன்றிஎஞ் ஞான்றும்
ஈறிலா மறைமுடி இருப்பான்
அவன்எனைப் புரக்கத் திருக்களா நீழல்
அமர்ந்தருள் புரிந்த காரணனே."

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகும் சிவ ஞானம், பூர்வ ஜன்மப் புண்ணியத்தாலும், இப்பிறவி வாய்த்த விதி வசத்தாலும் கைவரப் பெற்றவர் அதிவீரராம பாண்டியர். ஜன்மாந் தரத்தில் செய்த வினைகளாகிய பந்தங்களிலி ருந்து விடுபட்டுப் பரிசுத்தமான நடுநிலைமை உடையவராக ஆகி, நீங்காத பொருள் செல்வ மும் அழியாத கல்விச் செல்வமும் வாய்க்கப் பெற்றவர்.

மனம், வாக்கு இரண்டையும் கடந்து நிற்கும் எந்தையாகிய சிவபெருமானது திருவடிகளில் சொல்மாலை புனைந்து ஏத்திச்சாத்தி, உண்மை அறிவானந்த சொரூபத்தின் திருவருளைப் பெற்றவர். சிவபுண்ணியத் தெளிவு பெற்ற வர். நித்திய நைமித்திய கருமங்களைச் சிவார்ப் பணமாகச் செய்து சித்த சுத்தியாகிய பெரும் பேறு பெற்றவர். பரிசுத்தம் உடையவராய்ப் பஞ்ச சுத்தி செய்து உள்ளும் புறமும் சிவ நேசம் உடைய செல்வராக விளங்கியவர். எனவே, 'களாநிழல் அமர்ந்த புண்ணியன் என் னைக் காப்பாற்றுவான்' என்கிறார்.

"உயிர்க்கு உயிராய் எள்ளும் எண்ணெயும் போல், எங்கனும் இடையறு நின்றான்" எல்லா உயிர்களுக்கும் உயிராக விளங்குபவன் இறைவன். "என் ஆருயிராய் நின்றானே" என்கிறார் மணிவாசகர்.

ஆன்மா என்னும் உயிர் தன்னைப் பற்றியும் அறியாதது. தன்னை இயக்கக் கூடிய திருவரு ளைப் பற்றியும் அறியும் ஆற்றல் இல்லாதது. ஆனால், உயிர் தன்னைப் பற்றியும், தன்னு டைய வினைப்பயன்களைப் பற்றியும் அறிந்து கொள்ளுதல் வேண்டும். ஆன்மா, ஐம்பொறி களால் அறியக் கூடிய பொருள்களை அறிந்து கொள்கிறது. ஆனால் என்னென்ன பொருள் களை முன்னால் அறிந்ததோ, அப்பொருள்களைப் பின்னால் நினைவில் வைத்துக்கொள்ள முடியா மல் மறந்து விடுகிறது. மேலும் எந்தப் பொருளையும் யாராவது ஒருவர் உணர்த்தினால் தான் அறிந்துகொள்கிறது. எதையும் தானா கவே அறியக்கூடியஆற்றல் உடையது அன்று. இறைவனே உடனிருந்து உணர்த்த உணர் கிறது. ஐம்பொறிகளின் வழியாகப் பொருட் களை அறியும் அறிவை இறைவன் ஆன்மாக் களுக்கு வழங்குகிறான். இறைவன் ஆத்மா வின் உள்நின்று உணர்த்த ஆன்மா உணர் கிறது. இவ்வாறு எங்கும் நிறைந்த சிவன், உயிர்க்கு உயிராக இலங்குகிறான். "உயிர்க்கு உயிராய்" என்பதற்கு ஜீவாத்மாக்கள் அனைத்திற்கும் இறைவன் பரமாத்மாவாகத் திகழ்கிறான் என்றும் பொருள் கூறுவார்கள்.

எள்ளுக்குள் எண்ணெய் இருப்பது உண்மை. ஆனால் கண்ணுக்குப் புலனாவதில்லை. ஆனால், வித்து முழுவதும் எண்ணெய் பரவி நிற்கின்றது. எண்ணெய் இன்றேல் எள்ளி னால் பயன் இல்லை. அதுபோன்று இறைவன் எல்லா உயிர்களிடத்தும் நீக்கமற நிறைந்துள் ளான்; நிறைந்து உயிர்களை இயக்குகிறான். எங்ஙனும் இடையறு நிற்பவன் இறைவன். அங்கு இங்கு எனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் இறைவன். சிவவெளி என் னும் அருள்வெளியாகப் பரந்து காட்சி தரு கிறான். புவனத்தில், அண்டப் பரப்பில் எங் கெங்கும் காட்சி தருகிறான் சிவன். எப்படி? எல்லாப் பொருள்களையும் தோற்றுவிப்பவன் இறைவன். எனவே, அப்பொருள்களின் ஊடாக நிறைந்து நிற்கின்றான். ஆன்மாக் களாகிய உயிர்களில் ஒன்றாகவும், வேறாகவும், உடனாகவும் திகழ்கின்றான்.

இறைவன் ஒருவனே இவ்வுலகின் ஜீவர் களாகக் காட்சியளிக்கின்றான்; பரம்பொருள் ஒன்றே பல பொருள்களாகக் காட்சி தருகிறது

என்னும் கொள்கையும் உண்டு. எனவே, இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான் என்கிறார் அதிவீரராம பாண்டியர். "எப் பொருள் ஆகி எமக்கு அருள்புரியும் செம்பொரு ளாகிய சிவமே" என்கிறார் இராமலிங்க சுவாமிகள்.

"அனைத்து உலகும் ஈன்று காத்து அழிக்க இறைமைசால் மூவுரு எடுத்தோன்" பிர பஞ்சம் அனைத்தையும் படைத்து, காத்து, அழிப்பதற்குத் தலைமையாய் அமைந்த பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூன்று வடிவங் களையும் எடுத்தவன் களாநீழல் அமர்ந்த சிவன்.

சிவபெருமான் படைத்தல் சக்தியைப் பிரம னுடைய வடிவத்தில் பொருந்தி நின்று இயற்று கின்றான். காத்தல் தொழிலைத் திருமாலுடைய வடிவத்தில் பொருந்தி நின்று இயற்றுகின் றான். உருத்திரன் வடிவத்தில் பொருந்தி நின்று அழித்தல் தொழிலைச் செய்கின்றான். சிவபெருமானால் எடுக்கப்படுகின்ற வடிவங்கள் யாவும் அவனது சக்தியேயாகும்.

மலர், மலரின் நிறம், மலரின் மணம் இவை யெல்லாம் பேதம் இல்லாமல் அபேதமாயிருப் பதுபோல, சத்து சித்து ஆனந்தம் இம்மூன் றையும் தமது திருமேனியாகக் கொண்டருளிய சிவபெருமான், தமது சக்தி பேதங்களைத் தாங்கிப் பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் திரிமூர்த்திகளாய் விளங்கிச் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்னும் மூன்று தொழில் களையும் புரிகின்றார்.

"பரமசிவன் தற்பிரயோசனம் குறியாது, உயிர்களுக்கென்றே சமஸ்த தேவர் முதலி யோரைத் தன்னிடத்து உற்பவித்து அவர் களால் முத்தொழில் இயற்றுவிக்கின்றான்" என்பது ஆன்றோர் கருத்து.

"அரியாகிக் காப்பான், அயனாய்ப் படைப் பான், அரனாய் அழிப்பவனும் தானே" — சிவ னாகிய ஏகனே மும்மூர்த்தியாகத் திகழ்கிறான் என்பதை இவ்வாறு திருக்கைலாய ஞான உலா கூறுகிறது.

"முதல் இடை ஈறு இன்றி எஞ்ஞான்றும் ஈறு இலா மறைமுடி இருப்பான்" — தொடக் கமும், நடுவும், முடிவும் இல்லாமல், எப்பொழு தும் வேதங்களின் முடிபாகத் திகழ்பவன்.

"ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே" என்பது திருவாசகம். "ஈறு முதல் நடுவு ஒன்றும் இலாமையானும்" எனச் சிவப்பிர காசம் இறைவன் முதலும் நடுவும் ஈறும் அற்ற வன் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

அருவும் உருவும் அருஉருவும் ஆகிப் பரு வடிவம் பலவாய்க் குணம் குறிகடந்த ஜோதி இறைவன். உயிர்களுக்குரிய முக்குண இயல்பு அற்றவன். சிவனைக் "குணமிலி" என்கிறது திருவாசகம். இறைவனுக்கு முக்குணம் இல்லை. ஆனால் குறைவு இல்லாத எட்டுக் குணங்களை உடையவன் அவன். திருவள்ளு வர் "எண் குணத்தான்" என இறைவனைச் சுட்டிக் கூறுகிறார்.

முதல் நடு ஈறு எனச் சொல்லுவதற்கு அரிய கால எல்லை இல்லாத தன்மை உடையவன் இறைவன். மேம்பட்டு விளங்கும் ஞான வடி வினன். காலப் பழைமை கடந்தவன் இறை வன் ஆதலின் முதல் நடு இறுதி எனக் காலத்தோடு சேர்த்துக் கூறுவதற்கு அரியவன் இறைவன்.

உலகம் அனைத்தும், அவன், அவள் என ஆண்பால், பெண்பால் பகுப்பையும், அது என்னும் அஃறிணைப் பிரிவையும் உடையதாகத் தோற்றுவிக்கப்படுகிறது. அவ்வாறு தோன்றித் தத்தம் கால எல்லையில் ஒடுங்கி நிற்கும் உலகப்பொருள்கள் அனைத்தையும் ஒழுங்காகச் செயற்படுத்தி இயக்கும் முதல்வன் முதல் நடு இறுதி என்னும் கால எல்லைக்கு அப்பாற் பட்டவன். "ஆதியும் நடுவுடன் அந்தமுங் கடந்த ஜோதியாய்" எனச் சிவனை அழைக் கிறார் திருவருட் பிரகாச வள்ளலார்.

"ஈறு இலா மறைமுடி இருப்பான்" எல்லை இல்லாத வேதங்களின் முடிவாகத் திகழ்பவன் இறைவன்.

"தேற்றிய வேதத் திருமுடி விளங்கிட ஏற் றிய ஞான வியலொளி விளக்கே" என்பது திருவருட்பா. "அளவறு கலைகட் கெல்லாம் உறைவிடமாகி வேத விளைபொருளாகி நின்ற வேதிய சரணம்" — அளவில்லாத நூல்களுக்கு எல்லாம் இருப்பிடமாகவும், வேதங்களில் உண்டாகின்ற பொருளாகியும் நின்றருளிய வேதியர் பெருமானே சரணம் என்கிறார் பரஞ் சோதி முனிவர்.

வேதத்தின் முடிவே சிவலிங்கம். எங்கும் நிறைந்த பராபரம், பசுபாச ஞானங்களுக்கு மேற்பட்ட ஞானமாகிய விஞ்ஞானம், துன்பம் இல்லாமையாகிய நிராமயம், நூல்கள் போற்றுகின்ற பரப்பிரம்மம் ஆகிய அனைத்துமே வேதங்களின் வடிவாக உள்ள சிவலிங்க மூர்த்தியாகும்.

"ஞானநூல் இவன்றன் வடிவிலா வடிவினை உணர்த்தும்"—ஞான நூலாகிய வேதப் பிரிவு சிவபெருமானுடைய நிர்மல சொரூபமாகிய சச்சிதானந்த சொரூபத்தை உணர்த்தும் என்பது ஆன்றோர்களின் கருத்து. வேதப் பொருளாகத் திகழ்பவன் இறைவன்.

"எனைப் புரக்கத் திருக்களா நீழல் அமர்ந்தருள் புரிந்த காரணனே"—திருக்களா மரத்தடியில் எழுந்தருளியிருக்கும் முதல்வனாகிய சிவபரம்பொருள் என்னைக் காப்பாற்றுவானாக.

அகண்ட பூரணமாய் அமர்ந்த சொரூப சிவம் களாநீழல் அமர்ந்த பெருமான். கர்ம காண்டத்தில் இயம்பிய வண்ணம் விதிமுறை வழுவாத பூஜை புரிந்தவர் அதிவீரராமர். சிவலிங்கத்தைப் பூஜித்துக் கர்ம காண்ட அனுஷ்டானப் பயன் முழுவதையும் அனுபவித்தவர். சிவலிங்க வடிவைத் தியானம் செய்து, ஞான காண்ட அத்வைத உணர்வின் பயன் முழுவதையும் பெற்றவர். சித்த சுத்தி பெற்றவர். சிவபக்தி உண்மையாக உடையவர். சிவ தரிசனம் பெற்றவர். விரும்பும் இடங்களில் சிவலிங்க ஸ்தாபனம் செய்தவர். சிவனடியார்களான மெய்யன்பர்களிடத்துப் பக்தி பூண்டு, அவர்களையும் சிவமாகவே பாவனை பண்ணி வணங்கியவர். உயிர்களைக் கொல்லாமை, பொறுமை, உண்மை கூறுதல், பழிபாவங்களுக்குப் பயப்படுதல், புண்ணியத்தில் விருப்பம் கொள்ளுதல், மனம் முதலியவற்றை ஒடுக்குதல், கொடை வழங்குதல், சிவார்ச்சனை புரிதல், தவம் இயற்றுதல், சதா சிவாதி மூர்த்தங்களைத் தியானித்தல் ஆகிய பத்து வகைப்பட்ட புண்ணியத்தை உடையவர். இவற்றால் எழுந்த மன உறைப்புக் காரணமாகக் களாநீழல் அமர்ந்த புண்ணியமூர்த்தி என்னைக் காப்பாற்றுவான் என்கிறார்.

கருவைக் கடவுள் அருள் சுரந்து வாழ்வித்தான்

"காரணம் ஏதுஎன்று அறிகிலேன் தமியேன்
கற்றல மனத்தினைக் கரைத்து
வாரணி முலையாள் ஒப்பனை யோடு
மழவிடை மேல் எழுந்தருளி
நாரணன் அறியாத் திருஉருக் காட்டி
நல்லருள் சுரந்துவாழ் வித்தான்
பூரணன் கருவைக் களாநீழல் அமர்ந்த
புண்ணியன் விண்ணவர்க்கு இறையே."

எங்கும் நிறைந்த பரிபூரணனாக விளங்கும் களாநீழல் அமர்ந்த புண்ணியன், தேவர்களுக்குத் தலைவன் சிவபிரான், எளியேனாகிய எனது கற்பாறை போன்ற மனத்தைக் கரைத்தான். உமையம்மையோடு ரிஷப வாகனத்தில் எழுந்தருளி, நாரணனும் தேவர்களும் எளிதில் காண இயலாத திரு உருவத்தை எனக்குக் காட்டி நல்லருள் சுரந்து வாழ்வித்தான்.

"கற்றல மனத்தினைக் கரைத்து"—கல்லைப் போன்ற என்னுடைய மனத்தை நெகிழச் செய்து என்கிறார். மனத்தைக் கல்லுக்கும் பாறைக்கும் ஒப்பிட்டுச் சொல்லுவது உண்டு. "நெஞ்சக்கன கல்லு"—நெஞ்சத்தைக் கனமான கல்லுக்கு ஒப்பிடுகிறார் அருணகிரியார்.

"திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின் கருங்கல் மனமும் கசிந்துள் உருகும்" என்று மனதைக் கருங்கல் மனம் என்று சொல்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள்.

சிவமே ஸகல ஜகத் காரண பூதம் என்றும், அச்சிவம் சிவலிங்க மூர்த்தத்தில் எழுந்தருளியிருக்கும் என்றும் உணரக்கூடிய லிங்கசுத்தி உடையவர் அதிவீரராமர்.

இறைவன் அகண்டமாய்ச் சர்வ வியாபியாக மனம் வாக்கு காயங்களுக்கு அதீதனாக, சொற்பதம் கடந்த தொல்லோனாக விளங்குகின்றவன் என்பதையும் அறிந்தவர் அவர். ஐயம், திரிபு, மயக்கம் என்னும் முக்குற்றங்களையும் தம்மிடமிருந்து அறவே ஒழித்துத் தமக்குச் சிவத்தையன்றி வேறு சார்பு இல்லை என்பதைத் தெளிந்தவர்.

"கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே" என்று மணிவாசகப் பெருமான் கூறுவதுபோல, களாமரத்து அடியில் சிவபெருமான் அதிவீரராமருக்குக் காட்சி கொடுத்து அருளினார்.

வெயிலிலே துன்பப்படுகிற ஒருவன் நிழலைக் கண்டதும், "அந்த நிழலைச் சென்று அடைக"

என ஒருவரும் சொல்லவேண்டியதில்லை. தானே சென்றடைவான். அதுபோன்று உலகியல் துன்பங்களிலே வருந்துகிற ஒருவன் திருவருளாகிய நிழலைக் கண்டதும், தானே அங்குச் சென்றடைவான். இன்ப துன்பங்களில் ஏற்பட்ட வெறுப்பால் இவருக்குத் திருவருள் நாட்டம் உண்டாயிற்று. "திருவருளைச் சார்ந்தவர்களுக்கு அவர்களுடைய வினைகளையும், வினைப்பயன்களையும் சுமப்பவராகிய கடவுள் எளிதில் தோன்றுவார்'' என்று திருவருட் பயன் நூல் கூறுகிறது.

அதிவீரராம பாண்டியருக்குச் சிவபிரான் காட்சி கொடுத்தார்; கல் மனத்தையும் கரையச் செய்தார்.

''நல்லருள் சுரந்து வாழ்வித்தான்; பூரணன்" என்கிறார் அதிவீரராமர். இறைவன் திருவருள் பாலித்ததை எண்ணி வியக்கின்றார்.

"உள்ளம் உள்கி உகந்து சிவன் என்று மெள்ள உள்க வினை கெடும்" உள்ளம் உருகி விருப்பத்துடன் சிவன் பெயரைச் சொன்னாலே, நினைத்தாலே வினைகள் அழியும்.

"உருகு மனத்து அடியவர்கட்கு ஊறும் தேனை''—நெகிழ்கின்ற மனம் உடைய அடியார்களின் உள்ளத்தில் சிவன் தேனாய் ஊறி நிறைவான்—என்றெல்லாம் திருஞான சம்பந்தர் கூறுகிறார்.

உள்ளம் உருகியவர், பெரு விருப்பத்துடன் சிவனை நினைத்தவர்; சிவன் பெயரைச் சொன்னவர் அதிவீரராமர். எனவே, சோதியாய்ச் சுடராய் விளங்கும் சிவபிரான், உமாதேவியுடன் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி வந்து திருவருள் சுரந்து வாழ்வித்தான். இதுவரையில் தாம் வாழ்ந்ததை, அவர் நல்ல வாழ்க்கையாகக் கருதவில்லை; ஒரு வாழ்க்கையாகவே நினைக்கவில்லை. வாழ்ந்ததாகவே எண்ணவில்லை. எப்போது இறைவன் திருவருள் கிடைத்ததோ அப்போதிருந்துதான், தாம் உண்மையிலேயே வாழ்வதாகக் கருதுகிறார்.

"காரணம் ஏது என்று அறிகிலேன் தமியேன்''—இறைவன் இவ்வாறு அருள் செய்தானே; இதற்கு என்ன காரணம்? அவன் அருள் செய்யும் அளவுக்கு என்னிடத்தில் தகுதி எதுவும் இல்லையே; தகுதி எள்ளளவும் இல்லாதிருந்தும் கருணைகொண்டு திருவருள் பாலித்ததை எண்ணி உள்ளம் நெகிழ்கின்றார்.

எனது கல்லைப் போன்ற மனத்தினைக் கரைத்து, இறைவன் தன்னுடைய திருவுருவத்தையும் காட்டியருளினனே! உண்மையில் அத்தகைய தகுதி எனக்கு உண்டா? இல்லையே! பிறகு ஏன் சிவபிரான் செய்தான்? என்று கூறுகின்றார் அதிவீரராமர்.

சான்றோர்கள் இப்படித்தான் கூறுவார்கள். தங்களிடத்தில் தகுதி இருந்தும் இல்லையென்றே கருதுவார்கள். "பணியுமாம் என்றும் பெருமை''. பெருமையுடைய மதிக்கத் தக்க சான்றோர்கள் எப்போதும் பணிவாகவே இருப்பார்கள்; பணிவாகவே பேசுவார்கள். ஜீவன் முக்தர் நிலையில் இருந்த இவ் அடியாருக்கு இறைவனே காட்சி கொடுத்தருளியதில் வியப்பில்லையன்றோ!

இறைவா! உன்னைப் புகழ்வதற்கு நான் மிகவும் புண்ணியம் செய்துள்ளேன்.

"விண்ணவர் மகுட கோடிவீழ்ந் திறைஞ்சும்
விரைமலர்ச் சேவடி மிசையே
உண்ணிறை காதல் அன்புநின்று உருக
உலையிடு மெழுகென உருகிக்
கண்ணில்நீர் வாரக் கருவையம் பரனே!
கடவுளே! என்றுஎடுத்து ஏத்தப்
புண்ணியம் புரிந்தேன் இப்பெரும் பேறு
பூதலத்து எவர்பெறு வாரே."

கோடிக்கணக்கான தேவர்கள், தங்களுடைய மணிமகுடம் பூமியிலே படும்படியாகக் கீழே விழுந்து உனது பாதாரவிந்தத்தைப் பணிகின்றார்கள். இறைவா! அவ்வாறு அவர்கள் எல்லாரும் பணிகின்ற உன்னுடைய திருப்பாதங்களை எண்ணுகையில் என்னுடைய உள்ளத்திலே பொங்கி நிறைந்து வழிகின்ற பேரன்பு, எப்போதும் என்னில் நிலைத்து நின்று என்னை உருக வைக்கிறது. அனலில் இடப்பட்ட மெழுகு எவ்வாறு உருகுமோ அதுபோல உன்னை நினைத்த நொடிப்பொழுதிலேயே என் சித்தம் உருகுகின்றது. கண்ணில் ஆனந்தக் கண்ணீர் நிறைந்து வழிகின்றது. இத்தகைய மெய்ப்பாட்டில், என்னை மறந்த நிலையில், கருவை மூர்த்தியே! கடவுளே! என்று உன்னுடைய அளப்பரிய திருநாமங்களையும், பெருமைகளையும், கருணைத் திறத்தையும் எடுத்துச் சொல்லிப் புகழ்வதற்கு எவ்வளவு

புண்ணியம்! நான் முன் பிறவியிலும், இப்பிறவியிலும் செய்துள்ளேன்! பெறுவதற்கு அருமையான இப்பேறு, இந்தப் பூதலத்தில் வேறு யாரால் பெற முடியும்?

யாருக்கும் கிட்டாத பேறு இவ் அடியவருக்குக் கிடைத்தது. கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன். இறை உண்மைகளை அறிந்தவர் இவர். எனவே இவர் நெஞ்சில் நிறைந்து நின்றவன் இறைவன். அவன் அருளாலேதான் அவன் தாளை வணங்க முடியும். எனவே, சிந்தை முழுவதும் சிவமே நிறைந்து விட்டார். பரம் பொருளாகிய சிவன் உள்ளத்தில் குடிகொண்டுள்ள போது வேறு சிந்தனைக்கு ஆங்கே இடம் இல்லாது போகிறது.

கிடைக்காத ஒன்று, பெறுதற்கரிய ஒன்று பெறுகிறபொழுது உள்ளம் உருகி ஆனந்தக் கண்ணீர் தானுகவே பொழிகிறது. இது அவரவர் அனுபவத்தில் காணுகின்ற, பெறுகின்ற உண்மையாகும்.

சித்த சுத்தி அல்லது அந்தக்கரண சுத்தி என்பது ஆத்ம சுத்தியாகும். யாருக்குத் தெளிவான மனம், அழுக்கு இல்லாத உள்ளம் இருக்கிறதோ, அவருக்கு, அவர் பார்க்கக்கூடிய, உணரக்கூடிய பொருள்கள் எல்லாம் உள்ளவாறு காட்சியளிக்கின்றன. மனத்தில் அழுக்கு இருக்குமானல், பொருள்களை உள்ளவாறு உணர முடியாது. தெளிவான உள்ளத்தில் விவேகம் உண்டாகிறது. அப்படி ஏற்பட்ட விவேகத்துடன் உலகியல் பொருள்களை நுகர்வது அனுபவ சுத்தி. பிறகு அந்த உலகியல் பொருள் யாவற்றையும் சிவனின் வடிவமாகவே உணர்வது அனுபோக சுத்தியாகும்.

ஏற்கனவே ஆத்ம சுத்தியால் அனுபவ சுத்தி பெற்ற அதிவீரராமர் உலகப் பொருள்கள் யாவற்றையும் சிவனின் வடிவமாகக் கண்டார். பிறகு சிவனையே நேரில் காணக்கூடிய பெரும் பேறு பெற்ருர். உடல் உணர்வை மறந்தார், ஜீவபோதத்தை மறந்தார், சிவபோதத்தில் திளைத்தார்.

“காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்” என்கிருர் நாவுக்கரசர். ஆண் யானையும், பெண் யானையுமான உலகப் பொருள்கள், மற்றவர்களின் கண்களுக்கு யானைகளாகப் புலப்பட்டாலும், அப்பர் பெருமான் சிவபோதத்தில் திளைத்தவர் ஆதலின் சிவவடிவமாகவே புலனுகிறது.

சலவையாளர் ஒருவர் உவர் மண்ணைச் சுமந்துகொண்டு வந்தார். அப்பொழுது மழை பெய்தது. உவர் மண் கரைந்தது. பிறகு சற்று நேரத்தில் உலர்ந்தது. பார்ப்பதற்கு அவர் மேனி முழுவதும் திருநீறு பூசப்பட்டது போல் காட்சியளித்தது. அந்தச் சமயத்தில் சேரமான் பெருமாள் நாயனுராகிய சேர மன்னர், யானைமீது பவனி வந்துகொண்டிருந்தார். எதிரே வருகின்ற சலவையாளர் கோலத்தைக் கண்டதும், யானை மேலிருந்து கீழே இறங்கினுர். எதிரே சென்ருர். ‘சிவனடியார் திருக்கோலத்தை நினைவுபடுத்தினீர்’ என்று சொல்லிக் கீழே விழுந்து வணங்கினுர்.

அப்பர் சுவாமிகளுக்கும், சேரமான் பெருமாள் நாயனுருக்கும் உலகியல் பொருள்கள் சிவமயமாகக் காட்சியளித்த பின் அவர்கள் சிவத்தையே காணும் பேறு பெற்ருர்கள்.

அதுபோல, அதிவீரராமருக்கும் உலகியல் பொருள்கள் சிவமயமாகக் காட்சியளித்த பின்னர் சிவனையே காணுகின்ற திருப்பெருகும் சிவஞானமும் அவர் கைவரப்பெற்ருர்.

இத்தகைய ஆன்ம ஞானிகளுக்கு, இறைவன் தானே தன்னைத் தருவான் என்பது அனுபவ உண்மையாகும். “தாமே தரும்” இறைவன் தானே தன்னை உயிர்களுக்குத் தந்தருளுகின்ற பெருங்கருணையாளன் ஆவான்.

“தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்”,“தான் வந்து நாயேனைத்தாய் போல் தலையளித்திட்டு”,“தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை”, “தேனய் இன் அமுதம் ஆய்த் தித்திக்கும் சிவபெருமான் தானே வந்து” என்றெல்லாம் அருளாளப் பெருமக்கள், இறைவன் தானே தன்னை உயிர்களுக்குத் தந்தருளுவான் என்கின்றனர்.

“நிலை இலா நெஞ்சந்தன்னுள், நிலவாத புலால் உடம்பே புகுந்துநின்ற, கற்பகமே யான் உன்னை விடுவேன் அல்லேன்” என வாகீசர், சிவபெருமான் தம் நெஞ்சில் குடி புகுந்ததையும், அவனைச் சிக்கெனப் பற்றிக்கொண்டதையும் இனிவிட முடியாது என்று கூறுவதையும் இங்கே நினைக்கலாம். நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவனல்லவா இறைவன்!

மூவர் தவ வாழ்வு

(திருச்சூரில் நடைபெற்ற ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ சாரதாதேவி, சுவாமி விவேகானந்தர் இயக்கம் பற்றிய கருத்தரங்கில் யதீஸ்வரி சாரதாப்ரியா, அவர்கள் ஆற்றிய துவக்க உரை.)

சகோதரி பிரவ்ராஜிகா தீரட்ரணுஜிக்கும், மற்ற சந்நியாசினிகளுக்கும், பிரம்மச்சாரிணிகளுக்கும், மற்றும் கருத்தரங்கில் கூடியிருக்கும் அனைவருக்கும் முதலில் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னையாரின் பெயரில், அன்னையாருக்குச் சேவை செய்யும் ஒரு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், அருள் அன்னை ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகிய மூவரும் செய்த தபஸைப் பற்றி ஆராய, அதன் முக்கியத்துவத்தைப் பற்றிச் சிந்திக்கக் கூடியிருக்கிறோம். இது போன்ற நல்லதொரு நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி ஆரம்பித்து வைக்கும் வாய்ப்பை எனக்குக் கொடுத்ததற்குச் சகோதரி தீரப்ராணுஜிக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழில் பேசுவதற்கு என்னை மன்னிக்க வேண்டும். தமிழில் தான் எனக்குப் பேசிப் பழக்கம். ஆனால் மலையாளத்திற்கும் தமிழுக்கும் இடையில் அதிக வித்தியாசம் இல்லை. ஆதலால் என் பேச்சை நீங்கள் புரிந்துகொள்வதில் சிரமம் இருக்காது என்று நம்புகிறேன்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர், அருள் அன்னையார், சுவாமி விவேகானந்தர் மூவரும் யுகாவதாரங்களாக இந்த உலகில் தோன்றியதில் பெரிய பொருள் இருக்கிறது. அவர்களின் அவதார நோக்கத்தையும், அவர்கள் வாழ்வு நமக்கு அளிக்கும் செய்தியையும் பற்றி இது மாதிரி கூட்டங்களில் ஆராய்ந்து அந்தச் செய்தியை உலகில் பரப்புவது அவசியமாகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் எத்தகைய தவ வாழ்க்கை வாழ்ந்து நமக்கு வழி காட்டியிருக்கிறார்; அன்னையார் பெண்கள் வாழ்க்கையைத் திருத்திச் சிறப்பு மிக்கதாகச் செய்ய எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து காண்பித்திருக்கிறார்; சுவாமி விவேகானந்தர் தம் வாழ்வின் மூலம் நமக்கு என்ன செய்திருக்கிறார் என்று பார்ப்போம். இந்த மூவரின் பிறப்புக்கு முன் இந்து மதம் தன் பழைய சிறப்பை இழந்து வலிவற்று இருந்தது. ஆனால் இந்துக்களுக்கும் ஒரு மதம் உண்டு, அது சிறப்பு மிக்கது, உலகில் உள்ள மற்ற மதங்களுக்கெல்லாம் தாய் மதம் போன்றது என்பதைத் தம் அடக்கமான, பிறருக்கு அதிகம் தெரியாத வாழ்க்கையின் மூலம் ஸ்ரீ ராமகிருஷ்ணரும், அன்னையாரும் நிரூபித்தனர். அவர்கள் வாழ்க்கையின் சிறப்பை உணர்ந்து அதை உலகம் முழுவதும் அறிந்துகொள்ளும்படி பறை சாற்றியவர் சுவாமி விவேகானந்தர். இந்தியாவில் மட்டுமன்றி அமெரிக்காவிற்கும் சென்று கர்ஜனை செய்தார், வேதாந்த கேசரியான சுவாமி விவேகானந்தர். குறிப்பாக இந்தியாவுக்கு அவர் அளித்த போதனையில் ''இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் வாழ்வில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன. அவற்றைக் குறைக்க, அவற்றில் பங்குகொள்ள நாம் என்ன செய்திருக்கிறோம்? நம்தாய்க்கும், தாய்நாட்டுக்கும் என்னசேவை செய்திருக்கிறோம்? என்றுநம்மை நாம் கேட்டுக்கொள்ளவேண்டும்" என்று கூறியுள்ளார். இம்மூவரிடமும் நம் உடல், பொருள், வாழ்க்கை முழுவதையும் ஒப்படைத்துச் சரணாகதி செய்தால் நாம் எப்படி வாழவேண்டும் என்பது நமக்கு விளங்கும்.

மக்களுக்குச் சேவை செய்யவேண்டும்; அதுவே மகேசுவர பூஜை என்பதைத் தம் கையாலேயே சமைத்து அத்தனை பக்தர்களுக்கும் அமுது படைத்த அன்னையார் காட்டியிருக்கிறார். குறிப்பாகப் பெண்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை அவருடைய எளிமையான தோற்றமே விளக்கும்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் தம் அறையின் மாடியின்மேல் நின்றுகொண்டு, ''பக்தர்கள், பக்திமதிகளான என் குழந்தைகளே! எல்லாரும் வாருங்கள். ஆன்மீகச் செல்வத்தில் பங்குகொள்ள எல்லாரும் வாருங்கள்!'' என்று கூவி அழைத்தார். பக்தர்கள் வராவிட்டால் 'பக்தர்களைக் காணமல் ஒருநாள் வீணாகிவிட்டதே' என்று வருந்துவார். அன்று அவர் கூவி

யழைத்ததன் விளைவாகத்தான் இன்று இந்தியாவிலும், உலகமெங்கும், ஸ்ரீ ராமகிருஷ்ண மடங்களும் சாரதா மடங்களும் தோன்றியுள்ளன.

அன்னையார் எளிமையே உருவாக வந்தவர். அவரை வழிபடுவதற்குப் பெரிய தபஸ், பெரிய சாதனைகள் செய்ய வேண்டியதில்லை. ஓர் அரை மணிநேரம் அந்த அருள் நிறைந்த முகத்தை, திரு உருவத்தைப்பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். அந்த வதனத்திலிருந்து வரும் தேஜஸே நம் மனத்தில் உள்ள சிந்தனைகளையெல்லாம், ஆசைகளையெல்லாம் பறந்தோடச் செய்துவிடும்; நம் மனதைத் திருத்தி, அமைதி அளிக்கும்.

நாம் இந்த உலகில் பலவிதமான இயல்புகள் படைத்த மக்களோடு வாழவேண்டியிருக்கும். இவ்வுலகில் நல்லவர்களும் இருப்பார்கள்; கெட்டவர்களும் இருப்பார்கள். நல்லவர்களிடம் எப்படிப் பழகவேண்டும், கெட்டவர்களிடமிருந்து எப்படி ஒதுங்கிக் கொள்ளவேண்டும் என்பதை இம்மூவரின் வாழ்க்கை நமக்குக் காட்டுகிறது. அன்னையாருடைய தெய்வீகம் நிறைந்த வடிவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால், அந்தத் திருக்காட்சியே நாம் உலகுக்குச் செய்யவேண்டிய சேவைக்கான சக்தியை நமக்கு அளிக்கும். அன்னையாரின் கருவியாய் இருந்து நாம் செய்ய விரும்பும் செயல்களுக்கான சக்தியைத் தருவது அன்னையின் அருளாகும்.

அன்னையார் தாய்க்கெல்லாம் மேலான தாய்; பெற்ற தாயை விடவும் அதிகம் நம்மீது அன்பைப் பொழிவார். " தாயினும் சாலப்பரிந்து " நம்மைக் காப்பது அவருடைய அருள்தான். இன்று மாணவர்கள் மைக்ராஸ்கோப் (Microscope) வைத்துக்கொண்டு சோதனைகள் செய்கிறார்கள். ஆராய்ச்சி (Research) செய்கிறார்கள். ஆனால் அன்னையாரிடம் எந்த மைக்ராஸ்கோப்பும் இல்லை. அவர் பள்ளிக்கூடம் சென்று அறியாதவர். ஆனால் தமக்கு முன்பின் தெரியாத மகன் ஒருவன் தன்னைத் தேடிக்கொண்டு கல்கத்தாவிலிருந்து வருகிறான் என்று எப்படி அவருக்குத் தெரிந்தது? எந்த Television–அல்லது தூரதர்சனத்தில் அந்த மகன் களைத்துப் போய் வருவதைப் பார்த்தார்? இருட்டில் தடுமாறப் போகிறானே என்று அவனுடைய பாதைக்கு ஒளிதர விளக்கை வைத்துக்கொண்டு நிற்கச் செய்தது எது? குளிப்பதற்கு வெந்நீரும் உண்பதற்கு உணவும் தயாரித்து வைக்க அந்த உள்ளத்தைத் தூண்டியது எந்தச் சக்தி? அன்னையார் என்ற பெயருக்கு ஏற்றபடி உலகில் உள்ள உயிர்களையெல்லாம் தம் செல்வங்களாகப் பார்த்த தாயன்பு அல்லவா? "தாயிற்சிறந்த தொரு கோயிலுமில்லை" என்பார்கள். அந்தத் தாயினும் சிறந்த அற்புதத்தாய் இவர். ஆனால் அன்னையார் தம் மகனைத் தெரிந்துகொண்டதுபோல், புதல்வன் தன் தாயைத் தெரிந்து கொள்ளவில்லை. லாந்தரை ஏந்திக்கொண்டு வாசலில் நிற்கும் அந்த எளிய கிராமத்துப் பெண்மணி யாரோ என்று நினைத்துவிட்டான். அன்னையாரிடமே "நான் அன்னையாரைப் பார்க்க வேண்டும்" என்று கேட்கிறான். அவ்வளவு தூரம் தம் பெருமையை எல்லாம் தம் எளிமையில் மறைத்துக் கொள்கிறார் அன்னையார். நெடுந்தூரம் நடந்து வீங்கிப்போன கால்களில் வெந்நீரை ஊற்றித் தேய்த்து விட முன் வந்த அன்னையாரைத் திகைத்துப் போன பக்தன் தடுக்கிறான். ஆனால் அன்னையார் சொல்கிறார்: "மகனே! உன் தாய் உனக்கு இதைச் செய்ய மாட்டாளா? என்னை உன் தாயாக ஏற்றுக்கொள்ள மாட்டாயா?" அன்னையாரை வழிபாட்டுக்குரிய தேவதையாகத்தான் நினைக்க வேண்டும் என்பதன்று. தன் சொந்தத் தாயாக நினைத்து அன்பு செய்தாலும் போதுமானது. அப்படிச் செய்தால் பெற்ற தாயினும் பெரிய தாயாகிய அன்னையாரின் அருள் நம்மைக் காக்கும்.

அன்னையாரின் பெருமையைப்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்கிறார்: "என் மனம் நோகும்படி நடந்துகொண்டால் அந்தப் பாவத்திலிருந்து தப்பி விடலாம். அவர் (அன்னையார்) மனம் நோகும்படி நடந்தால் அதன் விளைவிலிருந்து காப்பாற்ற மும்மூர்த்திகளாலும் முடியாது."

இந்த மூவரின் வலிமை மிக்க நல்லெண்ணங்களும் தத்துவங்களும் கர்ஜனைகளும்தாம் இன்று இந்தக் கருத்தரங்குகளில் நம்மைக் கட்டி ஒன்று சேர்த்திருக்கின்றன. அவைதாம் வெவ்

வேறு இடங்களிலிருந்து வெவ்வேறு சூழலில் வாழ்கின்ற நம்மை இணைத்திருக்கின்றன.

சேவை செய்யும் துறவியர் சங்கங்கள் இந்துக்களுக்கும் இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த அமைப்பை முதலில் ஏற்படுத்தியவர் சுவாமி விவேகானந்தர் ஆவார். பெண்களும் துறவு வாழ்க்கையைமேற்கொண்டு இவ்வுலகுக்குச் சேவை செய்யலாம். இன்றைய சூழ்நிலையில் பெண்களின் துறவும்தொண்டும் அவசியம் என்று நமக்கு இம்மூவரும், குறிப்பாக அன்னையாரும் காட்டிக்கொடுத்திருக்கின்றார்கள்.

அன்னையார் வாழ்வில் நிகழ்ந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் பெண்கள் தம் வாழ்வை எப்படி அமைக்கவேண்டும் என்று காட்டுகிறது. ஒரு முறை அன்னையாரைக் காணவந்த சில பெண்கள் வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொண்டு வந்திருந்தனர். அதைப் பார்த்து மனம் நொந்த அன்னையார் ''அழுகிப் போகின்ற இந்தச் சரீரத்திற்கா இத்தனை அலங்காரம்!" என்று கேட்டார். தேகத்தை அலங்கரிப்பதிலேயே நேரத்தைச் செலவிடும் இன்றைய பெண்கள் இதைக் கவனிக்கவேண்டும்.

அன்னையாரின் அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்த பெண்ணொருத்தி, துடைப்பத்தைக் கவனமில்லாமல் கையாண்டதால் அதிலிருந்த குச்சிகளில் பல கீழே விழுந்தன. அதைக் கவனிக்காமல் அந்தப் பெண் சென்றபோது அன்னையார் அவளைக்கூப்பிட்டு விழுந்த குச்சிகளைப் பொறுக்கி எடுக்கச் சொன்னார். எந்தப்பொருளையும், அது எவ்வளவு சிறியதாயினும் அதற்குரிய மதிப்பைக் கொடுத்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று அந்தப் பெண்ணுக்கு எடுத்துச்சொன்னார்.

இன்று நாம் ஆடம்பரத்துக்காகப் பணத்தையும் நேரத்தையும் வீண் விரயம் செய்கிறோம். ஆனால் கஷ்டப்படுபவர்களைக் கவனிக்காமல் விடுகிறோம். அன்னையார் நஹபத்தில் இருந்தபோது அங்கு attached bathroom, mosaic எல்லாம் கிடையாது அத்தியாவசியமான வசதிகள் கூட இல்லாமல் வாழ்ந்து வந்தார். ஆனால் தம் நிலைமையை யாரிடமும் அவர் சொல்லவில்லை. நஹபத்தில் அன்னையார் வசித்து வருகிறார் என்பதே பலருக்குத் தெரியாமல் இருந்தது. வாழ்வின் பிற்பகுதியில் கவனிப்பாரில்லாமல் கஷ்டப்படும் முதியவர்களுக்கு இல்லங்கள் கட்டி வசதிகள் செய்துகொடுப்பது அன்னையாருக்குச் செய்யும் சேவையாகும்.

அன்னையார் கடைசியாகப் பேசிய வார்த்தை உலகுக்கு அவர் விடுத்த செய்தியாகும். ''உனக்கு மன அமைதி வேண்டுமென்றால் பிறர் குற்றம் காணாதே. எல்லாரையும் உனக்குச் சொந்தமாகக் கருது. கேட்டை மறந்து, நலனையே நினை'' இதைவிடப் பெரிய வேதாந்தம் வேறு வேண்டுமா?

"அன்னையாரின் பெருமை எல்லாருக்கும் இப்போது விளங்காது. நூறு ஆண்டுகளுக்குப் பிறகுதான் உலகம் அதை உணரும்'' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள்ளார். அங்ஙனமே அன்னையாரின் பெருமையை எல்லாரும் தெரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். சகோதரி நிவேதிதை தாம் பிறந்த நாட்டை விட்டுவிட்டு இந்தியாவைத் தாய்நாடாகக்கருதி சேவை செய்தார். இந்த நால்வரின் வாழ்க்கை நமக்குக் கூறும் செய்தி ஒன்றே. பக்தி, ஞானம், தியானம் இவற்றை எல்லாரும் பெருக்கவேண்டும். நாட்டில் பாமர மக்கள், பெண்கள் ஆகியோரின் முன்னேற்றத்திற்காகச் சேவை செய்ய வேண்டும் என்பதுதான் இவர்கள் வாழ்க்கை அளிக்கும் செய்திகளாகும். எனவே எல்லாரும் கூடியுள்ள இந்த நேரத்தில் மூவரின் வாழ்க்கைச் சிறப்பைப்பற்றியும், செய்தியைப்பற்றியும் விவாதம் செய்து என்ன சேவை செய்ய வேண்டும், எப்படி அதைச் செயலாக்கவேண்டும் என்று சேர்ந்து திட்டம் போட்டு அதன்படி நடப்போமாக. அன்னையாரின் அருள் நமக்குச் சக்தியளிப்பதாகுக.

ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ சாரதாதேவியார், ஸ்ரீ விவேகானந்தர் ஆகிய மூவரும் இன்றைய உலகத்துக்குச் சிறந்த வழிகாட்டிகளாக அமைந்துள்ளார்கள். அவர்கள் காட்டிய வழியை நாம் கடைப்பிடித்து அறிவிலும், அன்பிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்குவோமாக. மக்கள் சேவை இன்றைக்கு மிகவும் தேவைப்படுகிறது. ''நரசேவையே நாராயணசேவை" என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். மக்களுக்குச் செய்யும் சேவையை நாம் ஆத்ம சாதனையாகச் செய்துவரவேண்டும்.

குறிப்புகள்

திருச்செந்தூரில் கந்தர் சஷ்டி.

இவ்வாண்டு அக்டோபர் இருபத்து நான்காம் தேதியிலிருந்து, இருபத்து ஒன்பதாம் தேதி முடிய திருச்செந்தூரில் நடந்த கந்தர் சஷ்டி விழாவை முருக பக்தரும், அவருடைய நண்பரும் விமர்சனம் செய்கின்றனர். கந்தர் சஷ்டிக்கு வராதவர்களும் அவர்கள் விமர்சனத்தைப் படித்துப் பக்தியைப் பெருக்கிக்கொள்ளுங்கள்.

நண்பர்: நமஸ்காரம்! கோடி நமஸ்காரம்!

முருகபக்தர்: நண்பா! நமஸ்காரம். ஆறு நாட்கள் அனுபவித்த ஆனந்தம்தான் என்னே!

நண்பர்: பக்தரே! நீங்கள் அனுபவித்த ஆனந்தத்தில் எனக்குப் பங்கில்லையா?

முருகபக்தர்: நான் பெற்ற இன்பம் இவ் வையகம் பெறுவதாகுக! இதுதானே பக்தர்களுடைய மனப்பான்மை!

நண்பர்: நீங்கள் பெற்ற இன்பத்தை உங்களோடு இருந்து நான் அனுபவிக்கமுடியாவிட்டாலும் நீங்கள் அதைச் சொல்ல நான் கேட்டாவது அனுபவிக்கலாமல்லவா?

முருகபக்தர்: நான் கூறுகிறேன்; கேளும் ஆண்களும் பெண்களும், வண்டியிலும், பஸ்ஸிலும் படுக்கை பெட்டியுடன் வந்து இறங்கிக்கொண்டிருக்கிறார்கள். சிலர் கால்நடையாகவும் வந்து சேர்கிறார்கள். கடற்கரையோரத்தில் உயர்ந்து நிற்கும் கோபுரத்தைப் பார்த்துப் பக்தியால் வணங்குகின்றனர். அமைதியுடனும், பக்தியுடனும் அவர்கள் தங்களுக்கிடையில் நமஸ்காரம் தெரிவித்துக்கொண்டு "நீங்கள் இங்கேயே தங்கியிருக்கின்றீர்களா? உங்களுக்கு எந்த விடுதியில், எத்தனாவது அறை கொடுக்கப்பட்டிருக்கிறது? ஆறு நாட்களும் உபவாசம் இருக்கின்றீர்களா?" என்றெல்லாம் உரையாடிக்கொள்ளும் மக்கள் காட்சியை நண்பரே! மனக்கண்ணால் பாரும்!

நண்பர்: கழுத்தில் ருத்திராட்ச மாலை! மேனியில் திருநீறு! எளிய உடை! இன்பகரமான பேச்சு! இத்தகைய காட்சியை என் மனக் கண்ணால் பார்க்கிறேன்.

முருகபக்தர்: இருபத்து நான்காம் தேதி காலை வந்துவிட்டது! காலை மூன்று மணி. ஆலயத்துக்குள் முருகனுடைய பள்ளியெழுச்சிப் பாடல்கள் பாடுகின்றனர். மக்கள் கடல் நீராடி திருப்பள்ளியெழுச்சியை இன்பமாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். முருகன் சன்னிதிமுன் நமஸ்கார ஸ்தோத்திரம் சொல்லி வணக்கம் செய்கின்றனர். இவற்றையெல்லாம் மனக்கண்ணால் பாரும்.

நண்பர்: மனக்கண்ணால் அக்காட்சிகளைப் பார்க்கின்றேன். ஆனந்தம் அடைகின்றேன்.

முருக பக்தர்: இதோ! இவர்தாம் பெரிய செல்வந்தர்! இதோ இவர்தாம் பேரறிஞர்! இதோ! இவர்தாம் உயர்ந்த அதிகாரி! இதோ! இவர்தாம் எளிய கிராமவாசி!

நண்பர்: நீங்கள் சொல்லுகின்ற அனைவருடைய புறத்தோற்றங்களும் என் மனக் கண்ணில் ஒரேமாதிரியாகத்தான் தென்படுகின்றன. மேனியில் விபூதி! இடுப்பில் வேட்டி கட்டியிருக்கிறார்கள்! வேட்டியின் மேல் துண்டு கட்டியிருக்கிறார்கள். இவற்றைத் தவிர படாடோபமான ஆடைகளையோ, அணிகலன்களையோ நான் காணவில்லை. நான் எல்லாரிடமும் சமத்துவத்தையே காண்கின்றேன்.

முருக பக்தர்: ஆம்! எல்லாரும் முருக பக்தர்கள். கந்தர்சஷ்டியில் சமத்துவத்தைக் காண்கின்றபொழுது ஏற்படும் மகிழ்ச்சிதான் என்னே! அடுத்துப் பனை ஓலையில் படுத்துறங்கும் காட்சியைப் பார்! ராமன் வனவாசத்தின் பொழுதுதவக்கோலம்பூண்டு தரையில் ஆனந்தமாகப் படுத்து உறங்கியதுபோன்று திருச்செந்தூரில் முருகன் ஆலயத்தின் பிரகாரத்தில் படுத்துறங்கும் பக்தர்களின் காட்சியைப் பார்! உடல் உணர்வு பக்திக்கு இடைஞ்சல்.முருகன் சிந்தனையில் மூழ்கியிருக்க விரும்பிய பக்தர்கள் உடல் உணர்வை ஒழிப்பதற்காக முருகன் சன்னிதியில் பனை ஓலைப் பாயில் படுத்து உறங்கும் காட்சிதான் என்னே!

நண்பர்: பக்தரே! இவர்கள் உணவுக்கு என்ன செய்கிறார்கள்?

முருக பக்தர்: படுப்பதற்குக் கோயில் பிரகாரம் இடம்! உண்பதற்கு இறைவன் நாமம்! பருகுவதற்கு எலுமிச்சம்பழச்சாறு! குளிப்பதற்குச் சமுத்திரம்!கும்பிடுவதற்குக் குகன்!

கேட்பதற்கு 'ஓம் சரவணபவாய நமஹ' என்னும் முருகனுடைய நாமம்! யாகசாலையையும், முருகன் பவனிவரும் காட்சியையும் காணும் வாய்ப்புப்பெற்றுள்ள இவர்களுக்கு உணவும் வேண்டுமா? ஆறு நாட்களும் உணவை மறந்து முருகனுடைய நினைவில் ஆயிரக்கணக்கானவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இன்னும் ஆயிரக்கணக்கானவர் ஒருவேளை உணவு உண்டு தவத்தில் ஈடுபட்டு இருக்கின்றார்கள். மூன்று வேளை உணவுடன் ஒரு சிலர் நெறியான வாழ்வு வாழ்ந்து வருகின்றார்கள். அதோ! அங்கு ஓர் அறிவிப்பு! அதைக் கேட்டாயா?

நண்பர்: ஒரு மணிபர்ஸ் அலுவலகத்துக்கு வந்துள்ளது. அதில் விலாசம் இருக்கிறது. மணிபர்ஸைத் தொலைத்தவர் அவ்விலாசத்தைக் கூறிப் பெற்றுக்கொள்ளலாம் என்ற அறிவிப்பையா குறிப்பிடுகின்றீர்கள்!

முருக பக்தர்: ஆம்! அந்த அறிவிப்பைத் தான் குறிப்பிடுகின்றேன்!

நண்பர்: கலியுகத்தில் இஃது ஓர் அரிய அனுபவந்தான்! கண்ணெதிரே களவாடிக் கழுத்தை நெரித்துத்தள்ளும் இக்காலத்தில் கிடைத்த பொருளை உரியவரிடம் சேர்க்கும் இத்தகைய உன்னத மனப்பான்மை கலியுக வரதன் கோயிலிலல்லாது வேறு எங்குக்காண முடியும்! ஓம் சரவணபவாய நமஹ! என்ற நாம உச்சாரணை ஆத்மீக உணர்வைத் தட்டி யெழுப்புகிறது. இந்த ஒலி எங்குப் பார்த்தாலும் ஒலிக்கின்றதே! இத்தகைய தெய்வீக ஒலியைக் கேட்கும் வாய்ப்பு ஆறு நாட்களிலும் பக்தர்களுக்கு அமைந்திருந்ததா?

முருக பக்தர்: ஆத்ம போதத்தை உள்ளத்திலிருந்து தட்டியெழுப்பும் இந்த ஆன்மீக ஒலியைக் காலையில் ஆறு மணியிலிருந்து ஏழு மணி வரையிலும், மாலையில் நான்கு மணியிலிருந்து ஐந்து மணிவரையிலும் சஷ்டியின் ஆறு நாட்களிலும், கேட்டு ஆன்மீக வளர்ச்சி அடைந்தோம் என்பதில் ஐயம் ஏது?

நண்பர்: கோயிலின் வெளிப் பிரகாரம் முழுவதும் முருகன் மீது பஜனை பாடிக் கொண்டு பலர் ஆனந்தத் தாண்டவமாடுகிறார்கள். பிரகாரம் முழுவதும் அங்கப்பிரதட்சணம் செய்யும் அடியார்களைப் பார்க்கின்றேன்.

முருக பக்தர்: ஆம்! அவ்வரிய காட்சியை நன்கு பார். மனிதனிடத்திலிருக்கும் ஆணவமும் செருக்கும் என்ன பாடுபடுகிறது பார்! கௌராங்கதேவர் கூறிய உபதேசத்தின் கருத்து இவர்களைப் பார்த்தால் உனக்கு விளங்குகிறதல்லவா! கௌராங்கதேவர் "ஓடி வாருங்கள்! பகவான் நாமத்தைக் கூறுங்கள்! நீங்கள் விரும்பும் நாரியர்போகம் உங்களுக்கு வேண்டியவாறு கிடைக்கும்" என்றார். பூமி மீது பக்தர்கள் முருகன நாமத்தைச் சொல்லிக்கொண்டு புரண்டு ஆனந்தம் அடையும் இந்நிகழ்ச்சியைத்தான் கௌராங்கதேவர் குறிப்பிட்டார். சஷ்டியின் ஆறு நாட்களும் இவ்வரிய காட்சியைக் கண்டு களித்தோம்.

நண்பர்: இந்த நவீன யுகத்தில் மக்கள் அறிவை நம்பி வாழ்கிறார்கள். ஆனால் அவ்வறிவு அவர்களைத் துன்பத்திலிருந்து மீட்பதற்குப் பயன்படுவதில்லை. சஷ்டியில் அறிவு வளர்ச்சிக்கு இடமுண்டா?

முருக பக்தர்: மெய்யறிவு என்பதும், வாலறிவு என்பதும், இறைவனைப் பற்றிய அறிவாகும். தத்துவ ஆராய்ச்சியும், புராணக் கதைகளின் ஆராய்ச்சியும் மெய்யறிவை வளர்க்கப் பயன்படுகின்றன. காலையில் மூன்று மணி நேரமும், மாலையில் இரண்டு மணி நேரமும் சஷ்டியின் ஆறு நாட்களிலும் தத்துவ ஆராய்ச்சி சொற்பொழிவும், புராணக் கதைகளின் ஆராய்ச்சி சொற்பொழிவும் விவேகத்தை நன்கு வளர்க்கப் பயன்பட்டன. அறிவை வளர்க்கும் செவிக்குணவு சஷ்டியின் ஆறு நாட்களிலும் எங்களுக்கு வேண்டியவாறு கிடைத்தது. செவிக்கு வேண்டியவாறு உணவு கிடைத்தமையால் வயிற்றுக்கு உணவு தருவதில் சஷ்டிவிரதம் இருந்தவர்கள் கருத்துச் செலுத்தவில்லை.

நண்பர்: பகல் மணி பன்னிரண்டாகிறது. வேதகானமும், தமிழ் வேதம் ஓதுகின்ற ஓசையும் ஒலிக்கின்றன. மனதிற்கு இவ்வோசை எவ்வளவு ரம்மியமாக இருக்கின்றது! பொருள் விளங்காவிட்டாலும் இவ்வோசையைக் கேட்கும்பொழுது மனது அதீதத்துக்குப் போகின்றது

முருகபக்தர்: ஆம்! அதுதான் யாகசாலை பூஜையில் ஓதும் மந்திர ஓசையாகும். சஷ்டியின் ஆறு நாட்களும் இம்மந்திர ஓசை மனதில்

புகுந்து, அதிலுள்ள காமாதி தோஷங்களை யெல்லாம் அகற்றி வருகிறது. ராமனுடைய அம்பு, ராவணனுடைய உள்ளத்திலிருந்த காமத்தை அழித்தது போன்று பக்தருடைய உள்ளத்திலுள்ள காமங்களையெல்லாம் அழிக்கும் மந்திர ஓசை இதுதான்!

நண்பர்: நாதஸ்வர ஓசையும் பக்தர்களின் பஜனை ஓசையும் ஆலயத்திலிருந்து வருகின்றன. அங்கே போகலாமா?

முருகபக்தர்: ஆம்! அங்குதான் போக வேண்டும்! முருகனுடைய அழகைக் காணக் கூடியிருக்கும் பக்தர்கள் குழாத்தின் அழகைப் பார்! அழகே வடிவெடுத்தவன் முருகன் அல்லவா? அவன் அழகைக் காணக் கூடியிருக்கும் பக்தர் கூட்டத்தின் அழகைப் பார்!

நண்பர்: இங்கு நான் ஜலசமுத்திரம்தான் இருக்கிறதென்று எண்ணினேன்! இங்கு ஜன சமுத்திரமும் இருப்பதை இப்பொழுது காண்கின்றேன். அலைகடல் ஓரத்தில் வீற்றிருக்கும் அன்பான ஷண்முகன் சஷ்டியில் அன்பர்களின் அன்பு சமுத்திரத்திலும் வீற்றிருக்கிறான் என்பதையறிகிறேன்.

முருகபக்தர்: சஷ்டியின் ஆறு நாட்களும் இவ்வரிய காட்சியைக் காணலாம். முருகா! வெற்றிவேல் முருகா! முருகனுக்கு அரோகரா! என்று இலட்சக்கணக்கான மக்கள் ஒலிக்கும் ஒலியைக் கேள்! ஆன்மீக உணர்வில் தோன்றிய இவ்வொலி உலகெங்கும் பரந்து உலகத்திலுள்ள தீய சக்திகளை ஒழிக்கப் பயன்படுகிறது. நன்பகலில் சஷ்டியின் ஆறு நாட்களிலும் இலட்சக்கணக்கான மக்கள் இவ்வொலி செய்வதைக் கேட்டுக் கேட்டு என் உள்ளத்தைப் புனிதமாக்கினேன்.

நண்பர்: சஷ்டி விரதத்தின் நோக்கமென்ன?

முருகபக்தர்: ஆறு நாட்கள் உபவாசமிருந்து ஆறாவது நாள் முருகன் சூரனைச் சம்ஹாரம் செய்கின்ற காட்சியைப்பார்த்தபின் விரதத்தை முடிப்பார்கள். சூரன் என்னும் அரக்கன் மக்களுக்குக் கொடுமை செய்தான். அவ்வரக்கனை ஒழிக்கச் சிவபெருமான் முருகக் கடவுளைத் தோற்றுவித்தார். சஷ்டியின் ஆறு நாட்களிலும் விரதமிருப்பவர்கள் முக்கரணங்களாகிய மனம், வாக்கு, காயத்தை தவத்தில் ஈடுபடுத்தி அருள் உணர்வை வளர்க்கின்றார்கள்.

ஆறாவது நாளாகிய சஷ்டியன்று முருகன் சூரனைச்சம்ஹாரம் செய்ததுபோன்று ஆறுநாட்கள் விரதமிருந்து அருளுணர்வைப்பெற்று அவ்வருள்சக்தியால் தங்களிடமுள்ள அசுர இயல்புகளை அழிப்பதுதான் இச்சஷ்டியின் நோக்கமாகும். கட்டுப்பாடான வாழ்வு ஓரளவு இச்சஷ்டியில் கடைப்பிடிக்கப்படுகிறது. மக்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்பதில் கோவில் நிர்வாகிகளும், வழிபாட்டு அர்ச்சகர்களும் கருத்துச் செலுத்துவார்களானால் இச்சஷ்டியின் மூலமாக நாட்டுக்குப் பெரும் நலன் விளையும். நாட்டிலுள்ள அசுர சக்திகளை அழிப்பதற்கு இச்சஷ்டி விரதம் இருப்பவர்கள் தயாராவார்கள். தவத்தின் மூலமாகப் பெறுகின்ற சக்திதான் கேட்டை அழிப்பதற்குப் பயன்படும். பஞ்சபாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் செய்தனர். அவ்வனவாச காலத்தில் அவர்கள் தவ வாழ்வில் ஈடுபட்டிருந்தார்கள். தவத்தின் மூலமாக அவர்கள் தங்களைப் பலப்படுத்தி வந்தார்கள். அவர்கள் செய்ததற்கு மாறாகத் துரியோதனன் ஆட்சிபீடத்தில் அமர்ந்து சேனை பலத்தைப் பெருக்கி வந்தான். ஆனால் இறுதியில் சேனை பலத்தைப் பெருக்கிய கௌரவர்கள் பூண்டோடு ஒழிந்தார்கள். தவத்தின் மூலம் தங்களைப் பலப்படுத்திய பாண்டவர்கள் இறுதியில் வெற்றியடைந்தார்கள். விசுவாமித்திரருடைய சேனைபலம், வசிஷ்டருடைய தபோபலத்துக்கு முன் தோல்வியடைந்தது. எனவே தபோபலம்தான் அசுர பலத்தை அழிக்கும். அஃதே போன்று நம்மைத் தவத்தின் மூலம் பலப்படுத்தினால்தான் நம்மிடமுள்ள கேட்டை நாம் அழிக்க முடியும். சஷ்டியில் தவம் செய்ய திருச்செந்தூருக்கு வரும் மக்களுக்குத் தவ வாழ்வில் ஈடுபடுபவதற்குத் தக்க வசதிகளையும், சூழ்நிலையையும் அமைத்துத் தருவதில் கோயில் நிர்வாகிகளும், அதிகாரிகளும், அர்ச்சகர்களும் செயல்பட்டு வரவேண்டும். பொருள் திரட்டுவதையே நோக்கமாகக் கொள்ளாது பக்தியைப் பரப்புவதிலும் மக்களை நல்வழிப்படுத்துவதிலும் சஷ்டியிலுள்ள நிகழ்ச்சிகள் அமையவேண்டுமென்ற நோக்கத்துடன் கோயில் நிர்வாகிகளும், அதிகாரிகளும், அர்ச்சகர்களும் செயல்படவேண்டுமென்று முருகப்

முருகனைப் பிரார்த்தித்துக்கொள்வோமாக!

நண்பர்: ஆம்! பக்தரே! நானும் அதைத்தான் விரும்புகின்றேன். திருக்கூட்டத்தைப் பெருக்குவதிலும், பக்தியை வளர்ப்பதிலும், தீமையை ஒழிப்பதிலும் நான் உம்மோடு சேர்ந்து செயல்படுவேன். முருகன் நமக்கு அருள்புரிவாராக!

திருவாசக யக்ஞம்

திருச்செந்தூரில் கந்தர் சஷ்டியின் பொழுது சத்சங்கத்தில் ஈடுபட்டுள்ள அன்பர்களும், தாய்மார்களும் திருவாசக யக்ஞம் ஒன்று நிகழ்த்தினர்கள். இன்றைக்கு இந்த யக்ஞம் நாட்டுக்கு மிகவும் தேவைப்படுகின்றது. இல்லறத்தார்கள் ஐந்துவிதமான யக்ஞங்கள் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பூத யக்ஞம், பித்ரு யக்ஞம், நரயக்ஞம், ரிஷி யக்ஞம் தேவ யக்ஞம் என்பன அவ் ஐந்து யக்ஞங்களாகும். ரிஷி யக்ஞம் என்பது அருளாளர்கள் நூல்களை ஓதி வருவதாகும். திருவாசகம் மாணிக்க வாசக சுவாமிகளால் இயற்றப்பட்ட நூலாகும். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது திருவாசகத்தின் பெருமையைக் கூறுகிறது. சிவபெருமான் அருள் பெற்றுத் திருவாசகத்தை மாணிக்க வாசகர் பாடியுள்ளார். எனவே திருவாசகத்தைப் பாராயணம் பண்ணுவது ஒரு சிறந்த ரிஷி யக்ஞமாகும்.

இன்றைக்குப் பலருக்குத் திருவாசகம், தேவாரம், திருவருட்பா, தாயுமானவர் பாடல், நாலாயிரத் திவ்விய பிரபந்தம் பகவத் கீதை போன்ற ஆன்மீகத் தத்துவ நூல்கள் இருக்கின்றன என்பதே தெரியாது. சத்சங்கத்தைச் சேர்ந்தவர்கள், ஆன்மீக வாழ்வில் ஈடுபட்டவர்கள் இந்நூல்களை ஓதுகின்ற யக்ஞத்தைத் திருச்செந்தூரில் அன்பர்களும், தாய்மார்களும் ஒன்று கூடிச் செய்தது போன்று செய்வார்களானல் அருள் இயக்கம் நாட்டில் நன்கு வலுப்பெற்று வரும்.

சில அன்பர்களும் தாய்மார்களும் திருவாசகம் ஓதுவதை ஒன்று கூடிச் செய்து வருகிறார்கள். இது வரையிலும் அவர்கள் எண்பத்தைந்து தடவை திருவாசகம் முழுவதையும் ஓதியுள்ளார்கள். திருச்செந்தூரில் என்பத்தாருவது தடவையாகத் திருவாசகம் முழுவதையும் ஓதுவதை யக்ஞமாகச் செய்தார்கள். திருவாசகம் ஓதுவதற்கு ஒருநாள் நியமித்து அன்று அனைவரும் ஓர் இடத்தில் கூடுகின்றனர். எட்டு மணி நேரத்தில் அன்று அவர்கள் திருவாசகம் முழுவதையும் ஓதி முடித்துவிடுகின்றனர். இசையுடனும், சொல் தெளிவுடனும் அவர்கள் ஓதுவது கேட்பதற்குப் பரமானந்தமாக இருக்கிறது. அவர்களுள் சிலர் திருவாசகம் முழுவதையும் மனனம் செய்துள்ளார்கள். திரும்பத் திரும்ப அவர்கள் அதை ஓதும்பொழுது அவர்களுக்கு அப்பாடல்களை மனனம் செய்வது தானகவே அமைந்துவிடுகிறது. மனதில் ஏதேதோ விஷயங்கள் படிவதற்குப் பதிலாகத் திருவாசகப் பாடல்கள் அவர்கள் மனதில் நன்கு பதிந்து இருக்கின்றன. திருவாசகம் ஓதுகின்றவர்கள் பெறுகின்ற இப்பேறு பெறுவதற்கரிய பேறு ஆகும். இத்தகைய கூட்டம் நாட்டில் பெருகி வந்தால் நாட்டிலுள்ள கேடுகள் தாமாகவே மறைந்து போய்விடும்.

திருவாசக ஜபயக்ஞம் நிகழ்வதுபோன்று கீதை, திருவருட்பா, தேவாரம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், தாயுமானவர் பாடல் போன்ற நூல்களுள் ஏதாவது ஒன்றை யக்ஞத்துக்காக எடுத்துக்கொள்ளலாம். வள்ளலார் சன்மார்க்கச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் திருவருட்பா முழுவதையும் ஓதுகின்ற செயலைப் பலர்கூடி யக்ஞமாகச் செய்து வருவார்களானல் அது சிறந்த பலனைக்கொடுக்கும். யாரோ ஒருவர் இந்நூல்களுடைய பாடல்களைப் பற்றிச் சொற்பொழிவு செய்வதைக் கேட்பதைவிட இந்நூல்கள் முழுவதையும் ஓதுகின்ற செயல்தான் மனதைப் பண்படுத்தும். தாயுமானவர் ஓர் இடத்தில் 'வாசா கைங்கர்யமன்றி ஒரு சாதனம் மனேவாயு நிற்கும் வண்ணம் வாலாயமாகவும் பழகி அறியேன்' என்று கூறியுள்ளார். உபந்யாசத்தை வெறுமனே கேட்பது வாசாகைங்கர்யத்திற்கு நிகராகும். அருள் நூல் ஒன்றை முழுவதையும் பலர்கூடிப் பக்தி சிரத்தையுடன் ஓதி முடிப்பது மனம் வாயு நிற்பதற்குச் சாதனையாகும். மனதைப் பண்படுத்துவதுதான் சன்மார்க்க சங்கத்தின் நோக்கமாகும். சண்டை சச்சரவுகளையும், வீண் வாதங்களையும் வளர்ப்பது சன்மார்க்க

சங்கத்தின் நோக்கமன்று.

நன்னெறியில் செல்வதற்கு அமைந்துள்ள சங்கங்கள் யாவும் அந்தந்தச் சங்கங்களுக்கு விருப்பமான அருள் நூலைப் பாராயணம் செய்கின்ற செயலை உடனடியாகத் துவங்குவது சங்கத்தினர் செய்யும் சிறந்த சாதனையாகும். திருவாசகத்தைப் பாராயணம் செய்யும் கூட்டத்தினர் நமக்கு நல்வழி ஒன்றைக் காட்டித் தந்துள்ளார்கள். அந்த நல்வழியை நாமும் பின்பற்றி நம்மைப் பண்படுத்திக்கொள்வதோடு நாட்டில் அருள் சக்தியை வலுப்படுத்தி வருகின்ற செயலையும் செய்வோமாக.

நலப்பணிகளில் ஸ்வயம் சேவகர்கள்

ஆர். எஸ். எஸ். தேசபக்தியை வளர்க்கிறது. தேசபக்தி வளர்வதால் தேசத்தாரின் நலனில் ஈடுபாடு அதிகரிக்கிறது. இதன் காரணமாகப் பாரத நாடு முழுவதிலும் ஆர். எஸ். எஸ். ஸ்வயம் சேவகர்கள் 4000க்கும் அதிகமான நலப்பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்; வெற்றிகரமாக நடத்தி வருகிறார்கள். சமுதாயத்தில் தொண்டுபுரியும் எண்ணத்தை நிறையப்பேரிடம் ஏற்படுத்தி வருகிறார்கள். அத்தகைய சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து பயிற்சி பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :

R. S. S. காரியாலயம்
I. M. V. நாயுடு தெரு
பஞ்சவடி—சேத்துப்பட்டு
சென்னை-600 031

செய்திகள்

நிகழ்பவை

18-11-84 ஞாயிற்றுக்கிழமை யன்று தென் ஆற்காடு ஜில்லா அவலூர்ப்பேட்டையிலும், *19-11-84* திங்கட்கிழமை யன்று தென் ஆற்காடு ஜில்லா ஆவணிப்பூரிலும் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் ஒருநாள் அந்தர் யோகங்கள் நடாத்துவார்கள்.

திரு S. விசுவநாதன் அவர்கள் சத் கைங்கர்ய நிதியிலிருந்து ஆண்டுதோறும் பழனியில் ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமிக்கு அபிஷேக ஆராதனையும், பக்தர்களுக்குச் சமாராதனையும் தபோவனம் செய்து வருகின்றது. இவ்வாண்டு நவம்பர் மாதம் 24ஆம் தேதி சனிக்கிழமை யன்று திருப்பராய்த்துறை ஸ்ரீ விவேகானந்த குருகுலப்பள்ளி எட்டாம் வகுப்பு மாணவர்களையும், தபோவனம் நடத்தும் திருச்சி கைலாசபுரத்திலுள்ள பாய்லர் பிளாண்ட் பெண்கள் உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு மாணவிகளையும், ஆசிரியைகளையும், திருவேடகம் விவேகானந்த மேல் நிலைப்பள்ளி மாணவர்களையும் பழனிக்கு அழைத்துச்சென்று ஸ்ரீ தண்டாயுதபாணி சந்நிதிமுன் ஐக்கிய வழிபாடுசெய்ய ஏற்பாடாகியுள்ளது. அன்று உச்சிக்காலப் பூஜைக்குப் பின் பழனி அடிவாரத்திலுள்ள சங்கரன்டாம் பாளையம் பட்டக்காரர் மடத்தில் பக்தர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படும். அன்று நிகழும் ஐக்கிய வழிபாட்டிலும், சமாராதனையிலும் கலந்துகொள்ளுமாறு அன்பர்களும், தாய்மார்களும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள். அன்று காலை 9 மணிக்குக் கந்தர் அனுபூதி ஓதிக்கொண்டு மாணவர்களும், மாணவிகளும் மலைமீது ஏறுவார்கள். பகல் 10-30 மணியிலிருந்து 11-30 மணிவரை பழனியாண்டவர் சந்நிதியில் ஐக்கிய வழிபாடு நிகழும்.

டிசம்பர் மாதம் 6ஆம் தேதி வியாழக்கிழமை திருவண்ணாமலை கார்த்திகை தீபமாகும். அன்று திருவண்ணாமலையில் காலை 6-00 மணிக்குப் பரணி தீபம்ஏற்றியானபிறகு திருவண்ணாமலைக் கோவில்கீழ்க்கோபுரத்திலிருந்துதிருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவன சந்நியாசிகள் நாமபஜனையுடன் கிரிப் பிரதட்சணம் செய்வார்கள். வழியில் வசதியான இடத்தில் சிறு அந்தர்யோக நிகழ்ச்சியும் நிகழும். அன்பர்களும், தாய்மார்களும் கிரிப்பிரதட்சணத்திலும், அந்தர்யோக நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளலாம்.

டிசம்பர் மாதம் 14ஆம்தேதி வெள்ளிக்கிழமை யன்று ஸ்ரீ சாரதாதேவியார் ஜயந்தியை முன்விட்டு ஸ்ரீ விவேகானந்த வித்தியாவனக் குருகுல மாணவர்கள் இருபத்துநான்கு மணி நேரம் அகண்டநாம பஜனையும், நண்பகல் ஒரு மணி நேரம் ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

திருவாசகம் பிரசார விலை	ரூ. 23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு ,,	— 21 00
மஹாபாரதம் ,,	— 8-00
இராமாயணம் ,,	— 7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் ,,	— 6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி ,,	— 6-50
தினசரி தியானம் ,,	— 4-50
ஞானயோக விளக்கம்	— 15-00
ராஜயோக விளக்கம்	— 12-00
கர்மயோக விளக்கம்	— 10-00
பக்தியோக விளக்கம்	— 9-00
விவேகானந்த உபநிஷதம்	— 7-00
பரமஹம்சரின் பெருமை	— 6-00
கடவுளின் வடிவங்கள்	— 6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	— 6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1	— 5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2	— 5-50
சகோதரி நிவேதிதை	— 3-75
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	— 3-50
ஸ்ரீ சாரதாதேவியாரது சரிதம்	— 3-00
அனுஷ்டான வேதாந்தம்	— 3-00
எதிர்கால இந்தியா	— 3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	— 3-00
பஜனைப்பாடல்கள்	— 3-00
தாயுமானவர் இயற்றிய	
கருணாகரக் கடவுள் விரிவுரை	— 3-50
பரிபூரணானந்தம் ,,	— 3-00
சின்மயானந்த குரு ,,	— 3-00
ஆனந்தமானபரம் ,,	— 3-00
சுகவாரி ,,	— 3-00
மௌனகுரு வணக்கம் ,,	— 3-00
எங்கும் நிறைகின்றபொருள் ,,	— 2-50
மலைவளர் காதலி ,,	— 1-50
பரசிவ வணக்கம் ,,	— 1-00
கண்ணன் என்னும் கடவுள்	— 2-50
அறம் வளர்த்த நம்பி	— 2-50
சந்நியாசி	— 2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்)	— 2-50
ஹரிச்சந்திரன் ,,	— 2-00
தவப்புதல்வர்கள் ,,	— 2-00
பாதுகா பட்டாபிஷேகம் ,,	— 1-75
விபீஷணன் சரணாகதி ,,	— 1-50
பரமஹம்சர் பாமாலை	— 1-50
காயத்ரீ	— 1-50
நன்மக்களைப் பெறுதல்	— 1-50
மாணக்கன்	— 1-25
செத்தவர்கள் நம்மோடுபேசுகிறார்களா?	— 1-25
சைவன் யார்?	— 1-25
*ஆலய வழிபாடு	— 1-25
*ஆத்ம சக்தி	— 1-25
*மனிதனது நிஜசொரூபம்	— 1-25

*சிவதத்துவம்	— 1-25
இறைவணக்கம்	— 1-00
குழந்தைகளின் களிக்கூடம்	— 1-00
இராவண தத்துவம்	— 1-00
வாலி மோட்சம் (நாடகம்)	— 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்)	— 1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்)	— 1-00
மார்க்கண்டேயன் (நாடகம்)	— 1-00
பிரஹ்லாதன் (நாடகம்)	— 1-00
தபோபலன் (நாடகம்)	— 1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம்	— 1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும்	— 1-00
நோய்க்கு இடம் கொடேல்	— 1-00
*சக்தி தத்துவம்	— 0-90
*சூரியநாராயணன்	— 0-70
தெய்வீக மகிமைகள்	— 0-75
*முருகக்கடவுள்	— 0-75
வர்ணாச்ரம தர்மம்	— 0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	— 0-60
*கணபதி	— 0-60
விஷ்ணு தத்துவம்	— 0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?	0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்).	—10-00
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	— 0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை	— 0-30
கந்தர் அநுபூதி	— 0-25
The Bhagavd Gita (12th Imp.)	—30-00
Sri Lalithambiha Sahasranama Stotram	15-00
The Indian National Education	—10-00
Tirukkural (with plastic cover)	— 9 00
Ramakrishna lives Vedanda	— 8-00
Mahaveer Sri Hanuman	— 7-75
Sri Bhagavad Gita (Small Size)	— 6-00
Man Making Message	— 7-00
Ramayana (with plastic cover)	— 7-00
Mahabharata ,,	— 6-00
Daily Divine Digest (DELUXE)	— 6-00
Daily Divine Digest (Ordinary)	— 4-00
Sri Krishna–The Manifest Divinity	— 6-00
Facets of Brahman of The Hindu Gods	— 5-00
Sri Vishnu Sahasranama Stotram	— 3-50
Thus Speaks Tayumana Swamigal	— 3-50
*Introducing The Gita	— 2-00
Holy Bible—In the Light of Vedanda	— 1-50
Reminiscences of Master Mahashaya	— 1-50
The Nursery School	— 1-50
The Garland of Paraaparam	— 1-50
*Key to Higher Life	— 1-25
*The Student	— 1-25
The Teacher	— 1-00
The School	— 1-00

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.